விலை : 20.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 ஆடி 28 ஞாயிற்றுக்கிழமை (13.08.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 237

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(C-9305)

# ஜனவரியில் அரசிலிருந்து விலகுவோம்
# மைத்திரியிடம் சொன்னார் ரணில்




(கொழும்பு) ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கட்சியினருக்கு நடக்கும் அநீதிகள் இதே விதமாக தொடர்ந்தால், எதிர்வரும் ஜனவரி மாதம் அரசாங்கத்தில் இருந்து விலக நேரிடும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் நேரடியாக கூறியுள்ளார். (15ஆம் பக்கம் பார்க்க)

## வாகன விபத்துகளால் 1,270 பேர் மரணம்

(கொழும்பு)
2017 ஆம் ஆண்டின் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் மே மாதம் 31 ஆம் திகதி வரையான ஐந்து மாத காலப்பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்துகளில் சிக்கி ஆயிரத்து இருநூற்று எழுபது பேர் பலியாகியுள்ளதாக போக்கு வரத்து பொலிஸ் பிரிவு தெரிவித்துள்ளது. 15☛

## சுஷ்மாவுடன் சந்திப்பு

(கொழும்பு)
வெளிநாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் வசந்த சேனாநாயக்கவுக்கும், இந்திய வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் சுஷ்மா சுவராஜுக்கும் இடையில் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. 15☛

## ராஜிதவுக்கு எதிராக மகிந்த வழக்கு

(கொழும்பு)
கடந்த காலங்களில் அமைச்சர் ராஜித சேனாரத்ன தம்மீது சரமாரியாக அவதூறு பிரசாரம் செய்ததால் அவருக்கு எதிராக மிகப்பெரிய மானநஷ்ட வழக்கு தாக்கல் செய்யவுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரி 15☛

## 20ஆவது திருத்தச்சட்டத்தை கூட்டமைப்பு ஆதரிக்காது
### — சுமந்திரன்



(கொழும்பு)
அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தச்சட்ட வரைபின் தற்போதைய வடிவத்துக்கு எந்தவொரு சூழ்நிலையிலும் 15☛

## மகிந்த புலிகளுடன் சமாதானமே பேசினார் யுத்தத்தை நடத்தியது நாமே - சம்பிக்க

(கொழும்பு)
ஒற்றையாட்சி என்ற பெயரில் தமிழருக்கு சமஷ்டியை வழங்கி அதனூடாக நாட்டை இரண்டாக பிரிப்பதற்கு தேசிய அரசாங்கத்திலுள்ள சிலர் சதி செய்வதாக மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.



இந்த விடயமானது, இரண்டு பிரதான கட்சிகளுக்கும் மக்கள் வழங்கிய ஆணையை மீறும் செயலாகும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில், ஐக்கிய தேசியக் கட்சி 15☛

## எஸ்.ரி.எப். மீது துப்பாக்கிப் பிரயோகம்

(நீர்கொழும்பு)
நீர்கொழும்பில் வானில் வந்த இனந்தெரியாத குழுவினருக்கும் விசேட அதிரடிப்படையினருக்கும் இடையில் கடும் துப்பாக்கி பிரயோகம் இடம்பெற்றுள்ளது.
குறித்த சம்பவத்தில் இருவர் காயமடைந்துள்ளதாகவும், எவ்வித உயிரிழப்புக்களும் 15☛

## வழக்குகளை துரிதப்படுத்தி எவராயினும் கைது செய்க!
### பிரதமர் ரணில் அதிரடி

(கொழும்பு)
பாரதூரமான குற்றச் செயல்கள் சம்பந்தமாக வழக்குகளை துரிதப்படுத்தி, அவற்றுடன் தொடர்புடையவர்களை கைது செய்யுமாறு பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஆலோசனை வழங்கியுள்ளார்.
இந்த நடவடிக்கைகளில் போது தடையேற்படுத்துவோர் யாராக இருந்தாலும் அது குறித்து 15☛

## நேர்மையான அரசியல்வாதிகளை உருவாக்குவது இலகு அல்ல!
### — ஜனாதிபதி

(கொழும்பு)
மேலிருந்து கீழ் வரை மோசடிகள், களவு மற்றும் ஊழல்கள் நிறைந்திருந்த இந்த நாட்டின் அரசியல் கலாசாரத்தை ஒரேயடியாக மாற்றிவிட முடியாது என்ற போதும் நேர்மையை செயற்படும். நாட்டை நேசிக்கும் அரசியல் வாதிகளை உருவாக்கும் கஷ்டமான பணிக்காக தற்போதைய அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளதாக ஜனாதிபதி தெரிவித்தார்.
எத்தகைய குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டபோதும் அந்த சவாலை வெற்றிகொண்டு மக்கள் எதிர்பார்க்கும் தூய அரசி 16☛

## வடக்கில் அமைதியின்மை ஏற்படுத்த பலர் முயற்சி
### சஜித் பிரேமதாச குற்றச்சாட்டு



(கொழும்பு)
வடக்கில் அமைதியான சூழ்நிலை நிலவுவதை விரும்பாத சிலர் வடக்கில் மீண்டும் ஒரு 15☛

## டெனிஸ்வரனை பதவி விலக ரெலோ வலியுறுத்தல்!

(வவுனியா)
வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனிஸ்வரனை அமைச்சுப் பதவியிலிருந்து விலகுமாறு ரெலோ இயக்கத்தின் தலைமைக் குழு கோரிக்கை விடுத்துள்ளது.
ரெலோ இயக்கத்தின் முக்கிய சந்திபொன்று நேற்று சனிக்கிழமை வவுனியாவில் நடைபெற்றது.
குறித்த சந்திப்பின் பின்னர் நடைபெற்ற 15☛

புதிய சேவை அறிமுகம்
★ ★ ★ பொதிகள் சேவை ★ ★ ★
Door to Door Service
11kg க்கு மேல் 01kg க்கான கட்டணம்
ஜெர்மன் Rs 650/-
பிரான்ஸ் Rs 750/-
Parcel.Lk
021 2224338 / 021 4925024
024 4930200
(C-9321)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சியில் சட்டவிரோத மணல் அகழ்வு; 15 ஹன்டர்கள் பறிமுதல்; பொலிஸார் அதிரடி

(கரணவாய்)

வடமராட்சி பகுதியில் சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்டு வந்த 15 ஹன்டர் வாகனங்களை தாம் பறிமுதல் செய்துள்ளதாக பொலிஸ் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வடமராட்சியில் பல காலமாக சட்டவிரோத மணல் அகழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது. இதனால் பொதுமக்களிற்கு பெரும் இடையூறுகள் ஏற்படுத்தப்பட்டு வந்துள்ளதுடன் போக்குவரத்து செய்ய முடியாத சூழ்நிலையும் காணப்பட்டது.

இதனைவிட புலோலி முறாவில் பகுதியில் சட்டவிரோத மணல் ஏற்றி வந்த உழவு இயந்திரம் மோதியதில் இரண்டு வருடத்திற்கு முன்னர் அப்பகுதியைச் சேர்ந்த ஆண் ஒருவர் பலியானார்.

மேலும் முள்ளிப் பகுதியில் சட்ட விரோத மணல் ஏற்றி வந்த ஹன்டர் வாகனம் மோதியதில் வரணிப் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்பிக்கும் ஆசிரியரும் படுகாயமடைந்தார்.

இவைகள் எல்லாம் நடைபெற்ற போதும் சட்ட விரோத மணல் அகழ்வில் ஈடுபட்டோரை பொலிஸாரால் கட்டுப்படுத்த முடியவில்லை.

ஆனால் கடந்த மாதம் குடத்தனைப் பகுதியில் சட்டவிரோத மணல் ஏற்றி வந்த ஹன்டர் வாகனம் மீது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இளைஞர் ஒருவர் பலியானார்.

இதனையடுத்து பொலிஸாரின் செயற்பாடுகள் பொலிஸ் நிலையத்தில் மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் காணப்பட்டது.

இதனைச் சாதகமாகப் பயன்படுத்திய மணல் கடத்தல்காரர்கள் தொடர்ச்சியாக அளவு கணக்கு இல்லாமல் மணலினை ஏற்றிவந்தனர். அவ்வாறு ஏற்றியோர் பொது மக்களிற்கு இடையூறு விளைவித்தும் வீதியால் செல்லும் வாகனங்களையும் மறித்துவிட்டு தமது காரியத்தை நிறைவேற்றி வந்தனர்.

ஆனால் இது தொடர்பில் பொலிஸார் கரிசனை செலுத்தவில்லை என பொதுமக்கள் குற்றம்சாட்டி வந்த நிலையிலும்பொலிஸார் மௌனம் காத்து வந்தனர்.

ஆனால் பொலிஸார் மௌனம் காத்து வந்தார்களே தவிர தமது புலனாய்வு தகவல்களை துல்லியமான முறையில் திரட்டியிருந்தனர். அதாவது சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்டோர் அதன் வாகன இலக்கம் என்பவற்றை பொலிஸ் புலனாய்வுத்துறை பெற்றிருந்தது.

உரிய தரப்பிடமிருந்து அனுமதிக்காகக் காத்திருந்த பொலிஸார் தற்போது அனுமதி கிடைத்ததும் சட்டவிரோத மணல் அகழ்வினை மேற்கொண்ட வாகனங்களை பறிமுதல் செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

பருத்தித்துறை பொலிஸாரினால் 12 ஹன்டர் வாகனங்களும், ஒரு உழவு இயந்திரமும், இரண்டு பட்டா ரக வாகனமும் பறிமுதல் செய்யப்பட்டது. நெல்லியடிப் பொலிஸாரினால் மூன்று ஹன்டர் வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இதனுடன் தொடர்புடைய மேலும் சில வாகனங்கள் அடுத்துவரும் சில தினங்களில் பறிமுதல் செய்யப்படும் என பொலிஸ் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன. (மு-60)

# உ/த பரீட்சை மதிப்பீடு மூன்று கட்டங்களில்

(கொழும்பு)

இம்முறை உயர்தரப் பரீட்சை மதிப்பீட்டு பணிகள் மூன்று கட்டங்களின் கீழ் நடைபெறும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

முதற் கட்டமாக எதிர்வரும் செப்டம்பர் மாதம் 7 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை மதிப்பீட்டு பணிகள் இடம்பெறவுள்ளன.

இரண்டாம் கட்டப் பணிகள் செப்டம்பர் 13 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரையும், மூன்றாம் கட்ட மதிப்பீட்டுப் பணிகள் செப்டம்பர் மாதம் 18 ஆம் திகதி முதல் 29 ஆம் திகதி வரையிலும் நடைபெறவுள்ளன.

மேலும் இந்த மதிப்பீட்டுப் பணிகள் 31 மத்திய நிலையங்களில் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் மதிப்பீட்டுப் பணிகள் இம்மாதம் 31 ஆம் திகதி முதல் அடுத்த மாதம் 5 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளன. (மு-11)

# வெளிநாட்டு நிறுவனம் ஒன்றால் பூநகரி வயல்கள் உவரடைகின்றன!

## அமைச்சர் அனந்தி குற்றச்சாட்டு

(கிளிநொச்சி)

பூநகரி - பொன்னாவெளி விநாயகர் ஆலயத்துக்கு அருகில் சீமெந்து தொழிற்சாலை நிறுவனம் ஒன்று மேற்கொண்டு வரும் ஆய்வுகளால் வயல் நிலங்கள் உவரடைவதாக வடமாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கடும் வரீட்சி நிலவிவரும் நிலையில், இவ்வாறான செயற்பாடு காரணமாக மக்கள் மேலும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

பொன்னவெளி விநாயகர் ஆலயத்துக்கு அருகில் வெளிநாட்டு நிறுவனம் ஒன்று சீமெந்து தொழிற்சாலையை நிறுவுவதற்கு ஆய்வுகளை மேற்கொண்டு வருவதாக தெரிவித்த அவர்,

அந்த ஆய்வுகளுக்காக நிலங்களில் துளையிட்டு பாரிய இயந்திரங்களைப் பொருத்தி நீரை இறைப்பதாகவும், அவ்வாறு இறைக்கப்படும் உவர் நீர் அப்பகுதி வயல் நிலங்களில் பாய்ச்சப்படுகிறது.

இதனால் வயல் நிலங்கள் உவராக மாறக்கூடிய சாத்தியங்கள் காணப்படுவதாகவும், வயல் நிலங்களில் நெற்செய்கை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்படும் அச்சம் விவசாயிகள் மத்தியில் எழுந்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ள அனந்தி சசிதரன்,

இதனை உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (மு-11)

# அபராதம் அதிகரிப்பு நியாயமற்றது - மகிந்த



(கொழும்பு)

போக்குவரத்து விதி மீறலுக்கான அபராதத் தொகை அதிகரிக்கப்பட்டமை சில தரப்பினருக்கு நியாயமற்ற தாக்கத்தை ஏற்படுத்துவதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

முச்சக்கர வண்டி சாரதிகள் போன்றோருக்கு இதுபோன்ற அபராதம் விதிப்பது நியாயமற்றது என்று கம்பஹா பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களிடம் பேசும் போதே மகிந்த ராஜபக்ஷ இவ்வாறு கூறியுள்ளார். (மு-11)


## சாந்திகம் உளவளத்துணை நிலையம்

SHANTHIHAM Association for Health & Counselling

### உளவளத்துணையாளர் தேவை

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் பணியாற்றுவதற்கு உளவளத் துணையாளர்கள் தேவை. அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் பயிற்றுவிக்கப்பட்ட உளவளத்துணை சான்றிதழ் அத்தியாவசியம். பெண் விண்ணப்பதாரர்கள் வரவேற்கப்படுவர். தங்கள் சுயவிபரக் கோவையினை 20.08.2017 அல்லது அதற்கு முன்னராக கீழ்வரும் முகவரிக்கு அல்லது மின்னஞ்சலினூடாக அனுப்பிவைக்கவும்.

**சாந்திகம்**

**8, கற்பகவிநாயகர் ஒழுங்கை, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.**

**தொ.பே: 021 222 3338**

Email: shanthiham@yahoo.com - Facebook: @shanthiham

(சி-9327)

## த.சங்கரப்பிள்ளை அன் சன்ஸ்

அனைத்து விதமான சாறிவகைகள், பஞ்சாபிகள், குர்தாக்கள், சேட் வகைகள், இன்னும் சிறுவர் சிறுமிகளுக்கான ஆடைவகைகள் என அனைவருக்கும் ஏற்ற சகல விதமான ஆடைகளையும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய சிறந்த ஸ்தாபனம்.



## T.SANGARAPPILLAI & SONS




## வீடு விற்பனைக்கு

கச்சேரிக்கு மிக அண்மையில் வீடு விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை. தொடர்பு கொள்ள வேண்டிய நேரம் 4.00 pmக்கு பின்னர்.

**தொடர்பு: 0770050344** (121)

## பிரத்தியேக வகுப்பு

தரம் 6 - O/L வரை கணிதமும் தரம் 10,11 இற்கான வணிகக்கல்வி, கணக்கீடும் பல வருடங்கள் அனுபவம்மிக்க ஆசிரியரால் தனியாகவோ, குழுவாகவோ வீடுகளிற்கு வந்து கற்பிக்கப்படும். (சி-9306)

**தொடர்பு: 0775893298**

## காணி விற்பனைக்கு

கிளிநொச்சி லக்ஷபானா வீதியில் நாலு (04) பரப்பு காணி, கிணறு உண்டு. ஏ9 பாதையில் இருந்து 350 மீற்றர் தூரத்தில் முறையான எல்லையுடன், மத்திய கல்லூரிக்கும் புதிய அரச வைத்தியசாலைக்கும் நடுவில் மின்மாற்றிகள் (இ.மி.சபை) பின்புறமாகவும் உள்ளது

**தொடர்பு: 0775107898** (119)

## கார் விற்பனைக்கு

Minor 1 Sri Car விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு: 0771853748, 0771523899** (120)

## வேலையாள் தேவை

பண்டத்தரிப்பில் உள்ள கடைக்கு வேலையாள் ஒருவர் தேவை. பண்டத்தரிப்பை அண்மித்தவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

**தொடர்பு: 0779905546** (சி-9326)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11 தமிழர்கள் கடத்தல் விவகாரம்

# கரன்னகொட விரைவில் கைது!

(கொழும்பு)

கடற்படையின் முன்னாள் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொட அடுத்த சில நாட்களுக்குள் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்படவுள்ளார் என்று ராவய வாரஇதழ் செய்தி வெளியிட்டுள்ளது. கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் 2008,2009ஆம் ஆண்டு காலப்பகுதியில் 11 தமிழர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பாகவே இவர் கைது செய்யப்படவுள்ளார்.



கடத்தப்பட்ட தமிழ் இளைஞர்கள் திருகோணமலை கன்சைட் முகாமில், சித்திரவதை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டதை முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொட அறிந்திருந்தார் என்று கோட்டே நீதவானுக்கு குற்றப்புலனாய்வுப் பிரிவினர் அறிவித்திருந்தனர்.

இந்தக் கடத்தல்கள் தொடர்பாக, கொமடோர் உதய கீர்த்தி, கொமடோர் தசநாயக்க, லெப்.கொமாண்டர் ரணசிங்க, முன்னாள் புலனாய்வுப் பணிப்பாளர் குருகே மற்றும் அப்போது கடற்படையின் உயர் அதிகாரிகளாக இருந்த பலரும் அறிந்திருந்தனர் என்றும் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் தகவல் வெளியிட்டிருந்தனர்.

லெப்.கொமாண்டர் ஹெற்றியாராச்சியே கொலைகளைச் செய்தார் என்றும் எனினும், தனிப்பட்ட விரோதம் காரணமாக சம்பத் முனசிங்கவுக்கு எதிராக முன்னாள் பிரதி பொலிஸ்மா அதிபர் அநுரசேனநாயக்கவிடம் முறைப்பாடு செய்திருந்தார் என்றும் அவர்கள் கூறியிருந்தனர்.

கைது செய்யப்பட்ட கடற்படையினரிடம் அட்மிரல் கரன்னகொட தொடர்பான தகவல்களை அறிந்துள்ள குற்றப்புலனாய்வுப் பிரிவினர் அதனை நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## சட்டமா அதிபர் திணைக்களம் மீது புத்தியில்லாதவர்களே விமர்சனம்

## பிரதி சொலிசிட்டர் கடும் விசனம்



புத்தியில்லாதவர்கள் சட்டமா அதிபர் திணைக்களத்தை விமர்சனம் செய்து வருவதாக பிரதி சொலிசிட்டர் ஜெனரல் யசந்த கோதாகொட குற்றம் சுமத்தியுள்ளார்.

அர்ஜுன் அலோசியசின் தொலைபேசி தகவல்கள் எவ்வாறு இரண்டு நாட்களில் வாசித்து அறிந்து கொண்டார்கள் என சிலர் கேள்வி எழுப்பி வருகின்றனர்.

நிபுணர்களைக் கொண்டு இலகுவில் இவ்வாறான பணிகளை மேற்கொள்ள முடியும் எனவும் நவீன தொழில்நுட்பங்கள் பற்றி அறிந்திராத மூடர்கள் பிழையாக கருத்து வெளியிட்டு வருவதாகவும் குற்றம் சுமத்தியுள்ளார்.

சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகள் பக்கச்சார்பாக செயற்படுவதாகவும் உரிய முறையில் கடமையாற்றவில்லை எனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள், அமைச்சர் ராஜித ஆகியோர் குற்றம் சுமத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## எம்.பிக்கள் தமிழ்மொழியை கற்பது காலத்தின் தேவையே-சபாநாயகர்



(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்கள் தமிழ்மொழியை கற்பது காலத்திற்கு ஏற்ற தேவை என்று சபாநாயகர் கருஜயசூரிய தெரிவித்தார்.

இனங்களுக்கு இடையில் ஐக்கியத்தை கட்டியெழுப்புதல் போன்றே நாட்டின் அபிவிருத்திக்கும் அது தேவையானது என்று அவர் கூறியுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தமிழ்மொழி பாடநெறியை ஆரம்பிக்கும் நிகழ்வில் நேற்று முன்தினம் கலந்து கொண்ட சபாநாயகர் இதனைக் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் பங்கேற்றிருந்த சகவாழ்வு மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சர் மனோகணேசன் உரையாற்றும் போது, மொழிப் பிரச்சினையைத் தீர்ப்பதன் ஊடாக தேசியப் பிரச்சினையில் குறிப்படத்தக்க அளவு தீர்க்க முடியும் என்று நம்பிக்கை வெளியிட்டார். (இ-7)

# ஜூலை இனக்கலவரம் தொடர்பான சாகலவின் கருத்து கேலிக்கூத்து

## புத்திக எம்.பி கடும் எதிர்ப்பு



(கொழும்பு)

1983ஆம் ஆண்டு இடம்பெற்ற இனக்கலவரம் தொடர்பான சட்டம் ஒழுங்கு அமைச்சரின் கருத்து கேலிக்கூத்தாகும் என ஐக்கிய தேசிய கட்சியின் மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரண தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில்நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற தனிநபர் பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "1983ஆம் ஆண்டு ஜூலை கலவரத்தில் உயிரிழுந்தவர்கள் தொடர்பில் பதில் சமர்ப்பித்த சட்டம் ஒழுங்கு அமைச்சர், பதுளை, மாத்தறை, கண்டி, கேகாலை மாவட்டங்களில் வெறும் ஏழு தமிழர்களே உயிரிழந்ததாக குறிப்பிட்டார். அவரின் கூற்று பெரும் கேலிக்கூத்தாகும்.

நாடாளுமன்றத்தில் இவ்வாறான தவறான கூற்றுக்களை முன்வைப்பதை தவிர்த்துக் கொள்ள வேண்டும். இந் நிலையில், மலையக மக்களின் பாதிப்புகள் குறித்து வெளிப்படுத்துவதற்கென ஆணைக்குழுவொன்றை நியமிக்க வேண்டும்.

இவ்வாறான ஆணைக்குழுவை நியமிப்பதன் மூலம் நாடாளுமன்றத்தில் இவ்வாறு தவறான தரவுகளை வெளிப்படுத்துவது தவிர்க்கப்படும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## லொத்தர் சபை மீண்டும் மாறும்

ரவிகருணாநாயக்க, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சராக பதவியேற்றதன் பின்னர், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்ட அபிவிருத்தி லொத்தர் சபையை மீண்டும் நிதி அமைச்சின் கீழ் கொண்டு வர அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கு முன்னர், நிதி அமைச்சின் கீழேயே அபிவிருத்தி லொத்தர் சபை இருந்தது. அண்மையில் இடம்பெற்ற அமைச்சரவை மாற்றத்தின் பின்னர், நிதி அமைச்சின் கீழ் இருந்த அபிவிருத்தி லொத்தர் சபை, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டது.

இந்நிலையில், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சராக இருந்த ரவி கருணாநாயக்க தனது பதவியில் இருந்து இராஜினாமா செய்ததையடுத்து அபிவிருத்தி லொத்தர் சபை மீண்டும் நிதி அமைச்சின் கீழ் கொண்டு வர அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

## செயற்கைக்கோளை ஏவிய ரோஹிதவுக்கு சிக்கல்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கடைசி மகன் ரோஹித ராஜபக்ஷவிடம் வாக்குமூலம் ஒன்று பதிவு செய்து கொள்வதற்காக, பொலிஸ் நிதி மோசடி விசாரணைப் பிரிவிற்கு அழைக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

சீனாவினால் விண்ணுக்கு ஏவப்பட்ட SupremeSAT-1 தொலைத்தொடர்பு செயற்கைக் கோள்கள் திட்டம் தொடர்பில் தகவல் பெற்றுக்கொள்வதற்காகவே ரோஹித அழைக்கப்பட்டுள்ளார். சுப்ரீம் நிறுவனத்தின் தொழில்நுட்ப குழுவில் பிரதான பொறியியலாளராக ரோஹித செயற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. சுப்ரீம்செட் செயற்கைக்கோள்களை ஏவுவதற்காக 320 மில்லியன் டொலர் செலவிடப்பட்டுள்ளதாக கணிப்பிடப்பட்டுள்ளது.

இதற்காக பாதுகாப்பு அமைச்சு மற்றும் தொலைத்தொடர்பு ஆணைக்குழுவின் அனுமதி கிடைக்கவில்லை எனவும், அரசாங்கப்பணம்500 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்லேகலே டெஸ்ட் 1ம் நாள்

# தவான் சதம்; இந்தியா 6/329

## பின்னரைப் பாதி ஆட்டம் இலங்கையின் கட்டுப்பாட்டுக்குள்

தவானின் சதமும் (119) ராகுலின் அரைச்சதமும் (88) கைகொடுக்க பல்லேகலேயில் நடைபெற்று வரும் இலங்கை அணிக்கெதிரான 3ஆவதும் இறுதியுமான போட்டியின் முதல் நாள் ஆட்ட நேர முடிவில் இந்தியா 6 விக்கெட்டுக்களை இழந்து 329 ஓட்டங்கள் சேர்த்துள்ளது.

போட்டியின் முதல் பாதி ஆட்டத்தில் முன்னிலை வகித்த போதும் மதியபோசன இடைவேளையின் பிற்பாடான 2ஆவது 3ஆவது பாதிநேர ஆட்டத்தில் இலங்கையின் ஆட்டம் வலுப்பெற்றமையால் இந்தியாவால் மேலும் கணிசமான ஓட்ட எண்ணிக்கையை எடுக்கமுடியாமல் போனது.

இந்தியா - இலங்கை அணிகளுக்கு இடையிலான 3ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி பல்லேகலேயில் நேற்று ஆரம்பமானது.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய அணித் தலைவர் விராட் ஹோலி களத்தடுப்பை தேர்வு செய்தார்.

ஒரு டெஸ்ட் போட்டியில் விளையாட ஜடேஜாவிற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதால், அவருக்குப் பதிலாக குல்தீப் யாதவ் சேர்க்கப்பட்டார்.

இலங்கை அணியில் காயம் காரணமாக ஹேரத், பிரதீப் ஆகியோர் விலக விஷ்வா பெர்னாண்டோ, லகிரு குமார, சண்டகன் வாய்ப்பைப் பெற்றனர்.

முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய இலங்கை அணிக்கு தவான், லோகேஷ் ராகுல் ஆகியோர் ஆரம்பம் வழங்கினர். இருவரும் சிறப்பான ஆட்டத்தை வெளிப் படுத்தினர்.

இலங்கையின் பந்து வீச்சு பெரிய அளவில் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை என்பதால், இந்தியாவின் ஓட்டவிகிதம் சீராக சென்று கொண்டிருந்தது.



9.1 ஓவர்களில் 50 ஓட்டங்களைத் தொட்ட இந் தியா, 17.4 ஓவர்களில் 100 ஓட்டங்களைத் தொட்டது.

தவான் 45 பந்துகளிலும் லோகேஷ் ராகுல் 67 பந்து களிலும் அரைச்சதம் கடந் தனர்.

முதல்நாள் மதிய உணவு இடைவேளை வரை இருவரும் ஆட்ட மிழக்காமல் இருந்தனர். இதனால் இந்தியா விக்கெட் இழப்பின்றி 27 ஓவர்களில் 134 ஓட்டங்கள் சேர்த்தது.

ராகுல் 67, தவான் 64 ஓட்டங் களுடன் களத்தில் இருந்தனர்.

மதிய உணவு இடைவேளை முடிந்து ஆட்டம் தொடங்கியது. இருவரும் ஆட்டத்தை தொடர்ந்தனர். இந்தியா 30.4 ஓவரில் 150 ஓட்டங்களைத் தொட்டது.

இந்தியாவின் ஓட்டஎண்ணிக்கை 39.3 ஓவர்களில் 188 ஓட்டங்களை எட்டியபோது இந்த ஜோடி பிரிந்தது. லோகேஷ் ராகுல் 85 ஓட்டங்கள் எடுத்தி ருந்த நிலையில் புஷ்பகுமார பந்தில் ஆட்டமிழந்தார்.

2ஆவது விக்கெட்டுக்கு தவான் உடன் புஜாரா ஜோடி சேர்ந்தார். சிறப்பாக விளையாடிய தவான் 107 பந்துகளில் சதம் அடித்தார். தொடர்ந்து விளையாடிய அவர் 119 ஓட்டங்கள் எடுத்து ஆட்டம் இழந் தார். அதன்போது இந்தியா 47.1 ஓவர்களில் 2 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 219 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

3ஆவது விக்கெட்டுக்கு புஜாரா உடன் விராட் ஹோலி ஜோடி சேர்ந்தார்.

கடந்த இரண்டு போட்டிகளி லும் சதம் அடித்த புஜாரா 8 ஓட்டங்களில் வெளியேறினார். அதன்பின் ரஹானே (17), விராட் ஹோலி (42) என அடுத்தடுத்து ஆட்டம் இழந்தனர்.

இதனால் இந்தியாவின் ஓட்டஎண்ணிக்கை அப்படியே தவழ ஆரம்பித்தது. தவான் ஆட்டமிழந்த பிற்பாடு இந்தியா 42.5 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 110 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது.

6ஆவது விக்கெட்டுக்கு அஸ்வின் உடன் சகா ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி முதல்நாள் ஆட்டம் முடியும்வரை ஆட்டத்தை கொண்டு செல்லும் என்று நினைக்கையில், 88ஆவது ஓவரில் அஸ்வின் 31 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டம் இழந்தார்.

7ஆவது விக்கெட்டுக்கு சகா உடன் ஹர்திக் பாண்டியா ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி முதல்நாள் ஆட்ட முடிவில் மேலும் விக்கெட் இழக்காமல் பார்த்துக் கொண்டது. முதல்நாள் ஆட்ட முடிவில் இந்தியா 90 ஓவர்களில் 6 விக்கெட் இழப்பிற்கு 329 ஓட்டங்கள் சேர்த்துள்ளது.

சகா 13, ஹர்திக் பாண்டியா ஒரு ஓட்டத்துடன் களத்தில் உள்ளனர்.

இலங்கை அணி தரப்பில் சுழற்பந்து வீச்சாளர் புஷ்பகுமார அதிகபட்சமாக 3, சண்டகன் 2, விஷ்வா பெர்னாண்டோ ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

போட்டியின் 2ஆம் நாள் ஆட்டம் இன்றாகும்.

### தொடர்ச்சியாக 7 அரைச்சதங்கள்

## உலகசாதனையை சமப்படுத்தினார் ராகுல்

டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் தொடர்ந்து 7 அரைசதங்கள் அடித்து உலக சாத னையை சமன் செய்துள்ளார் இந்திய அணி யின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் லோகேஷ் ராகுல்.

இந்தியா - இலங்கை அணிகளுக்கு இடையிலான 3ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் பல்லேகலே மைதானத்தில் நேற்று ஆரம்பமானது.


இப்போட்டியில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய லோகேஷ் ராகுல் 67 பந்துகளை சந்தித்து அரைசதம் அடித்தார். இதன்மூலம் தொடர்ச்சியாக 7 அரைச் சதங் கள் அடித்து உலக சாதனையை சமன் செய் துள்ளார். இதன்மூலம் விஸ்வநாத், டிராவிட் அடித்த 6 அரைசதங்கள் என்ற சாதனையை முறியடித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவிற்கு எதிரான நான்கு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 90, 51, 67, 60, 51* என தொடர்ந்து ஐந்து அரைசதங்கள் அடித்திருந்தார்.

வைரஸ் காய்ச்சல் காரணமாக காலி டெஸ்டில் லோகேஷ் ராகுல் களம் இறங்க வில்லை. கொழும்பில் நடைபெற்ற 2ஆவது டெஸ்டின் முதல் இன்னிங்சில் அரைசதம் அடித்திருந்தார்.

நேற்று நடைபெற்ற போட்டியில் 85 ஓட்டங்கள் எடுத்தார்.

இதற்கு முன் குமார் சங்கக்கார, எவர் டன் வீக்ஸ், சந்தர்போல், கிறிஸ் வோக்ஸ்,



அண்டி பிளவர் ஆகியோர் தொடர்ச்சியாக 7 அரைசதங்கள் அடித்திருந்தனர்.

# நடால் அதிர்ச்சி தோல்வி

## பறிபோனது நம்பர் 1 வாய்ப்பு

ரோஜர்ஸ் கிண்ண டென்னிஸ் காலிறுதியில் ஸ்பெயினின் நடால், 18 வயது வீரரான கனடாவின் ஷபோவலோவிடம் வீழ்ந்து அதிர்ச்சித் தோல்வி அடைந்தார்.

கனடாவில் உள்ள மொன்ட்ரியல் நகரில் ரோஜர்ஸ் கிண்ண டென்னிஸ் தொடர் நடக்கிறது. ஒற்றையர் பிரிவு காலிறுதியில் 'நம்பர்-2' வீரர் ஸ்பெயினின் நடால், சிறப்பு அனுமதியுடன் தொடருக்குள் நுழைந்த கனடாவின் டேனிஷ் ஷபோவலோவை (143ஆவது இடம்) சந்தித்தார்.

முதல் செட்டை 6-3 என கைப்பற்றிய நடால், அடுத்த செட்டை 4-6 என பறி கொடுத்தார். வெற்றியாளரை நிர்ணயிக்கும் கடைசி செட்டில் போராடிய நடால் 6-7 என வீழ்ந்தார். முடிவில், நடால் 6-3, 4-6, 6-7 என்ற செட் கணக்கில் வீழ்ந்தார்.

தற்போது, ஏ.டி.பி., தரவரிசையில் பிரிட்டனின் அன்டி முர்ரே (7750 புள்ளி), நடால் (7465 புள்ளி) முதலிரண்டு இடங் களில் உள்ளனர்.

நடால் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறி இருந்தால் கூடுதலாக 360



புள்ளிகள் கிடைத்திருக்கும். இதனால், ஜூன் 2014க்குப்பின் இவர் முதல்முறையாக 'நம்பர்-1' இடத்தை எட்டி இருக்கலாம். தோல்வியடைந்ததால் இந்த வாய்ப்பை இழந்தார்.

## ஒரு ஓவர்; 6 விக்கெட்டுக்கள்



இங்கிலாந்தை சேர்ந்த 13 வயது பள்ளி மாணவன் லூக் ரொபின்சன், ஒரே ஓவரில் 6 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

இங்கிலாந்தின் வடகிழக்கு பகுதியில் உள்ள ஹாட்டன்- லி-ஸ்பிரிங் பகுதியில், 13 வயதுக் குட்படடோருக்கான கழக அணிகள் பங்கேற்ற உள்ளூர் கிரிக்கெட் தொடர் நடந்தது. இதில் பிலடெல்பியா கிரிக்கெட் கிளப் சார்பில் பங் கேற்ற பள்ளி மாணவன் லூக் ரொபின்சன், ஒரே ஓவரில் 6 விக்கெட்டுக்களை கைப்பற்றி வெற்றிக்கு வித்திட்டார். அனைத்து விக்கெட் டுக்களும் 'கிளீன் போல்ட்' முறையில் கிடைத்தது தனிச்சிறப்பு. 149 ஆண்டு கால கிரிக்கெட் வரலாற்றில் இதுபோன்ற சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளதா? என்பதை பிலடெல் பியா கழக அணி நிர்வாகம் ஆராய்ந்து வருகிறது.

### கரீபியன் ரி20, கவுண்டி போட்டிகளில் விளையாடும்

# வீரர்களை திரும்ப அழைத்தது பாகிஸ்தான்

மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெற்று வரும் கரீபியன் பிரிமீயர் லீக் மற்றும் இங்கிலாந்தில் நடைபெற்று வரும் கவுண்டி போட்டிகளில் விளையாடும் வீரர்களை பாகிஸ்தான் திரும்ப அழைத்துள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபையுடன் மத் திய ஒப்பந்தம் செய்துள்ள வீரர்கள் மற்றும் ஒப்பந்தம் செய்யப்படாத வீரர்கள் என மொத்தம் 13 பேர் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் அனுமதியோடு மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெற்று வரும் கரீபியன் ரி20 கிரிக்கெட் தொடரிலும் இங்கிலாந்தில் நடைபெற்று வரும் கவுண்டி போட்டியிலும் விளையாடி வருகிறார்கள்.

ஓகஸ்ட் மாதம் 4ஆம் திகதி முதல் செப் டம்பர் 9ஆம் திகதி வரை கரீபியன் பிரிமியர் லீக் தொடர் நடைபெறுகிறது.

இதில் ஒப்பந்தத்தில் உள்ள 7 வீரர்களும் ஒப்பந்தம் செய்யப்படாத கம்ரான் அக்மல், சொகைல் தன்வீர் மற்றும் மொஹமட் ஷமி ஆகியோரும் இடம்பிடித்துள்ளனர்.

இவர்கள் அனைவரும் உள்ளூர் ரி20 கிரிக்கெட் தொடரான நஷனல் ரி20 போட்டி களுக்கு திரும்ப வேண்டும் என்று பாகிஸ் தான் கிரிக்கெட் சபை கேட்டுக்கொண்டுள் ளது. இவர்கள் ராவல்பிண்டி, பைசலாபாத் மற்றும் லாகூர் வைட் ஆகிய அணிகளில் இடம்பிடித்துள்ளனர்.

இங்கிலாந்து கவுண்டி அணியில் மொஹமட் அமிர், சர்பிராஸ் அகமட், பகர் சமான் ஆகியோர் விளையாடுகிறார்கள். இவர்களையும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை திரும்ப அழைத்துள்ளது.

பாகிஸ்தான் அணி உலக லெவன் அணிக்கெதிராக ரி20 கிரிக்கெட் லீக் தொட ரில் விளையாட இருக்கிறது. இதற்காகத் தான் வீரர்கள் உள்ளூர் தொடரில் விளை யாடுவதற்காக அழைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னாள் படையினரின் உரிமைகள் மறுப்பு

யுத்தத்தின் போது அவயவங்களை இழந்த இராணுவம் உட்பட முப்படையைச் சேர்ந்த முன்னாள் படையினரின் உரிமைகள் தொடர்ந்தும் மறுக்கப்பட்டு வருவதாக குற்றம்சாட்டி கொழும்பில் நேற்றும் நேற்று முன்தினமும் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

படையினரின் உரிமைகளைப் பாதுகாக்கும் தேசிய அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தப் போராட்டம் கொழும்பு புறக்கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாக இடம்பெற்றது.

யுத்தத்தின் போது அவயவங்களை இழந்த இராணுவம் உட்பட முப்படையைச்சேர்ந்த முன்னாள் படையினரின் இந்த ஆர்ப்பாட்டம் காரணமாக புறக்கோட்டை புகையிரத நிலையத்தை அண்மித்த பகுதியில் பெரும் வாகன நெரிசலும் ஏற்பட்டிருந்தது.

இதனால் புறக்கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்னாள் உள்ள பாதை ஊடான போக்குவரத்து சில மணி நேரங்கள் நிறுத்தி வைக்கப்பட்டன. இதனையடுத்து பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் முன்னாள் படையினருடன் பேச்சுவார்த்தைக்கு இணங்கிய நிலையில் ஆர்ப்பாட்டம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. (இ-7)

# படைவிட்டோடிகளை பாதுகாப்பது தண்டனைக்குரிய குற்றமாகும்

## இராணுவத் தலைமையகம் அறிவிப்பு

(கொழும்பு)

இராணுவத்தில் இருந்து தப்பிச் சென்ற மற்றும் விடுமுறை பெறாமல் கடமைக்கு திரும்பாதிருக்கும் படை வீரர்களுக்கு பாதுகாப்பளிப்பது தண்டனைக்குரிய குற்றமாகும் என்று இராணுவத் தலைமையகம் அறிவித்துள்ளது.

அறிக்கை ஒன்றை நேற்று வெளியிட்டுள்ள இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ரொஷான் செனவிரத்ன இதனைக் கூறியுள்ளார்.

இராணுவத்தில் இருந்து தப்பிச் சென்ற மற்றும் விடுமுறை பெறாமல் கடமைக்குத் திரும்பாதிருக்கும் இராணுவ வீரர்கள் பொய்யான தகவல்களை வழங்கி பல்வேறு நிறுவனங்களில் பணிபுரிந்து வருவதாக இராணுவப் பேச்சாளர் அந்த அறிக்கை மூலம் கூறியுள்ளார்.

இதுபோன்ற இராணுவ வீரர்களுக்கு தொழில் வாய்ப்புக்களை வழங்குவது மற்றும் பாதுகாப்பு வழங்குவதானது நாட்டில் காணப்படுகின்ற சட்டத்தின் நீதிமன்றத்தால் தண்டனை பெறக் கூடிய குற்றமாகும் என்று பிரிகேடியர் ரொஷான் செனவிரத்ன மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# பொலிஸாரின் ரோந்து தொடர்கிறது

(கரணவாய்)

வடமராட்சியில் இருந்து விசேட அதிரடிப்படையினர் மீளப் பெறப்பட்டிருந்தாலும் பொலிஸாரின் ரோந்து நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. கடந்த மாதம்09.07.2017 அன்றுசட்டவிரோதமாக மணல் ஏற்றி வந்த ஹன்டர் வாகனத்தின் மீது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இளைஞர்ஒருவர்பலியானார்.

இதனையடுத்து ஏற்பட்ட வன்முறைசம்பவத்தில்பொலிஸ் ஜீப் வண்டி ஒன்று சேதமாக்கப்பட்டதுடன் பொலிஸ் காவலரண் ஒன்றும் சேதமாக்கப்பட்டது. இது தொடர்பில் விசாரணை மேற்கொண்டு வந்த பொலிஸார் விசேட அதிரடிப் படையினருடன் இணைந்து கடந்த 05.08.2017 தொடக்கம் 07.08.2017 வரையான மூன்று நாட்கள் சுற்றிவளைப்பு தேடுதல்கள் மேற்கொண்டதையடுத்து விசேட அதிரடிப்படையினர் மீளப் பெறப்பட்டிருந்தனர். இந்நிலையில் தொடர்ந்தும் பொலிஸார் விசேட ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். (இ-60)

# தமிழ் பெண் விமானி நாடாளுமன்றத்தில்



ஈழத்தின் தமிழ் பெண் விமானியான அர்ச்சனா செல்லத்துரை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நாடாளுமன்றிற்கு சென்றார்.

சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் நாடாளுமன்றம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கூடியது.

இதன்போது நாடாளுமன்றத்திற்கு வருகை தந்த அர்ச்சனா செல்லத்துரை, சபை நடவடிக்கைகளை பார்வையிட்டார்.

நாடாளுமன்றில் உரையாற்றிய தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன், அர்ச்சனாவுக்கு வாழ்த்துக்களை தெரிவித்தார்.

யாழ். வல்வெட்டித்துறையைச் சேர்ந்த அர்ச்சனா செல்லத்துரை சிறந்த பாடகியும் ஆவார். இவர் டென்மார்க்கில் வசித்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பாராளுமன்ற ஒழுக்கத்தை மீறியோர் தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கை

## சபாநாயகர் அறிவிப்பு



(கொழும்பு)

பாராளுமன்ற ஒழுக்கத்தை மீறியோர் தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படுமென சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றம் நேற்று முன்தினம் கூடியபோது பாராளுமன்ற சிறப்புரிமைகள் தொடர்பில் உரையாற்றிய பிரதியமைச்சர் அஜித் பெரேரா, கடந்த ஜூலை 28ஆம் திகதி ஒன்றிணைந்த எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் பாராளுமன்றில் நடந்து கொண்டவிதம் குறித்து உரையாற்றினர்.

குறிப்பாக, பாராளுமன்ற உறுப்பினர் பிரியங்கர ஜயரத்ன, சபாநாயகரின் ஆசனத்தில் அமர்ந்தமை, குமார வெல்கம, பிரசன்ன ரணதுங்க உள்ளிட்டோர் பிரமுகர்களுக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தில் அமர்ந்து குழப்பம் விளைவித்தமை, போன்றவற்றினை சுட்டிக் காட்டினார்.

இது தொடர்பில் பதிலளித்த சபாநாயகர் இவ்விடயம் தொடர்பில் பாராளுமன்ற சிறப்புரிமைகள் தொடர்பான குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவித்தார். (இ-7)

# ஊழல் மோசடியில் ஈடுபடுவோருக்கு ரவியின் பதவி விலகல் ஒரு பாடம்

## சு.க.அமைப்பாளர் சுட்டிக்காட்டு

நல்லாட்சி அரசாங்கத்தின் பெயரை வைத்துக் கொண்டு அரசாங்கத்தில் ஊழல் மோசடியில் ஈடுபடுவோருக்கு ரவி கருணாநாயக்கவின் பதவி விலகல் ஒரு பாடமாக அமைந்திருக்கின்றது என ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் நுவரெலியா மாவட்ட அமைப்பாளர் பெரியசாமி பிரதீபன் தெரிவித்தார்.

ஹற்றனில் இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றின்போதே இதனைத் தெரிவித்தார்.

"ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சி காலப்பகுதியில் இலங்கையை நல்லிலங்கையாக ஊழல் மோசடி அற்ற ஒரு நல்ல நாடாக மாற்றியமைக்க வேண்டும் என்பது அவரின் எண்ணமாகும்.

இந்த வகையில் கடந்த ஆட்சியாளர்கள் செய்த ஊழல் நடவடிக்கைகள் வெளிக்கொண்டு வரப்பட்டு சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வந்தன.

அதேபோன்று ஆளும் அரசாங்கத்தில் ஊழல் மோசடிகளில் ஈடுபடுபவர்கள் எவராக இருப்பினும் அவர்களுக்கு எதிராக பதவி விலக்கல் மற்றும் சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்பதும் ஜனாதிபதியின் செயற்பாடாக உள்ளது.

அது பிரதமராக இருந்தாலும் சரி, வேறு எவராக இருந்தாலும் சரி அவர்களுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வரப்பட்டு எதிர்வரும் காலத்தில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் ஊடான ஒரு அரசாங்கத்தை அமைப்பதற்கு ரவி கருணாநாயக்காவின் பதவி விலகல் அமைந்திருக்கின்றது" என பிரதீபன் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இராசி பலன்

13.08.2017

(ஆடி 28, ஞாயிற்றுக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு

சஷ்டி முன்னிரவு 8.26 மணிவரை

அச்சுவினி பின்னிரவு 4.41 மணிவரை

சுபநேரம் 9.05-10.35 மணிவரை

இராகுகாலம் 4.35-6.05 மணிவரை

வளவன்

**கிரகநிலை**

| | | | |
|---|---|---|---|
| | சந் | | |
| | கிரகநிலை சந்திராஷ்டமம் அத்தம் | | ராகு,செவ் சூரி,புத சுக் |
| கேது | | | |
| | குரு | | சனி |

**மேடம்:** தேகாரோக்கியத்தில் அதிக அக்கறை காட்டுவீர்கள், ஆழ்ந்த சிந்தனையுண்டு, கொடுத்த வாக்கை காப்பாற்ற நண்பர்கள் கடைசி நேரத்தில் கைகொடுத்து உதவுவர்.

**இடபம்:** விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், சுப செலவுகள் ஏற்படலாம், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம்.

**மிதுனம்:** பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், உறவினர்களின் வருகையால் குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**கடகம்:** செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், உறவினர் வழியில் ஒத்துழைப்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு, ஆரோக்கியமான நாள்.

**சிம்மம்:** ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், ஊறபெரிய மனிதர்களின் சந்திப்புகள் இடம் பெறலாம், சிக்கல்கள் விலகி சிறப்புகள் கூடும் நாள்.

**கன்னி:** மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், முயற்சிகளில் சிறு தடை தாமதங்கள் ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**துலாம்:** குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும் நாள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.

**விருச்சிகம்:** எடுத்த காரியங்களை எளிதில் செய்து முடிப்பீர்கள், பிறர் உதவியுண்டு, உற்சாகமான சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**தனுசு:** தாழ்ந்த சுபாவமுண்டு, இல்லம் தேடி இனிய தகவல்கள் வந்து சேரலாம், கேளிக்கை, கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**மகரம்:** பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், பெற்றோரின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பிறர் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.


**கும்பம்:** முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், குடும்ப பொறுப்புகள் கூடும் நாள்.

**மீனம்:** பணவரவு திருப்தி தரும் வகையில் அமையும், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்படலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நல்லூர் புத்தகக் கண்காட்சி முதலமைச்சரால் ஆரம்பித்து வைப்பு







(யாழ்ப்பாணம்)

புத்தகக் கண்காட்சியும் விற்பனையும் நல்லூரில் நேற்று முன்தினம் வடமாகாண முதலமைச்சரும் நீதியரசருமான சி.வி.விக்னேஸ்வரனால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்திய சுதந்திர தினத்தின் 70 ஆவது ஆண்டுநிறைவையொட்டியும் நல்லூர் கந்தவாமி கோவில் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டும் யாழ். இந்திய துணைத் தூதரகமானது யாழ்ப்பாணம் மாநகர சபையுடன் இணைந்து இப் புத்தகக் கண்காட்சியினை 12ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை ஏற்பாடு செய்துள்ளது.

சுமார் 20,000 இற்கும் மேற்பட்ட தமிழ் புத்தகங்கள் இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்டு இந்தியாவின் பிரபல பதிப்பகங்களான கவிதா பதிப்பகம், கற்பகம் புத்தகாலயம், அருணாபதிப்பகம் மற்றும் இலங்கை பூபாலசிங்கம் புத்தகசாலை ஆகிய பதிப்பகத்தினரால் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

முதல் முறையாக இவ்வாறானதோர் புத்தகக் கண்காட்சியை ஏற்பாடு செய்துள்ள யாழ்.இந்திய துணைத் தூதரகமானது இனிவரும் காலங்களிலும் இதுபோன்ற புத்தகக் கண்காட்சியை ஏற்பாடு செய்ய தீர்மானித்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## முன்பள்ளி மாணவர்களுக்காக தொலைக்காட்சி வழங்கல்




புலோலி கந்தமுருகேஸ்வரர் முன்பள்ளி மாணவர்களின் கற்றல் நடவடிக்கைக்காக 30 ஆயிரம் ரூபாய் பெறுமதியான தொலைக்காட்சி ஒன்று முன்பள்ளி நிர்வாகக் குழுவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளரும் வடமாகாணசபை உறுப்பினருமான அகிலதாஸ் சிவக்கொழுந்தின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியின் கீழ் தொலைக்காட்சி வழங்கப்பட்டுள்ளது.

தொலைக்காட்சியினை வழங்கும் நிகழ்வு வடமராட்சி வலயக் கல்வி பணிமனையில் நடைபெற்றது. (இ-60)




## கிணற்றிற்குள் துப்பாக்கி இருப்பதாக பொலிஸாருக்கு பொய் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் தவசிகுளம் பகுதியிலுள்ள வீட்டுக்கிணற்றில் உரப்பையில் சுற்றப்பட்ட நிலையில் துப்பாக்கியொன்று மறைத்து வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் அவசர முறைப்பாட்டு இலக்கமான 119 க்கு பொய்யான தகவல் வழங்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் முற்பகல் 10.30 மணிக்கு இவ்வாறு பொய்யான தகவல் வழங்கப்பட்டுள்ளது. இதையடுத்து பொலிஸ் அவசர பிரிவால் கொடிகாமம் பொலிஸ் நிலையத்துக்கு குறித்த தகவல் பரிமாறப்பட்டுள்ளது.

இதனையடுத்து துப்பாக்கி கிணற்றில் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்ட வீட்டிற்கு சென்று கிராம சேவகர் மற்றும் அயல் வீட்டார் முன்னிலையில் கிணற்றை இறைத்துள்ளனர்.

இதன்போது கிணற்றில் இருந்து சந்தேகத்திற்கிடமான எந்தவொரு பொருட்களும் மீட்கப்படவில்லை. இதனால் பொலிஸ் அவசர இலக்கத்திற்கு பொய்யான தகவல் வழங்கியவர்கள் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு விசாரணை அறிக்கை நேற்று நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கொடிகாமம் பொலிஸ் பிரிவில் தொடர்ச்சியாக பொலிஸ் அவசர இலக்கத்திற்கு பொய்யான தகவல்களை சிலர் வழங்குகின்றனர்.

இதனால் பொலிஸாரின் கடமை நேரம் வீணடிக்கப்படுவதோடு அரச வளங்களும் வீண்விரையமாகின்றது என கொடிகாமம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஐ.பீ.எதிரிசிங்க தெரிவித்துள்ளார். (இ-89)

### மீளாய்வின் போது பாதிக்கப்பட்ட

## சமுர்த்திப் பயனாளிகள் மேன்முறையீடு செய்யலாம்

தற்போது சமுர்த்தி நிவாரணம் பெற்றுக் கொண்டிருக்கின்ற சமுர்த்தி நிவாரணம் பெற்றுக்கொள்ளாத பொதுமக்களுக்கு அரசினால் அமுல்படுத்தப்பட்ட சமுர்த்தி நிவாரணம் வழங்குதல் தொடர்பான கணிப்பீட்டு படிவங்கள் 2015ஆம் ஆண்டு வழங்கப்பட்டு அவை கிராம அலுவலர் பிரிவு, சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம உத்தியோகத்தர் ஆகியோர் கொண்ட குழுவினரால்வீடுகளுக்கு நேரடியாகச் சென்று படிவங்கள் பூரணப்படுத்தப்பட்ட 2016 ஆம் ஆண்டு கணனியில் பதிவேற்றம் செய்யப்பட்டு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம், இலங்கைபுள்ளிவிபரத்திணைக்களம் மற்றும் இலங்கை தகவல் தொடர்பாடல் தொல்நுட்ப முகவராண்மை நிலையம் ஆகிய மூன்று திணைக்களங்களினால் வரையறுக்கப்பட்ட 29 எடுகோள்களினை அடிப்படையாகக் கொண்டு புள்ளியிடல்மூலம் நிவாரணம் பெறத்தகுதியானவர்கள் தெரிவு செய்யப்பட்டு அப்பட்டியல்கள் மக்களின் பார்வைக்காக காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

தற்போது இந் நிவாரண வழங்கல் தெரிவு தொடர்பில் மக்கள் மத்தியில் ஒரு குழப்பமான நிலைமையும் தவறான அபிப்பிராயங்களும் ஏற்பட்டுள்ளதனை அவதானிக்க முடிகின்றது.

யாழ் மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள மொத்த உச்ச எண்ணிக்கையில் எதுவித மாற்றங்களும்ஏற்படாத வகையில் புதிய பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இப் பயனாளிகள் தெரிவில் குறைபாடுகள் இருப்பின் அக்குறைப்பாடுகள் தொடர்பில் பொதுமக்கள் தங்கள் மேன்முறையீடுகளையும் முறைப்பாடுகளையும் அந்தந்த பிரதேச செயலாளர் பிரிவு காரியாலயங்களில் குறித்த காலப்பகுதிக்குள் (14 நாட்களுக்குள்) ஒப்படைத்தல் வேண்டும்.

அவர்களது மேன்முறையீடுகள், முறைப்பாடுகள் என்பன பிரதேச செயலக வாரியாக நியமிக்கப்பட்டுள்ள பயனாளிகள் தெரிவுக் குழு மற்றும் மேன்முறையீட்டுக்குழு ஆகியவற்றினால் மீள் பரிசீலனைக்குட்படுத்தப்பட்டு படிவங்கள் மீள் திருத்தம் செய்யப்பட்டு கணனியில் பதிவேற்றம் செய்து சரியான பட்டியல் தயாரிக்கப்பட்டதன் பின்னரே புதிய பயனாளிகளுக்கான நிவாரண விநியோகம் மேற்கொள்ளப்படும். அதுவரை தற்போது நிவாரணம் பெற்றுக் கொண்டிருக்கின்ற பயனாளிகள் பட்டியலே அமுலில் இருக்கும். எனவே இவ்விடயம் தொடர்பில் பொதுமக்கள் எதுவித குழப்பநிலைமைக்கும் ஆளாகமால் தங்கள் மேன்முறையீடுகள், முறைப்பாடுகள் தங்களது பிரிவு பிரதேச செயலகங்களில் உடன் சமர்ப்பிக்கு மாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள் என யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார். (இ

# வரட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் உணவு நிவாரணம் வழங்க ஏற்பாடு

## யாழ். அரச அதிபர் தெரிவிப்பு

யாழ்.மாவட்டத்தில் நிலவும் வரட்சியின் காரணமாக வாழ்வாதாரத்தை இழந்த குடும்பங்களுக்கு உலர் உணவு நிவாரணம் உடனடியாக வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

வடக்கில் ஏற்பட்டுள்ள வரட்சிப் பாதிப்புக்களுக்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கில் ஏனைய மாவட்டங்களை விடவும் இம்முறை யாழ்.மாவட்டத்தில் கடும் வரட்சி தொடர்ச்சியாக நிலவுகிறது.

அதிக வரட்சி நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, வேலணை, காரைநகர், தென்மராட்சி, மருதங்கேணி, நல்லூர், சங்கானை போன்ற பகுதிகளில் காணப்படுகிறது. அந்த பிரதேசங்களுக்கு தொடர்ச்சியாக குடிநீர் வழங்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. அதற்கான நிதி ஒதுக்கீடுகளை அனர்த்த நிவாரண அமைச்சு வழங்கிவருகிறது.

வேலணை, ஊர்காவற்றுறை போன்ற பிரதேசங்களுக்கான குடிநீர் விநியோகம் யாழ்ப்பாணத்தில் இருந்தும் அனுப்பப்படுகிறது. தொடர்ந்தும் அப்பகுதிக்கு நீர்வழங்க வேண்டிய தேவை உள்ளது.

எமது கோரிக்கைக்கு அமைவாக 2 பவுசர்கள் அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளன. மேலும் 3 பவுசர்கள் கோரியுள்ளோம். அவை கிடைத்த பின்னர் யாழில் இருந்து தீவக பிரதேசங்களுக்கு நீர் விநியோகம் மேற்கொள்ளவுள்ளோம். இதுவரை 13 ஆயிரத்து 586 குடும்பங்களுக்கு நீர் விநியோகம் மேற்கொண்டு வருகிறோம். அதாவது 50 ஆயிரத்துக்கும் அதிகமான மக்களுக்கு குடிநீர் வழங்கப்படுகிறது.

வரட்சியின் காரணமாக வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவு நிவாரணம் கொடுப்பதற்கான ஏற்பாடுகள் உடனடியாகமேற்கொள்ளப்பட்டுள்ளன.

அந்த வகையில் யாழ். மாவட்டத்தில் வரட்சியின் காரணமாக 19 ஆயிரத்து 166 குடும்பங்கள் தமது வாழ்வாதாரங்களை இழந்துள்ளதாக பிரதேச செயலர்களால் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது. வரட்சியால் விவசாய நடவடிக்கை பாதிக்கப்பட்டு கூலி வேலை செய்பவர்களுக்கும் இந்த உடனடி நிவாரணம் வழங்கப்படவுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## சிகிச்சை பலனின்றி இளைஞன் உயிரிழப்பு

சாவகச்சேரிப் பகுதியில் கடந்த 7ஆம் திகதி இடம்பெற்ற விபத்தில் படுகாயமைந்த இளைஞன் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சிகிச்சை பலனின்றி யாழ். போதனா வைத்தியசாலையில் உயிரிழந்தார்.

சாவக்சேரி பகுதியில் சிறிய ஹன்டர் ரக வாகனமும் மோட்டார்சைக்கிளும் விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் மிருசுவில் உஷன் பகுதியைச் சேர்ந்த விமல்ராஜ் (வயது-26) என்ற இளைஞனே சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இச்சம்பவம் தொடர்பில் சாவக்சேரி பொலிஸார் மேலதிக விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். (இ-10-85)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரவி கருணாநாயக்கவிற்கு சிறப்புரிமைகள் தொடரும்



முன்னாள் வெளிவிவ கார அமைச்சர் ரவி கருணாநாயக்க பதவியில் இருந்து விலகிய போதிலும் அவருக்கு அமைச்சருக்கான சிறப்புரிமைகள் தொடர்ந்தும் வழங்கப்படும் என அரசியல் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதடினப்படையில், ரவி கருணாநாயக்க வெளிவிவகார அமைச்சுக்கு நியமித்த பணியாளர்கள் நீக்கப்பட மாட்டார்கள்.

ஒரு அமைச்சருக்கு இரண்டு அமைச்சு பதவிகள் வழங்கப்பட்டால், ஒரு அமைச்சுக்கான பணியாளர்களை நியமிக்க முடியும் என்பதால், ரவி கருணாநாயக்க நியமித்த பணியாளர்கள் நீக்கப்பட மாட்டார்கள் என தெரிய வந்துள்ளது.

வெளிவிவகார அமைச்சுடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் தொடர்ந்தும் பதவியில் இருப்பார்கள்.

இதனை தவிர ரவி கருணாநாயக்கவிற்கு வழங்கப்பட்ட பாதுகாப்பை தொடர்ந்து வழங்கவும் இணக்கம் காணப்பட்டுள்ளது. (இ-7)

# மீண்டும் அரசியலுக்குள் நான் பிரவேசிக்கவுள்ளேன்

## நெவில் தெரிவிப்பு



தான் மீண்டும் அரசியலுக்குள் பிரவேசிக்க எதிர பார்ப்பதாகவும் எதிர்வரும் பாராளுமன்ற பொதுத் தேர்தலில் முன்னணி கட்சியொன்றில் அபேட்சகராகப் போட்டியிடவுள்ளதாகவும் சைட்டம் மருத்துவ கல்லூரியின் தலைவர் டாக்டர் நெவில் பிரணாந்து தெரிவித்துள்ளார்.

தான் மக்களுக்குச் செய்யும் சேவையின் அடிப்படையில் அரசியலுக்கு வருவதற்கான உரிமை தனக்கு உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பல கோடி ரூபா செலவு செய்து அமைக்கப்பட்ட நெவில் பிரணாந்து வைத்தியசாலையை அரசுக்கு நன்கொடையாக வழங்க முன்வந்தேன். இது மக்களுக்கு சேவை செய்வதற்காகவே ஆகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மூன்று முனைகளில் ஆட்சியை கைப்பற்றும் முனைப்பில் ராஜபக்ஷர்கள்

மூன்று முனைகளில் ஆட்சியை கைப்பற்றும் முனைப்புக்களில் மகிந்த ராஜபக்ஷர்கள் ஈடுபட்டுள்ளதாக கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோர் இவ்வாறு மூன்று முனைகளில் ஆட்சியை கைப்பற்றும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்கள் சந்திப்புக்களை நடத்துதல், மத வழிபாடுகளை நடத்துதல் உள்ளிட்டவை மூலம் மக்களை தெளிவூட்டும் நடவடிக்கைகளில் மகிந்த ராஜபக்ஷ ஈடுபட்டுள்ளார்.



புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள ஶ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஊடாக தொகுதி அமைப்பாளர்களை நியமித்தல், இளைஞர் அணிகளை உருவாக்குதல், மகளிர் அணிகளை உருவாக்குதல் போன்றவை ஊடாக 20 இலட்சம் உறுப்பினர்களை கட்சியில் இணைக்கும் முயற்சியில் பசில் ராஜபக்ஷ ஈடுபட்டுள்ளார்.

நாட்டின் புத்திஜீவிகள், தொழில் வான்மையாளர்கள், நிபுணர்களை மறைமுகமாக இணைத்துக் கொண்டு மற்றுமொரு முனையில் கோத்தபாய ராஜபக்ஷ அணிதிரட்டி வருகின்றார் என ஊடகத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

புத்திஜீவிகளையும், தொழில் வான்மையாளர்களையும் இணைத்துக்கொண்டு நாட்டை கட்டியெழுப்பும் கோத்தபாயவின் திட்டம் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதல் முன்னெடுக்கப்பட உள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-7)






# மாகாணசபைத் தேர்தல்கள் ஒத்திவைக்கப்படக்கூடாது

## சு.க.முடிவுக்கு மனோ வரவேற்பு

சப்ரகமுவ கிழக்கு, வடமத்திய மாகாணசபைகளின் ஆயுட்காலம் இன்னும் சில மாதங்களில் முடிவுக்கு வருகிறது. இந்த சபைகளுக்கான தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட வேண்டுமென்ற 20ஆம் திருத்த யோசனையை கைவிட வேண்டும் என்றும் தேர்தல்கள் ஒத்திவைக்கப்படாமல் நடத்தப்பட வேண்டும் என்றும் ஶ்ரீலங்கா சுதந்திரக்கட்சி எடுத்துள்ள முடிவுகளை நாம் வரவேற்கிறோம் என ஜனநாயக மக்கள் முன்னணி-தமிழ் முற்போக்கு கூட்டணித் தலைவரும் தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சருமான மனோ கணேசன் தெரிவித்தார்.



இந்த ஒத்திவைப்பு அவசியமற்றது. ஒத்திவைக்க அரசியலமைப்பை திருத்த வேண்டும். இது நாட்டில் தேவையற்ற பிரச்சினைகளை ஏற்படுத்தும். அதை விட புதிய அரசியலமைப்பை கொண்டு வரலாம். அதற்கு இன்னும் சிறிது காலம் எடுக்கும்.

ஆகவே உரிய வேளையில் சப்ரகமுவ கிழக்கு, வடமத்திய மாகாணசபைகளின் தேர்தல்களை நடத்துவதே சாலச்சிறந்தது.

ஆனால், அதை அவசர அவசரமாக புது ஒரு தேர்தல் முறைமையை அறிமுகம் செய்து நடத்த முடியாது. உள்ளூராட்சி சபைகள் தொடர்பில் நாம் இப்போது ஏற்றுக்கொண்டுள்ள புதிய கலப்பு தேர்தல் முறைமை ஒரு முறை பரீட்சித்து பார்க்கப்பட வேண்டும். எனவே உள்ளூராட்சி சபைகள் தேர்தல்கள் புதிய முறைமையின் கீழ் முதலில் நடத்தப்பட வேண்டும்.

அதையடுத்து அதில் உள்ள நடைமுறை சிக்கல்களை கணக்கில் எடுத்து, உருவாக்கப்படும் புதிய மாகாண சபை தேர்தல் சட்டத்தின் கீழ் மாகாணசபை தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும். அதை இப்போது செய்ய முடியாது.

ஆகவே இப்போது நடத்தப்படவுள்ள சப்ரகமுவ கிழக்கு, வடமத்திய மாகாண சபைகளின் தேர்தல்கள், மாகாணசபை தேர்தல்கள் தொடர்பில் இப்போதும் நடைமுறையில் உள்ள பழைய விகிதாசார முறைமையின் கீழேயே நடத்தப்பட வேண்டும்.

இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு பொது செயலாளர் மகிந்த அமரவீரவிடம் நேற்றுக் காலை பேசியிருந்தார். எதிர்வரும் அமைச்சரவை கூட்டத்தில் இந்த பிரச்சினை எடுத்துக்கொள்ளப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)


பட்டுப்புடவைகளின் சோலை

சீமாட்டி

புடவைக்கடல் PVT (LTD)

கல்யாணப் பட்டுச்சாறிகள், குர்தாக்கள், பட்டுவேட்டிகள் (Shining Shirts), பஞ்சாபிகள், இன்னும் சிறுவர், சிறுமியருக்கான ஆடைவகைகள் என அனைத்து றெடிமேட் ரகங்களுக்கும் நாட வேண்டிய ஒரே இடம்.

சீமாட்டி



129, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

TP : 021 222 8564
Fax : 021 222 2102


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ரவி கருணாநாயக்கவின் பதவி விலகல் மக்களுக்கு கிடைத்த வெற்றி- அமரவீர

(கொழும்பு)

ரவி கருணாநாயக்கவின் பதவி விலகல் எதிரணியினருக்கோ அல்லது அரசாங்க தரப்பினருக்கோ கிடைத்த வெற்றியல்ல. அது மக்களுக்கு கிடைத்த வெற்றி என அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி தொடர்பில் குற்றச்சாட்டுக்களை எதிர்கொண்டிருந்த ரவி கருணாநாயக்க இராஜினாமா செய்திருந்தார்.

இது குறித்து சபையில் கருத்து தெரிவிக்கும் போதே மகிந்த அமரவீர இவ்வாறு தெரிவித்துள்ளார். (இ-7)



# சமாதானம்மிக்க சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

பிரிவினைகள் மற்றும் சந்தேகங்களின்றி நம்பிக்கையுடன் அனைவரும் சமூகத்தில் வாழ்வதற்கான உரிமையை உறுதி செய்வதனூடாகவே நாட்டில் பொருளாதார, சமூக மற்றும் இன அடிப்படையில் ஏற்படும் சகல பிரச்சினைகளுக்குமான தீர்வுகளைக் காணலாம் என ஜனாதிபதி தெரிவித்தார்.

வேற்றுமையை இல்லாதொழித்து அனைவரும் புரிந்துணர்வுடனும் நம்பிக்கையுடனும் செயற்படும் சமூகமொன்றினை எமது நாட்டில் கட்டியெழுப்புவதற்கு சகலரும் பிரிவினைகளின்றி ஒன்றுபட வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நேற்று முன்தினம் பிற்பகல் மாத்தறை வெஹெரஹேன பூர்வாராம ரஜமகா விகாரையில் இடம்பெற்ற வண.கிரம விமலஜோதி தேரருக்கு தென்னிலங்கையின் பிரதான சங்கநாயக்கர் பதவிக்கான நியமனப் பத்திரிகையை வழங்கும் புண்ணிய நிகழ்வில் உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)



# மேலும் 6 மாத சேவை நீடிப்பை கோருகிறார் கடற்படைத் தளபதி

இலங்கை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன மேலும் ஆறு மாத சேவை நீடிப்பை வழங்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கோரியுள்ளார் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன 55 வயதை எட்டியதையடுத்து, கடந்த பெப்ரவரி 22 ஆம் திகதி ஓய்வு பெறவிருந்தார். இதையடுத்து அவருக்கு ஜனாதிபதி ஆறுமாத சேவை நீடிப்பை வழங்கியிருந்தார்.



இந்த சேவை நீடிப்பு எதிர்வரும் 22 ஆம் திகதியுடன் முடிவடையவுள்ளது. இந்த நிலையிலேயே மேலும் ஆறு மாதகால சேவை நீடிப்பைக் கோரியுள்ளார்:

வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்னவுக்கு மீண்டும் ஆறு மாத கால சேவை நீடிப்பு அளிக்கப்பட்டால், றியர் அட்மிரல் ட்ராவிஸ் சின்னையா மற்றும் சிறிமேவன் விஜேசிங்க ஆகியோர் கடற்படைத் தளபதி பதவியைப் பெறும் வாய்ப்பை, இழக்க நேரிடும் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஏமாற்று நாடகங்களால் பொதுமக்களை இனியும் முட்டாளாக்க முடியாது

## மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

இராஜினாமா போன்ற ஏமாற்று நாடகங்களால் பொதுமக்களை இனியும் முட்டாளாக்க முடியாது என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

முன்னாள் நிதியமைச்சராகவும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சராகவும் இருந்த ரவி கருணாநாயக்க மத்திய வங்கி பிணை முறி மோசடி விவகாரத்தில் குற்றம் சாட்டப்பட்டுள்ள அர்ஜுன் அலோசியஸின் பெர்பீசுவல் ட்ரஷரீஸ் நிறுவனத்தின் நிதிப்பங்களிப்பில் வீடொன்றைக் கொள்வனவு செய்துள்ளதாக பரபரப்பான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்தன.

இதன் காரணமாக அவர் தனது அமைச்சுப் பதவியில் இருந்து கடந்த 10ஆம் திகதி இராஜினாமா செய்திருந்தார்.

இந்நிலையில் ரவி கருணாநாயக்கவின் இராஜினாமா குறித்து முன்னாள் ஜனாதிபதி சிங்கள ஊடகம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவிக்கையில் அதனை ஏமாற்று நாடகமாக சித்திரித்துள்ளார்.



அத்துடன் ரவி கருணாநாயக்கவின் விவகாரத்தில் மேலும் பலர் பின்னணியில் மறைந்திருப்பதாக குற்றம் சாட்டியுள்ள மகிந்த, பொதுமக்கள் முன்னைவிட விழிப்புணர்வு பெற்று விட்டார்கள் என தெரிவித்துள்ளார்.

மேலும், மக்கள் நீதிமன்றங்களிலிருந்து எவரும் தப்பித்து விட முடியாது. அதேபோன்று பொதுமக்களும் தற்போது ஒரு தீர்மானத்துக்கு வந்து விட்டார்கள். அதன் காரணமாக பொதுமக்களை ஏமாற்ற முடியாது என்றும் மகிந்த தெரிவித்துள்ளார். (இ-7)




- ❖கிமு 3114 - மாயா நாட்காட்டி தொடங்கப்பட்டது.
- ❖1415 - நூறு ஆண்டுப் போர்: இங்கிலாந்தின் ஐந்தாம் ஹென்றி மன்னன் 8000 பேருடன் பிரான்சை அடைந்தான்.
- ❖1516 - புனித ரோமப் பேரரசன் ஐந்தாம் சார்ல்ஸ் நேப்பில்சையும் பிரான்சின் முதலாம் பிரான்சிஸ் மிலானையும் உரிமை கொண்டாட இரு நாடுகளுக்கும் இடையில் உடன்பாடு எட்டப்பட்டது.
- ❖1536 - ஜப்பானில் கியோட்டோவில் உள்ள என்றியாக்கு கோயிலின் பௌத்த மதகுருக்கள் கியோட்டோவில் இருந்த 21 நிச்சிரன் கோயில்களைத் தீக்கிரையாக்கினர்.
- ❖1849 - யாழ்ப்பாணம் பதில் மறை மாவட்டம் நிறுவப்பட்டது.
- ❖1913 - ஹரி பிறியர்லி துருப்பிடிக்காத எஃகுவைக் கண்டுபிடித்தார்.
- ❖1920 - போலந்து - சோவியத் ஒன்றியம் போர் ஆரம்பமாயிற்று. ஓகஸ்ட் 25 இல் முடிவடைந்த இப்போரில் செம்படையினர் தோற்றனர்.
- ❖1937 - ஷங்காய் போர் ஆரம்பமானது.
- ❖1954 - பாகிஸ்தான் தனது தேசிய கீதத்தை முதன் முறையாக வானொலியில் ஒலிபரப்பியது.
- ❖1960 - மத்திய ஆபிரிக்கக் குடியரசு பிரான்சிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.
- ❖1961 - ஜேர்மன் ஜனநாயகக் குடியரசு பேர்லினின் கிழக்கு மற்றும் மேற்கு எல்லைகளை மூடி கிழக்கு ஜேர்மனியினர் தப்பிச் செல்லா வண்ணம் பேர்லின் சுவரைக் கட்ட ஆரம்பித்தது.
- ❖2004 - கறுப்பு வெள்ளி: மாலைதீவு தலைநகர் மாலேயில் இடம்பெற்ற அமைதியான அரச எதிர்ப்புப் போராட்டம் இராணுவத்தினரால் முறியடிக்கப்பட்டது.
- ❖2004 - புருண்டியில் கடும்பா அகதிகள் முகாமில் இருந்த 156 டூட்சி இன அகதிகள் படுகொலை செய்யப்பட்டனர்.
- ❖2004 -28ஆவது ஒலிம்பிக் விளையாட்டுக்கள் எதென்ஸில் ஆரம்பமாயின.
- ❖2006 - யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டி தேவாலயத்தின் மீது இலங்கை இராணுவத்தினரின் எறிகணை வீச்சில் பல பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

பிறப்புகள்

- ❖1814 - ஆண்டர்ஸ் யோனாஸ் ஆங்ஸ்டிராம், சுவீடிய இயற்பியலாளர் (இ. 1874)
- ❖1888 - ஜான் லோகி பைர்டு, தொலைக்காட்சியைக் கண்டுபிடித்த இசுக்கொட்டிய பொறியியலாளர் (இ. 1946)
- ❖1899 - ஆல்பிரட் ஹிட்ச்காக், ஆங்கிலேய-அமெரிக்க இயக்குநர் (இ. 1980)
- ❖1918 - பிரடெரிக் சேனர், நோபல் பரிசு பெற்ற ஆங்கிலேய வேதியியலாளர் (இ. 2013)
- ❖1924 - டி. கே. மூர்த்தி, மிருதங்க இசைக்கலைஞர்
- ❖1926 - பிடல் காஸ்ட்ரோ, கியூபாவின் 15ஆவது அரசுத் தலைவர், புரட்சியாளர் (இ. 2016)
- ❖1933 - வைஜயந்திமாலா, தென்னிந்தியத் திரைப்பட நடிகை.
- ❖1946 - ஜி. எல். பீரிஸ், இலங்கை அரசியல்வாதி
- ❖1952 - பிரதாப் போத்தன், இந்திய நடிகர்

இறப்புகள்

- ❖1826 - ரெனே லென்னக், இதயத்துடிப்பு மானியைக் கண்டுபிடித்த பிரெஞ்சு மருத்துவர் (பி. 1781)
- ❖1910 - புளோரன்ஸ் நைட்டிங்கேல் (பி. 1820)
- ❖1917 - எடுவர்டு பூக்னர், நோபல் பரிசு பெற்ற செருமானிய வேதியியலாளர் (பி. 1860)
- ❖1946 - எச். ஜி. வெல்ஸ், ஆங்கிலேய எழுத்தாளர் (பி. 1866)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 120 | 70 | 80 | 120 | 90 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 100 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 300 | 300 | 300 | 250 | 350 | 300 |
| தக்காளி | 140 | 200 | 110 | 140 | 160 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 120 | 60 | 80 | 80 | 60 |
| கோவா | 120 | 160 | 70 | 120 | 120 | 120 |
| கரட் | 100 | 200 | 150 | 170 | 200 | 180 |
| பூசணி | 40 | 100 | 50 | 50 | 60 | 80 |
| புடோல் | 50 | 120 | 50 | 60 | 80 | 80 |
| வாழைக்காய் | 80 | 120 | 80 | 80 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 140 | 200 | 150 | 160 | 160 | 160 |
| பெரிய வெங்காயம் | 100 | 140 | 115 | 140 | 140 | 100 |
| பாகற்காய் | 120 | 200 | 150 | 180 | 200 | 160 |
| வெண்டிக்காய் | 60 | 100 | 70 | 60 | 100 | 80 |
| கருணைக்கிழங்கு | 120 | 150 | 50 | 120 | 160 | 120 |
| பயற்றங்காய் | 100 | 100 | 100 | 120 | 100 | 100 |
| லீக்ஸ் | 100 | 120 | 70 | 100 | 100 | 100 |
| பீற்றூட் | 40 | 100 | 40 | 50 | 60 | 100 |
| கறிமிளகாய் | 100 | 200 | 150 | 120 | 120 | 150 |
| முருங்கைக்காய் | 50 | 20 | 30 | 40 | 60 | 70 |
| போஞ்சி | 200 | 200 | 120 | 130 | 200 | 120 |
| கத்தரிக்கும்பள்ள | 80 | 80 | 50 | 80 | 80 | 70 |
| கீரை – 1பிடி | 30 | 20 | 40 | 30 | 30 | 25 |
| தேசிக்காய் | 80 | 40 | 70 | 60 | 160 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 40-60 | 70 | 70 | 50-70 | 60 |
| இராசவள்ளி | 180 | 200 | — | 200 | — | — |
| வெங்காயப்பூ | 150 | 200 | 150 | 200 | 200 | — |
| முள்ளங்கி | 60 | 100 | 30 | 60 | 80 | 60 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 10 | 40 | 40 | 25 |
| வல்லாரை | 10 | 20 | 20 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | 60 | 60 | - | 50 | 80 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சர் பதவியிலிருந்து இராஜினாமா செய்வது மோசடிக்கு தண்டனையல்ல

## உரிய விசாரணை வேண்டுமென ஜே.வி.பி.விடாப்பிடி



மோசடியில் ஈடுபடுபவர்கள் தப்பித்துக் கொள்வதற்காக, இஸ்லாம் சமயத்தில் காணப்படும் விடயங்களை மேற்கோள்காட்டிப் பேசுவதற்கு இடமளிக்க வேண்டாம் என சமயத் தலைவர்களிடம் கேட்டுக் கொள்வதாக மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

பெலவத்தையிலுள்ள ஜே.வி.பி. தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இந்தக் கருத்துக்களை வலியுறுத்தினார்.

பதவி விலகியுள்ள ரவி கருணாநாயக்கவுக்கு எதிராக அரசாங்கம் சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்காமல், மோசடியை மூடி மறைப்பதற்கு முயற்சிக்கிறதா? என்ற சந்தேகம் வலுவடைந்துள்ளது.

பாராளுமன்றத்தில் கருத்துத் தெரிவித்த அமைச்சர்கள் பலர் ரவி கருணாநாயக்கவை முன்னுதாரணமாகக் கொள்ளுமாறு கூறுகின்றனர். எனினும், மோசடிக்காரர்களை முன்னுதாரணமாக எடுக்க வேண்டாம் என பாடசாலை மாணவர்களிடம் நாம் கேட்டுக்கொள்கிறோம்" என்றார்.

பொதுமக்களின் பணத்தை மோசடி செய்து அகப்பட்டு, அது தொடர்பில் பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வரப்பட்ட பின்னர் மேற்கொண்ட பதவி விலகலை முன்னுதாரணமாகக் கொள்ள முடியாது. இது நல்ல அரசாங்கத்தின் கொள்கையாகவும் இருக்க முடியாது.

இவ்வாறான செயற்பாடுகளால் மக்கள் ஏமாந்து விடக்கூடாது. அது மாத்திரமன்றி மோசடிக்காரர்கள் தம்து பிள்ளைகள், மனைவிமாரை முன்னிலைப்படுத்தி, உணர்வுகளை வெளிக்காட்டி அதன் பின்னால் ஒளிந்து கொள்வதற்கு முயற்சிக்கின்றனர். விமல் வீரவன்சவின் கைது, யோஷித ராஜபக்ஷவின் கைது மற்றும் ரவி கருணாநாயக்கவின் பதவி விலகல் போன்றவற்றில் இதனைக் காண முடிகிறது.

நாமல் ராஜபக்ஷ சிறையிலிருந்து வெளியேறும் போது திறந்த வாகனத்தில் இரு கரங்களையும் கூப்பிக் கொண்டு செல்வதைப் பார்த்த போது ரஜனிகாந்தின் திரைப்படத்தின் காட்சியைப் போல இருந்தது. ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ சிறையிலிருந்து சென்ற வாகனத்தில் மக்கள் ஏற முயற்சித்ததைப் பார்க்கும்போது ஜெயலலிதாவின் வாகனத்தை மக்கள் சூழ்ந்துகொண்டதைப்போன்று இருந்தது. இவ்வாறான சம்பவங்களால் மக்கள் ஏமாந்து விடக்கூடாது.

ரவிகருணாநாயக்க அமைச்சுப் பதவியிலிருந்து விலகியிருந்தாலும் அவர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்ச்சியாக விசாரிக்கப்பட்டு சட்டரீதியாக தண்டனை வழங்கப்பட வேண்டும் என ஜே.வி.பி. வலியுறுத்தியுள்ளது.

அமைச்சுப் பதவியிலிருந்து இராஜினாமா செய்திருப்பது மோசடிக்கு வழங்கப்பட்ட தண்டனை அல்ல. இலஞ்ச ஊழல் சட்டம், குற்றத்தை மறைக்கும் சட்டம், சட்டவிரோத பணப் பரிமாற்றச் சட்டம் போன்றவற்றின் கீழ் ரவி கருணாநாயக்கவுக்கு எதிராக வழக்குத் தொடர முடியும்.

எனவே வெளியாகியிருக்கும் தகவல்களுக்கு அமைய சட்டரீதியாக அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# இந்த அரசு முழுக்க முழுக்க ஐ.தே. கட்சியின் அரசாகும்

## ரோஹித கூறுகிறார்

(கொழும்பு)

இந்த அரசாங்கம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அரசாங்கம் அல்ல. இது முழுக்க முழுக்க ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கமாகும் என நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

ஜாஎல பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த அரசாங்கம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அரசாங்கம் அல்ல. இது முழுக்க முழுக்க ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கமாகும்.

மெய்யான சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் அரசாங்கத்தில் இருக்க மாட்டார்கள். அவர்கள் மகிந்த ராஜபக்ஷவுடன் இருப்பார்கள்.

சிறிமாவோ பண்டாரநாயக்க இந்த நாட்டை தன்னிறைவான நாடாக மாற்ற அர்ப்பணிப்புடன் செயற்பட்டார். ஆர்.பிரேமதாச, ஜே.ஆர். ஜெயவர்தன போன்றவர்கள் பிழைகள் இருந்தாலும் நாட்டுக்கு சேவையாற்றியிருந்தனர்.

சந்திரிகாவின் காலத்தில் என்றால் எதுவும் நடக்கவில்லை. நாமும் அந்த அரசாங்கத்தில் அங்கம் வகித்தோம் என்றாலும் உண்மையை சொல்ல வேண்டும் அல்லவா? மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியே இந்த நாட்டுக்கு பாரிய சேவையை ஆற்றியிருந்தார்.

பிளவடையவிருந்த நாட்டை மீளவும் ஒன்றிணைந்து பயங்கரவாதத்தை இல்லாதொழித்து பாரிய அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்தார். இதனை நாம் எவ்வித அச்சமும் இன்றி கூற முடியும் என ரோஹித அபேகுணவர்தன தெரிவித்துள்ளார். (இ-7)

# இளம் பிக்குகளின் மோசமான செயற்பாடு

## அதிருப்தியில் மைத்திரி

(கொழும்பு)

இளம் பிக்குமார்கள் சிலர் நடந்து கொள்ளும் விதத்தால் பிக்குகள் தொடர்பில் மக்களிடம் ஏற்படக்கூடிய தவறான எண்ணங்களைத் தவிர்க்க முடியாது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

மாத்தறை வெஹெரஹேன பூர்வாராம ரஜமகா விகாரையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஆர்ப்பாட்டங்கள் மற்றும் பேரணிகளில் சில இளம் பிக்குமார்கள் நடந்து கொள்ளும் விதம் ஊடகங்களினூடாக உலகம்முழுவதும் காண்பிக்கப்படுவதனால் பிக்குகள் தொடர்பாக மக்களிடம் ஏற்படக்கூடிய தவறான எண்ணங்களைத் தவிர்க்க முடியாது.

எனவே, உன்னதமான பிக்குகள் சமூகத்தின் கௌரவத்தையும் நன்மதிப்பையும் பாதுகாக்கும் வகையில் செயற்பட வேண்டும் என ஜனாதிபதி கோரியுள்ளார். (இ-7)

## வாரம் ஒரு தகவல்

### அரசனும் கொள்ளைக்காரனும்

*மாவீரன் அலெக்சாண்டர் முன்னிலையில் கைது செய்யப் பெற்ற டியோண்டஸ் என்ற கடல் கொள்ளைக்காரன் விசாரணைக்காகக் கொண்டு வந்து நிறுத்தப்பட்டான்.*

*அலெக்சாண்டர் அவனை ஏற இறங்கப் பார்த்தார். பின்னர் அவனிடம் இத்தகைய நாசவேலைகளைச் செய்ய உனக்கு எங்கிருந்து துணிவு வந்தது எனக் கேட்டான்.*

*அவன் இதற்கு மறுமொழியாக, அரசே உலகத்தையெல்லாம் அடக்கியாள வேண்டுமென்றுள்ள துணிவு உங்களுக்கு எங்கிருந்து வந்ததோ அங்கிருந்து தான் எனக்கும் இத் துணிவு வந்தது எனக் கூறினான்.*

*அதென்ன அப்படிப் பேசுகிறாய்? என்று கேட்டான் அலெக்சாண்டர்.*

*உண்மையாகத்தான் சொல்கிறேன் அரசே! என்னிடம் ஒரு கப்பல் இருப்பதால் நான் கொள்ளைக்காரன் என்று பேசப்படுகிறேன்; தங்களிடம் ஒரு மாபெரும் கடற்படை இருப்பதால் தாங்கள் மாவீரன் என்று புகழப்படுகிறீர்கள். நாம் இருவரும் செய்யும் செயல் அளவில் சிறிது பெரிதே தவிர வேறு எதுவும் வேற்றுமை இல்லையே என்று சொன்னான் டியோண்டஸ்.*

*இம் மொழிகளைக் கேட்ட அலெக்சாண்டர் வேறு எதுவும் பேசாது அவனை விடுதலை செய்தான்.*

**கவிஞர் தே.ப.பெருமாள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பா.ஜ.க. தமிழக அரசை உருட்டி விளையாடுகிறது

## வைகோ காட்டமான பேட்டி

மத்திய பாரதிய ஜனதா அரசு தமிழக அரசை உதை பந்து போல உருட்டி விளையாடுகிறது என திருச்சியில் வைகோ பேட்டியளித்துள்ளார்.

திருச்சியில் இன்று ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ நிருபர்களுக்கு பேட்டியளிக்கும் போது.

மத்திய பா.ஜனதா அரசு தமிழக அரசை உதைபந்து போல உருட்டி விளையாடுகிறது. தமிழகத்தில் இப்போது அபாயமான சூழல் உள்ளது. தமிழகத்தை காங்கிரசும், பா.ஜனதாவும் மாறி மாறி தொடர்ந்து வஞ்சித்து கொண்டே தான் வருகின்றன.

காவிரி பிரச்சினையில் காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க வேண்டும், ஒழுங்குமுறை ஆணையம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கைகளை நிறைவேற்றாமலேயே மத்திய அரசு உள்ளது. இது தொடர்பான பிரச்சினையில் மத்திய அரசு பாராளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி தாக்கல் செய்கிறோம் என்று பதில் அளித்தது. ஆனால் 2 முறை பாராளுமன்றம் கூடியும் தீர்மானம் நிறைவேற்றப்படவில்லை.


ஏற்கனவே தமிழ்நாடு வரட்சியினாலும் காவிரி வரண்டதாலும் பாலைவனமாக மாறி வருகிறது. இந் நிலையில் நெடுவாசல், கதிராமங்கலம் போன்ற இடங்களில் தமிழக வாழ்வாதாரங்களை அழித்து திட்டங்களை நிறைவேற்ற மத்திய அரசு நினைக்கிறது.

தமிழர்கள் ஜல்லிக்கட்டுக்காக மட்டுமல்ல, தமிழர்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கும் எந்த ஒரு உரிமையையும் விட்டு கொடுக்க மாட்டோம். ஈழத்தமிழர்கள் தொடர்பான பிரச்சினையில் நாங்கள் ஆரம்பத்தில் இருந்த அதே நிலையைத்தான் இப்போதும் கடைப்பிடிக்கிறோம். ஈழத்தில் பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று ம.தி.மு.க. வலியுறுத்திய பிறகுதான் மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதா சட்டசபையில் பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டுமென ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றினார்.

தஞ்சையில் செப்டெம்பர் 15 ஆம் திகதி அண்ணா பிறந்தநாள் விழா மாநாடு ம.தி.மு.க. சார்பில் நடத்தப் படவுள்ளது. இது ம.தி.மு.க.வின் முந்தையை மாநாட்டை காட்டிலும் பிரமாண்டமாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

அப்போது மாநில நிர்வாகிகள் துரை பாலகிருஷ்ணன், டாக்டர் ரொஹையா ஷேக் முகமது மற்றும் வீரபாண்டியன், சோமு, சேரன் உட்பட பலர் உடனிருந்தனர். (8)

# எகிப்தில் புகையிரத விபத்து 43 பேர் பலி!



எகிப்து நாட்டின் அலெக்ஸாண்ட்ரியா நகரில் இரண்டு ரயில்கள் நேருக்கு நேர் மோதிக் கொண்ட விபத்தில், 43 பேர் பலியாகினர்.

மீட்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. மீட்கப்பட்டவர்கள் உடனடியாக அருகில் உள்ள வைத்தியசாலைக்கு நோயாளர்காவு வண்டி மூலம் அனுப்பி வைக்கப்பட்டனர் என எகிப்து நாட்டின் சுகாதாரத் துறை செயலாளர் தெரிவித்தார்.

விபத்துக்கான காரணம் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சிக்னல் மாற்றி போடப்பட்டதால் விபத்து நிகழ்ந்திருக்கலாம் என்று கூறப்படுகிறது.

கடந்த 10 ஆண்டுகளில் எகிப்தில் நடைபெற்ற மிகப் பெரிய விபத்து இதுதான் என்று அந்நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன. கடந்த 2013 ஆம் ஆண்டு கிஸாவில் நிகழ்ந்த விபத்தில் 19 பேர் உயிரிழந்தனர். (8)

### மீண்டும் ஜனாதிபதியாக உஹூரு கென்யாட்டா

கென்யாவில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி உஹூரு கென்யாட்டா மீண்டும் வெற்றி பெற்றுள்ளார் என நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கென்யாவில் புதிய ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான தேர்தல், கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இதில் ஜனாதிபதி உஹூரு கென்யாட்டா 8.2 மில்லியன் வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றுள்ளார். இவருக்கு 54 சதவீதமான வாக்குகள் கிடைத்துள்ளன என சுதந்திரமான மற்றும் எல்லை ஆணையகத்தின்தலைவர் அறிவித்துள்ளார்.

இதேவேளை, இவரை எதிர்த்துப் போட்டியிட்ட எதிர்க்கட்சி ஜனாதிபதி வேட்பாளரான ரைலா ஒடின்கா 6.76 மில்லியன் வாக்குகளையே பெற்றுள்ளார்.

இதற்கிடையில், இந்தத் தேர்தலில் முறைகேடு இடம் பெற்றுள்ளதாக ஒடின்கா தெரிவித்திருந்தார். இந்தத் தேர்தல் முடிவுகளை நிராகரித்துள்ள எதிர்க்கட்சியினர் உண்மையான தீர்வை வெளிப்படுத்தவில்லை எனவும் கூறியுள்ளனர். (8)

# சூடு பிடிக்கும் அரசியல் களம்



அ.தி.மு.கவிற்குள் உட்பூசல்கள் அதிகமாகி உச்சகட்ட மோதல்கள் வெடித்துவரும் நிலையில் தினகரன் அதிரடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றார். அதன் முதற்கட்டமாக தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணத்தினை மேற்கொண்டு ஆதரவு திரட்டும் செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ள தினகரன் நாளை 14 ஆம் திகதி மதுரையில் மாபெரும் கூட்டம் ஒன்றினை ஏற்பாடு செய்துள்ளார்.

ஆரம்பத்தில் குறித்த கூட்டத்திற்கு பொலிஸார் அனுமதி மறுத்து வந்த நிலையில், அ.தி.மு.க. அம்மா அணியின் நகர செயலாளர் சரவணன் மதுரை உயர் நீதிமன்றத்தில் அனுமதி கோரி மனுத்தாக்கல் செய்திருந்தார்.

குறித்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது பொதுக் கூட்டத்திற்கு அனுமதி வழங்க வேண்டும்என நீதிமன்றம்உத்தரவிட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து பொதுக் கூட்டத்திற்கான ஏற்பாடுகள்தினகரன்ஆதரவாளர்களினால் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, அதிமு கவின் துணைப் பொதுச் செயலாளராக செயற்பட தினகரனுக்கு அனுமதியில்லை என பழனிச்சாமி மற்றும் ஓ.பி.எஸ். அணியினர் இணைந்து தீர்மானம் எடுத்துள்ள நிலையில் தினகரன் தன் பக்கம் ஆதரவு திரட்டுவதில் மும்முரமாகியுள்ளமையும், சசிகலாவின் சகோதரன் திவாகரன், தினகரனுக்கு ஆதரவுகளை தெரிவித்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (8)

# இந்தியா மீது ஐ.எஸ். இலக்கு

## விசாரணையின் போது வெளிவந்த உண்மைகள்

தமிழகம் மற்றும் கேரளாவில் ஐ.எஸ். தீவிரவாதிகள் பிரமுகர்களை கொலை செய்ய திட்டமிட்டதுடன், கொடைக்கானலில் யூதர்கள் மீது தாக்குதல் நடத்த திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



ஐ.எஸ். தீவிரவாதிகளுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ள மொய்னுதீன் பாரா கடவத்திடம் மேற்கொண்ட விசாரணையின் போதே இந்த விடயம் வெளிவந்துள்ளதாக புலனாய்வு முகமை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்த குற்றப்பத்திரிகையை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை எர்ணாகுளம் நீதிமன்றில் சமர்ப்பித்து கருத்து தெரிவித்த போதே இவ்வாறு அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அவரிடம் இருந்த கையடக்கத் தொலைபேசி மற்றும் மடிக்கணனி ஆகியவற்றில் ஐ.எஸ். இயக்கத்துடன் தொடர்பு வைத்திருந்த தகவல் கிடைத்துள்ளது என்றும் புலனாய்வு முகமை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, வழக்கில் மற்றொரு குற்றவாளியான சாஜீர், அமீரகம் வழியாக ஆப்கானிஸ்தானுக்கு தப்பி சென்றுள்ளதாகவும் அவரை கைது செய்ய அதிகாரிகள் தீவிர நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (8)

# வடகொரியா முதலில் அமெரிக்காவை தாக்கினால் சீனா நடுநிலையாக இருக்க வேண்டும்-அரச ஊடகம்

(பீஜிங்)

அமெரிக்கா மீது வடகொரியா முதலில் அணுஆயுத தாக்குதல் நடத்தினால் சீனா நடுநிலையாக செயற்பட வேண்டுமென சீனாவின் அரசு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தச் செய்தியில், 'வடகொரியா முதலில் அமெரிக்க மண்ணில் தாக்குதல் நடத்தினால் சீனா நடுநிலையாக இருக்கும் என்பதை முதலில் உறுதிபடுத்த வேண்டும்.

அதுவே அமெரிக்கா முதலில் வடகொரியா மீது தாக்குதல் நடத்தினால் அதை சீனா தடுக்க வேண்டும்' என கூறியுள்ளது. (8)

## சிரியாவில் தற்கொலைப் படை தாக்குதல்- 23 பேர் உயிரிழப்பு



(பெய்ரூட்)

சிரியாவின் ஜோர்தான் பகுதியில் நடத்தப்பட்ட தற்கொலைப் படை தாக்குதலில் சுமார் 23 கிளர்ச்சியாளர்கள் கொல்லப்பட்டனர்.

சிரியாவில் கிளர்ச்சியாளர்கள் மற்றும் ஐ.எஸ்.தீவிரவாதிகளுக்கு எதிராக ஜனாதிபதி ஆசாத் தலைமையிலான அரசு படைகள் தாக்குதல் நடத்தி வருகின்றது. இதனிடையே கிளர்ச்சியாளர்கள் படை மற்றும் ஐ.எஸ். தீவிரவாதிகள் படைகள் ஒன்றின் மீது ஒன்று தாக்குதல் நடத்தும்.

இந்நிலையில், சிரியாவின் ஜோர்தான் பகுதியில் நடத்தப்பட்ட தற்கொலைப் படைத் தாக்குதலில் சுமார் 23 கிளர்ச்சியாளர்கள் கொல்லப்பட்டனர். ஏராளமானோர் காயம் அடைந்தனர். அதில் பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

நசிப் எல்லைக்கு அருகில் இத்தாக்குதல் நடத்தப்பட்டதாக, மனிதவுரிமைக்கான சிரிய கண்காணிப்பு மையம் தெரிவித்துள்ளது.

இத்தாக்குதலுக்கு இது வரை எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. (8)

# ட்ரம்பை எதிர்த்து வடகொரியாவில் திரண்ட மாபெரும் மக்கள் பேரணி

(பியாங்யாங்)

உலகம்இதுவரை காணாத தீயையும் சீற்றத்தையும் வடகொரியா சந்திக்கும் என்று மிரட்டல் விடுத்த அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்புக்கு எதிராக பல்லாயிரக்கணக்கான மக்கள் பேரணி நடத்தினர்.



தற்போது அமெரிக்கா இராணுவ பயிற்சி மேற்கொள்ளும் குயாம் தீவு மீது நீண்ட தூரம் சென்று தாக்கும் க்வாசாங்-12 ஏவுகணையை வீச திட்டமிட்டுள்ளதாக தெரிவித்திருந்த நிலையில் அதற்கு பதிலடி கொடுக்கும் விதத்தில் வடகொரியா கடுமையான [illegible]க்க நேரிடும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கடும் எச்சரிக்கையுடன் சமீபத்தில் மிரட்டல் விடுத்தார்.

இந்நிலையில், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பின் மிரட்டலுக்கு எதி[illegible] வகையில் வட கொரியாவின் தலைநகரான பியாங்யாங் நகரில் உள்ள கிம் ஈ சுங் சதுக்கத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் ஒன்று திரண்டு மாபெரும் பேரணி ஒன்றை நடத்தினர்.

வெண்ணிற சட்டைகளை அணிந்திருந்த அவர்கள் அனைவரும் வடகொரிய ஜனாதிபதியின் நடவடிக்கைகளுக்கு ஆதரவாகவும், டொனால்ட் ட்ரம்ப்பை எதிர்த்தும் முழக்கங்களை எழுப்பினர்.

இந்தப் பேரணியை அந்நாட்டின் அனைத்து ஊடகங்களும் முக்கிய செய்தியாக வெளியிட்டு மகிழ்ந்தன. இன்னும் ஒருசில நாட்களில் குவாம் தீவின் அருகில் உள்ள இலக்குகளை குறிவைத்து நான்கைந்து ரொக்கெட்டுகள் ஏவப்படும் என வடகொரியா நாட்டின் ரொக்கெட் தொழில்நுட்ப தலைமை இயக்குநர் கூறிய கருத்துகளும் தொடர்ந்து ஒளிபரப்பானது. (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனத்தின் 15 ஆம் நாள் திருவிழாவின் மாலை நேர வீதியுலாக் காட்சி.

# தெய்வீகச் சிறப்பு நிகழ்வுகளில் இன்று அறுபடை ஆண்டவன் மகிமை சொற்பொழிவு

நல்லூர்கந்தசுவாமிஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு உலக சைவத் திருச்சபை நடத்தும் தெய்வீகச் சிறப்பு நிகழ்வுகளின் 17 ஆம் நாள் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை6.45மணிமுதல் இரவு 7.45 மணிவரை நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் சைவப் புலவர் சிவஸ்ரீ கதிர்குமார சுவாமி சுமுகலிங்க சிவாச்சாரியார்தலைமையில்இடம்பெறும். இதில் “ஆறுபடைஆண்டவன் மகிமை ”எனும் தலைப்பில் சைவநெறி சன்மார்க்கர் செல்வன் வி. விஸ்ணுயன் சொற்பொழிவாற்றுவார். (இ-3)

# ‘மனக் கட்டுப்பாடு’ஆன்மீக அருளுரை

நல்லூர்உற்சவகாலத்தை முன்னிட்டு யாழ். சின்மயா மிஷன் நடத்தும் ஆன்மீக அருளுரை (ஞான யக்ஞம்) இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு 7.30 மணிமுதல் 8.15 மணிவரை இல. 700, பருத்தித்துறை வீதி, நல்லூரில்அமைந்துள்ளசின்மயா மிஷனில் இடம்பெறும். இதில் “ மனக்கட்டுப்பாடு ”எனும் தலைப்பில் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா ஆன்மீக அருளுரை வழங்குவார். (இ-3)

# தெய்வீக இசையரங்கின் 17ம் நாள் நிகழ்வு இன்று

இளங்கலைஞர் மன்றம் நல்லூர் முருகன் உற்சவ காலத்தையொட்டி தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கின் 17 ம் நாள் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6.45 மணி முதல் இரவு 8 மணி வரை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம்பெறும். இதில் பாட்டு- கிருபா சக்திகருணா, வயலின்-கா.குகபரன், மிருதங்கம்-வி.ரமணா, முகர்சிங்- சி.செந்தூரன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-3)

# அவன்கார்ட் ஆயுதக்களஞ்சிய வழக்கு நவம்பர் 17ம் திகதிவரை ஒத்திவைப்பு

தெற்கு கடற் பிரதேசத்தில் மிதக்கும்ஆயுத களஞ்சியமான அவன்கார்ட் நிறுவனத்தை நடத்திச் செல்வதற்கு மெரிடைம் தனியார் நிறுவனத்திற்கு அனுமதியை வழங்கிய காரணத்தினால் அரசாங்கத்திற்கு 11.4 மில்லியன் ரூபா நட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக குற்றம் சாட்டப்பட்டுள்ள முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, அவன்கார்ட் நிறுவனத்தின் தலைவர் நிசங்க சேனாதிபதி உள்ளிட்ட 8 பேரின் மீது தொடரப்பட்ட வழக்கு எழுத்துமூல சமர்ப்பணத்திற்காக எதிர்வரும் நவம்பர் 17 ஆம் திகதிக்கு ஒத்திவைத்து கொழும்பு மேலதிக நீதவான் புத்திக ஸ்ரீராகுல உத்தரவிட்டுள்ளார்.

எவ்வாறாயினும்அனைத்து பிரதிவாதிகளுக்கும் எதிரான எழுத்துமூல சமர்ப்பணம் வழங்கப்பட்டதையடுத்து குற்றச்சாட்டுக்கான எழுத்துமூல சமர்ப்பணங்கள் சமர்ப்பிப்பதற்கான காரியாலயத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும் நீதவான் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிற்கு உத்தரவிட்டிருந்தார்.

இவ்வாறு குற்றச்சாட்டுக்கான எழுத்துமூல சமர்ப்பணங்கள் வழங்கப்பட்டிருந்தாலும் வழங்கப்படவில்லை என கருதி வழக்கை முன்னெடுத்துச் செல்ல முடியுமா? என்பது தொடர்பில் எதிர்வரும் நவம்பர் மாதம் 17 ஆம் திகதியன்று அறிவிப்பதாக நீதவான் தெரிவித்துள்ளார்.

முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, முன்னாள் உதவிச் செயலாளர் சுஜாதா தமயந்தி ஜயரத்ன, முன்னாள் இராணுவ மேஜர் பாலித ஜயசிறி பிரணாந்து, அதிகாரி கொடவல, முன்னாள் கடற்படை தளபதி ரியர் அட்மிரல் சோமதிலக திஸாநாயக்க, அவன்கார்ட் நிறுவனத்தின் தலைவர் நிசங்க சேனாதிபதி, முன்னாள் கடற்படை தளபதி ஜயநாத் குமாரசிறி கொலமபகே, முன்னாள் கடற்படை தளபதி வயிஸ் அட்மிரல் எஸ்.எம்.பிரான்ஸிஸ் டயஸ் ஜயரத்ன பெரேரா ஆகியோருக்கு எதிராகவே இவ்வாறு வழக்கு தொடரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இசைப் பேருரையில் ‘பாதுகா பட்டாபிஷேகம்’

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தப் பெருமானின் மஹோற்சவத்தை முன்னிட்டு சைவமகாசபை நடத்திவரும்தெய்வீக இசைப் பேருரை (கதாபிரசங்கம்) இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணிமுதல் இரவு 8 மணி வரை நல்லை ஆதீன குருமூர்த்த மண்டபத்தில் இடம்பெறும். கந்த புராணம் பற்றிய தொடர் இசைப்பேருரையில் “பாதுகா பட்டாபிஷேகம்” எனும் தலைப்பில் நல்லைக் குருமணியின் பிரதம வாரிசு கானகதாவாரிதி கலாபூஷணம் பிரம்மஸ்ரீ சிவ.வை. நித்தியானந்த சர்மா கதாபிரசங்கம் நிகழ்த்துவார். (இ-3)

# அருள் நெறி விழாவில் இன்று

நல்லூர்கந்தசுவாமிஆலய உற்சவகாலத்தை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் யாழ்.மாவட்ட அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் அரங்கேறும் அருள் நெறி விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல்3மணிமுதல்மாலை 6 மணி வரை நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர்திருமதி.ஹேமலோஜினி குமரன் தலைமையில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் விருந்தினராக வண்ணார்பண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரி அதிபர் திருமதி வாசுகி தனபாலா கலந்து கொள்வார்.

இந் நிகழ்வில் தெல்லிப்பழைப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட விழிசிட்டி ஞான வைரவர் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் நடனம், பண்ணிசை, பேச்சு, கதாபிரசங்கம் , சிவத்தமிழ் அறநெறிப்பாடசாலை மாணவர்களின் வில்லிசை, நடனம், பேச்சு, கதாபிரசங்கம் பாரதி அறநெறிப் பாடசாலை மாணவர்களின் நடனம், பேச்சு, ஆலடி முத்துமாரி அம்மன் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் நடனம் ,பேச்சு என்பன இடம்பெறும். மேலும் காரைநகர் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட காரைநகர் சிவகாமி அறநெறிப்பாடசாலை மாணவர்களின் பண்ணிசை, நடனம், பேச்சு, திக்கரை இந்து அறநெறிப்பாடசாலை மாண வர்களின் குழுநடனம், பேச்சு என்பனவும் இடம் பெறும். (இ-3)

# கந்தபுராண எழுச்சி விழாவில் இன்று

நல்லூர்கந்தசுவாமிஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு கந்தபுராண வாழ்வியல் தொடர்பான விழிப்புணர்வை மேம்படுத்தும் நிகழ்வுகள் அரங்கேறும் கந்தபுராண எழுச்சி விழாவின் 17 ஆம் நாள் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணிக்கு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன மண்டபத்தில் இடம்பெறும். நல்லைத் திருஞான சம்பந்தர் ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், சர்வதேச இந்துமத குருபீடாதி பதியும் சுதுமலை புவனேஸ்வரி அம்மன் ஆலய பிரதம குருவுமான சிவஸ்ரீ ச.மகேஸ்வரக் குருக்கள் முன்னிலையில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள கணக்காளர் எம்.ஜி.காண்டீபன் தலைமையில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, மீள்குடியேற்றம், புனர் நிர்மாணம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு பணிப்பாளர் வே.பிறேமச்சந்திரன் கலந்து கொள்வார். இந் நிகழ்வில் ஆன்மீகம் தொடர்பான சொற்பொழிவினை சைவப் புலவர் க.கனகதுர்க்கா நிகழ்த்துவதுடன் திருமதி. மீனாசபேசர்மா (வித்தியாலய இசையகம்) வின் மாணவர்கள் வழங்கும் பக்தி இசையும் இடம்பெறும். (இ-7)

# நீதி அமைச்சருக்கு எதிரான தீர்மானத்திற்கு ஆதரவில்லை மகிந்த திடீர் பல்டி



(கொழும்பு)

நீதி அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானத்திற்கு ஆதரவளிக்கப்படாது என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மினுவன்கொட பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்று திரும்பிய போது ஊடகவியலாளர்கள்எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனைத் தெரிவித்தார்.

மோட்டார்போக்குவரத்துவிதி மீறல்களுக்கான அபராதம் குறித்தும் இதன்போது கேள்வி எழுப்பப்பட்டிருந்தது.

குடிபோதையில் வாகனம் செலுத்துவோருக்கு அபராதம் விதிப்பதில்தவறில்லை. எனினும் சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதி போன்றவற்றை மறந்து வைத்துவிட்டு வந்தவர்களுக்கு பாரிய தொகை அபராதம் விதிப்பது நியாயமில்லை.

குறிப்பாக ஆட்டோ சாரதிகளுக்கு அவ்வளவு பெரிய தொகையைசெலுத்தமுடியாதுஎன மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். (இ-7)




# சங்கடங்கள் தீர்ப்பாய்



சந்தங்கள் நிறைந்த
சங்கத் தமிழால்
நற்கிரன் அன்று-திரு
முருகாற்றுப் படைபாட
சங்கரன் புதல்வா நீ
சங்கடங்கள் தீர்த்தாய்
தேவர் துயர் போக்க
சேனைக்கதிபதியாகி
சூரர் படையொழித்து
சுற்றி வந்த வேலால்
வெற்றி வாகை சூடி
சேவற் கொடி கொண்டாய்
நாமும் இங்கே
நற்தமிழால் பாட
நல்லூர் அமர்ந்த பெருமானே
உன் பாதார விந்தங்கள்
போற்றி போற்றி

சி.சிவசிந்துஜா
யா.பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம்.

# கவலைகள் தீர்த்து வையுமையா



கணபதியின் தம்பியே கந்தா-எம்
குறைகளைச் சொல்வதற்காய்-உம்
காலடி நாடியே வந்தோமையா
காது கொடுத்து கேட்பீரோ ஐயா

கடும் வரட்சி இங்கு நிலவுதையா
கால்நடைகள் இறக்குதையா
காய்கறியின் விலை உயருதையா
காலநிலையில் மாற்றம் வாராதோ ஐயா?

கருணையுள்ளம் கொண்டவனே-உமை
கைகூப்பி தொழுகிறோமையா -எம்
கவலைகளை தீர்த்து வையுமையா
கண்ணீர் ஆறாய் பெருகுதையா

யோ.காண்டீபன்
மானிப்பாய்.

# நல்லை மேவிய நாயகனே



பிறவாத வரமருளும் பெருமானே
குறமாதை மணங்கொண்ட முருகோனே
சரவணப் பொய்கையில் உதித்தோனே
அரவணைத் தருளிடும் அழகோனே
தமிழே வடிவாய் அமர்ந்தோனே
அமிழ்தினும் இனிய அற்புதனே
தொல்லை தரு வினை-நீக்கிடவே
நல்லை மேவிய நாயகனே.

க.பிரணவன்
யா.மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்.

# நிம்மதியை தந்து அருள்வாய்



வேலணைந்த ஊராம்
வேலழகன் பேராம்
சேலணைந்த விழியுடைய
வள்ளி தெய்வானையுடன்
சேர்ந்திருந்தால் அழகாம்
குன்று பலதோறும்
நின்று அருள்புரியும்
கோலமயில் வாகனனே-முருகா
நல்லைக் காவலனே மால் மருகா
நீலமயில் ஏறி நின்னடியார்க்கு அருள
வீதியுலா வருவாய் நித்தம்
நிம்மதியை தந்து அருள்வாய்

கனே-பாக்கியன், வேலணை.

# நல்லைக்கந்த சந்தப் “பா”



உருகி வேண்டியே மருவி நாடுவார்
உள்ளத் தேயிருந் துயர்வை நாட்டுவாய்
அருகில் வந்துநீ யாற்றல் கூட்டுவாய்
அன்னையா யெமக் கமுது ஊட்டுவாய்
பெருகு மூழ்வினை தன்னை யோட்டுவாய்
பேறு பெற்றிடும் வாழ்வி லேற்றுவாய்
விரிவுறக் கவி வித்தை சாற்றுவாய்
வேண்டி னேனுனை நல்லைக் கந்தப்பா

கலாபூஷணம், சந்தக்கவிஞர் நவ.பாலகோபால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடிநீர் பிரச்சினையை எதிர்நோக்கும் பூநகரி பிரதேசம்



மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய மேலும் முப்பதாயிரம் லீற்றர் குடிநீர் தேவைப்படுவதாக பூநகரி பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார்.

வரட்சியின் தாக்கத்தினால் கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்பட்டிருக்கும் பாரிய பிரச்சினையாக காணப்படுவது குடிநீர்ப்பிரச்சினையாகும். மாவட்டத்தின் பூநகரிப் பிரதேச செயலாளர் பிரிவு இதில் அதிகளவில் பாதிப்பட்ட பிரதேச செயலாளர் பிரிவாகக் காணப்படுகின்றது.

பூநகரிப் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள 15 இற்கும் அதிகமான கிராமங்கள் முற்றாக நீர் இன்றி காணப்படும் பிரதேசமாக உள்ளது. இவ்வாறான நீர்ப் பிரச்சினை தீர்ப்பதற்கு மாவட்ட அனர்த் முகாமைத்துவ மத்திய நிலையம் மற்றும் பூநகரிப் பிரதேச சபை ஆகியவற்றுடன் இணைந்து வரட்சியினால் பாதிக்கப்பட்ட 5604 குடும்பத்தில் 2160 குடும்பத்தினருக்கு மாத்திரம் தாங்களால் குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் மேலும் 3144 குடும்பங்களுக்கான குடிநீர்த் தேவையை பூர்த்தி செய்ய முடியாமல் உள்ளதாகவும் அண்மையில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைமைச்செயலக துணைத்தலைவர் உள்ளிட்ட குழுவினர் கிளிநொச்சி மாவட்டத்தின் வரட்சி நிலைமை கள் தொடர்பில் நேரில் ஆராய்ந்து மக்களுக்கு உதவுவதற்கு பிரதேச செயலாளரை சந்தித்த போது பிரதேச செயலாளர் பிரதேசத்தின் நிலைமைகள் தொடர்பில் தெரிவித்தார்.

குறித்த சந்திப்பில் கிளிநொச்சி செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவர் வேழமாலிகிதன், செயலாளர் சேதுபதி, பிரிவுத்தலைவர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பின்னர் குறித்த செஞ்சிலுவைச்சங்க தலைமைச் செயலக துணைத்தலைவர் உள்ளிட்ட குழுவினர் பூநகரிப் பிரதேசத்தின் கறுக்காய்த்தீவு மற்றும் ஞானிமடம் செட்டியகுறிச்சி போன்ற கிராம சேவையாளர் பிரிவுக்கு நேரில் சென்று நிலைமைகளை ஆராய்ந்தனர். (8-312)

# புனரமைப்பின் நிமித்தம் வீதி மூடப்பட்டுள்ளது

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் உள்ள மாந்தை கிழக்கு பிரதேச செயலகப்பிரிவிற்குட்பட்ட ஒட்டறுத்த குளம் சந்தியில் இருந்து கொல்லர் விளான் குளம் நோக்கிச் செல்லும் வீதிக்கு இடைப்பட்ட பகுதியில் உள்ள "கண்டல் வெளி" வரையுமான வீதிப் புனரமைப்பு வேலைகள் நடைபெறவுள்ளதால் இந்த வீதி தற்காலிகமாக மூடப்படுவதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கிளிநொச்சி/முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதம பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

மேற்படி வீதிப்புனரமைப்பானது 3.8 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டின் மூலம் 600 மீற்றர் தூரத்திற்கு புனரமைக்கப்படவுள்ளது.

இந்த வீதிப் புனரமைப்புப் பணிகள் நாளை திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரையான காலப் பகுதிவரை நடைபெறவுள்ளதால் வீதி தற்காலிகமாக மூடப்படுகின்றது.

எனவே இதனை பாதசாரிகள் மற்றும் வாகன சாரதிகள், பொதுமக்கள் ஆகியோர் கவனத்தில் கொண்டு குறித்த காலப் பகுதியில் மாற்றுப் பாதைகளைப் பயன்படுத்தி பயணத்தை மேற்கொண்டு பூரண ஒத்துழைப்பை வழங்குமாறு அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இவ்வீதிப் புனரைமைப்பு நடைபெறும் போது ஏதாவது குறைபாடுகள் காணப்படின் நேரடியாகவோ அல்லது எழுத்து மூலமாகவோ தனக்கு உடனடியாக அறியத் தருமாறும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (8-15)




# வவுனியாவில் டெங்கு ஒழிப்பு சிரமதானம்

நாட்டின் பல மாவட்டங்களில் டெங்கினால் பல நூற்றுக்கணக்கான உயிர்கள் காவு கொள்ளப்படுவதை தடுப்பதற்காக வவுனியாவில் டெங்கு ஒழிப்பு சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

குறித்த வேலைத்திட்டம் நேற்றுக் காலை 8.30 மணியளவில் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், பண்டாரிக் குளத்தில் பிரஜைகள் பொலிஸ் குழுவின் ஏற்பாட்டில் நடைபெற்றுள்ளது.

எங்கள் கிராமத்தையும் மக்களையும் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு சுற்றாடலில் நீர் தேங்கி நிற்காத வண்ணம் சுத்தம் செய்வதோடு வீட்டில் தேங்கிக் கிடக்கும் தேவையற்ற பொருட்களை வேறுவேறாக பிரித்து அகற்றும் நடவடிக்கைகள் நாளை மற்றும் நாளை மறுதினமும் பண்டாரிக் குளத்தில் மேற்கொள்ளப்படவுள்ளது. (8)

# முழங்காவில் விபத்து சந்தேக நபரின் விளக்கமறியல் 14 நாட்கள் மேலும் நீடிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - முழங்காவில் பகுதியில் கடந்த ஜூன் மாதம் ஆலயத்திற்கு சென்று திரும்பிக் கொண்டிருந்த சிறுவனின் உயிரிழப்பு சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபரின் விளக்கமறியல் தொடர்ந்தும் 14 நாட்கள் நீடிக்கப்பட்டுள்ளது.

குறித்த சந்தேக நபரை கடந்த சனிக்கிழமை கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற பதில் நீதவான் எஸ். சிவபாலசுப்பிரமணியம் முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவது,

கடந்த ஜூன் மாதம் 17 ஆம் திகதி முழங்காவில் நாகபடுவான் பகுதியில் ஆலயத்திற்குச் சென்று திரும்பிக் கொண்டிருந்த சிறுவன் ஒருவனை மோதி விட்டு தப்பிச் சென்ற கார் சாரதியையும் கைது செய்யவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

இவ்விபத்தில் காயமடைந்த சிறுவன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததுடன், பொலிஸார் இது தொடர்பாக விசாரணைகளை உரிய முறையில் முன்னெடுக்கவில்லை எனவும் இதற்கு நீதியான விசாரணை மேற்கொள்ள வேண்டும் எனவும் கோரி கடந்த ஜூன் மாதம் 22 ஆம் திகதி இந்த பகுதி மக்கள் பொலிஸாருக்கு எதிரான ஆர்ப்பாட்டம் ஒன்றினை முன்னெடுத்துள்ளனர்.

இதனை தொடர்ந்து அன்றைய தினம் இரவே காரையும், சாரதியையும் பொலிஸார் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டு சந்தேக நபரான சாரதியை கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியிருந்தனர்.

மேலும், விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சாரதியை நேற்றைய தினம் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியதை அடுத்து எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7-8)



(படம்-மல்லாவி செய்தியாளர்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளிநொச்சிக் கிளையின் ஏற்பாட்டில் பூநகரிக் கல்விக் கோட்டத்தின் கீழ் உள்ள கிளி/ பூநகரி மகாவித்தியாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள க.பொ.த. உயர் தரப் பரீட்சை மண்டபத்தில் பரீட்சை எழுதும் அனைத்து மாணவர்களுக்கும் மற்றும் பரீட்சை நிலைய கல்வி அதிகாரிகளுக்கும் போத்தலில் அடைக்கப்பட்ட சுத்திகரிக் கப்பட்ட குடிநீர் பரீட்சை நடைபெறும் காலம் முழுவதும் வழங்கும் ஆரம்ப நிகழ்வு வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

# காணாமல் போனோரின் உறவுகளை சந்தித்தார் சிவாஜிலிங்கம்




வவுனியாவில் சுழற்சி முறை உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள காணாமல் போன உறவுகளின் குடும்பத்தினரை வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் சந்திந்து கலந்துரையாடியுள்ளார்.

இதன் போது காணாமல் போன உறவுகள் தொடர்பாகவும், அதற்கான போராட்டம் தொடர்பாகவும் அவர் கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது காணாமல் போன உறவுகள், தாம் எதிர்நோக்கியுள்ள பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் வடமாகாண சபை உறுப்பினருக்கு எடுத்து கூறியுள்ளனர்.

காணாமல் போன உறவுகளின் குடும்பத்தினர் சுமார் 170 ஆவது நாளாக இங்கு சுழற்சிமுறை உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (8)



வடக்கு மாகாண சபை யின் பிரதி அவைத் தலைவர் வல்லிபுரம் - கமலேஸ்வரன் மற்றும் வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் இ.இந்திரராசா ஆகியோர் துணுக்காய் பிரதேசத்திற் குட்பட்ட 5 இந்து ஆலயங்களுக்கும் மற்றும் இசைக் கலாமன்றம் ஆகியவற்றின் அபிவிருத்திப் பணிகளுக்காக வடக்கு மாகாண சபையினால் ஒதுக்கப்பட்ட பிரமாண அடிப்படையிலான அபிவிருத்தி நன்கொடை நிதியில் இருந்து மொத்தம் 3 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்து அதனை வழங்கி வைத்துள்ளனர்.

(படங்கள்-மல்லாவி செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்.
~ ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ஏழை மக்களுக்கான உதவிகள் உன்னதமாக இருக்க வேண்டும்

வயிற்றுக்குச் சோறிடல் வேண்டும் இங்கு வாழும் மனிதர்க்கெல்லாம் என்றான் பாரதி.

பாரதியின் இக்கவி வரிகள் வெறும் வார்த்தை வடிவங்கள் அன்று. அதற்குள் சமூக அக்கறை தெரிகிறது.

பசி என்ற பெரும் பிணி போக்க வேண்டும் என்ற மனிதம் பளிச்சிடுகிறது.

வயிற்றுப் பசி போக்குவதற்கு ஏதும் இல்லை என்ற நிலைமை மிகவும் கொடுமையானது.

இந்த நிலைமை அன்றுதான் இருந்தது என்று யாரும் நினைத்து விடலாகாது. இன்றும் அந்தக் கொடுமை தொடர்கிறது.

ஏழை மக்கள் ஒரு நேர உணவுக்கும் ஏங்கும் பரிதாபம் சாதாரணமானதல்ல.

எனவே பசியாறுதல் என்ற விடயம் தொடர்பில் மத்திய, மாகாண அரசுகள் அதிகூடிய கவனம் செலுத்த வேண்டும்.

உழைப்பாளிகள் இல்லாத, பெண்களை தலைமையாகக் கொண்ட குடும்பங்களை; அவர்களின் வாழ்வாதார நிலைகளை அறிந்து அதற்கேற்றாற்போல் உதவித் திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும்.

இலங்கை போன்ற யுத்தம் நடந்து அழிவுகள் ஏற்படுத்தப்பட்ட மற்றும் இயற்கையின் சீற்றத்தால் அழிவுகளைச் சந்தித்த நாடுகளில் இந்த உதவித் திட்டங்கள் தாராளமாக இருக்க வேண்டும்.

எனினும் ஏழை மக்களின் சீவனோபாயம் அவர்களின் உணவுத் தேவை என்பவற்றுக்கான உதவித் தொகை, உதவித் திட்டங்களை தாங்க முடியாத சுமையாகவே ஆட்சியாளர்களும் அரச அதிகாரிகளும் கருதிக் கொள்கின்றனர்.

இதனால் ஏழைத் தாய்மார் அவர் தம் பிள்ளைகள் பட்டினியுடன் வாழும் துன்பம் தொடர்கிறது.

அண்மைக்காலமாக நாடுபூராகவும் வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழும் மக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். அந்தப் போராட்டம் சமுர்த்தி உதவித் திட்டத்தை நிறுத்த வேண்டாம் என்பதற்கானது.

நாட்டில் இப்போது பல போராட்டங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. அவற்றின் நோக்கமும் தேவையும் வேறுபட்டது.

ஆனால் சமுர்த்தி நிவாரணத்தை நிறுத்த வேண்டாம் என்று ஏழை மக்கள் நடத்தும் போராட்டமானது அன்றாடச் சீவனோபாயத்துடன் தொடர்புபட்டது.

மூன்று நேர உணவு உண்பதற்கு யாருக்கு வசதி இல்லையோ அவர்களுக்கு உணவு வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதென்பது அரசின் முதற்பணியாக இருக்க வேண்டும்.

இந்த அடிப்படை மனிதநேயத்தில் உலகின் பல நாடுகள் உத்தமமான நிலையில் உள்ளன.

ஆனால் இலங்கை போன்ற நாடுகள்தான் ஏழை மக்களுக்கு வழங்கும் நிவாரணத்தை – உதவு தொகையை நிறுத்துவதாக; குறைப்பதாக அறிவிக்கின்றன. இது மிகவும் பாதகமான முடிவும் செயற்பாடுமாகும்.

எனவே வயிற்றுக்குச் சோறிடல் வேண்டும் என்ற பாரதியின் உன்னத நினைப்பு யதார்த்தமாக்கப்பட வேண்டும்.

இதற்காக மத்திய, மாகாண அரசுகள் தீவிரமாகச் செயற்படுவது மிகமிக அவசியமானதாகும்.

# தர்மபுரம் கல்லாறில் இளைஞன் மீது வாள்வெட்டு

## தாக்கியவர்களைத் தேடி பொலிஸ் வலைவீச்சு

(மல்லாவி)

தர்மபுரம் பொலிஸ் நிலையப் பிரிவிற்குட்பட்ட கல்லாறுக் கிராமத்தில் தனிப்பட்ட பகைமை காரணமாக 04 பேர் கொண்ட கும்பல் ஒன்றினால் இளைஞர் ஒருவர் மிக மூர்க்கத்தனமாகத் தாக்கப்பட்டுள்ளார்.

படுகாயமடைந்த நிலையிலும் இளைஞரின் எதிர் தாக்குதலில் படுகாயமடைந்த நபரும் ஏனைய மூவரும் தப்பிச் சென்ற நிலையில் படுகாயமடைந்து வீதியில் கிடந்த இளைஞனை வீதியால் சென்ற பொதுமக்கள் மீட்டு தர்மபுரம் பிரதேச வைத்தியசாலையில் சேர்த்தனர்.

பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக தர்மபுரம் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று சனிக்கிழமை காலை 7 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

கல்லாறுக் கிராமத்தில் வசிக்கும் இரண்டு தரப்பினருக்கிடையில் பகைமை நிலவி வந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இவர்களில் இளைஞர் ஒருவர் தனியாக கல்லாறுக் கிராம வீதியில் நேற்று பயணித்துக் கொண்டிருந்த போது குறித்த இளைஞர் மீது எதிர்த்தரப்பைச் சேர்ந்த 04 பேர் கொண்ட குழு கொட்டன்களால் தாக்கியதுடன் வாளாலும் வெட்டியுள்ளது.

இதன்போது தனித்து நின்று தாக்குதலை எதிர் கொண்ட இளைஞன் தாக்குதலாளிகளிடம் இருந்த வாளைப் பறித்து அவர்கள் மீதே தாக்குதல் நடத்திய போது எதிரிக் குழுவின் பிரதான நபர் வாள்வெட்டில் படுகாயமடைந்துள்ளார்.

இந்நிலையில் தாக்குதலைக் கைவிட்டு ஏனையவர்களின் உதவியுடன் படுகாயமடைந்த நபர் தப்பிச் சென்றுள்ளார்.

இந்த தாக்குதல் காரணமாக படுகாயங்களுடன் வீதியில் கிடந்த இளைஞனை வீதியால் சென்ற பொதுமக்கள் மீட்டு தர்மபுரம் பிரதேச வைத்தியசாலையில் அனுமதித்ததுடன், தர்மபுரம் பொலிஸாருக்கும் தகவலை வழங்கியுள்ளனர்.

இச்சம்பவத்தில் தர்மபுரம் கல்லாறுக் கிராமத்தைச் சேர்ந்த நல்லையா யதுர்சன் (வயது - 27) என்ற இளைஞரே படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்டு கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவராவார்.

இச் சம்பவம் தொடர்பில் தர்மபுரம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.எம். என்.டபிள்யூ.சதுரங்கா தலைமையிலான பொலிஸார் தாக்குதலை நடத்தி விட்டு தப்பிச் சென்றுள்ள தாக்குதலாளிகளை இனம் கண்டுள்ள நிலையில் அவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். (மு-15)

## அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

கல்வியாளர் தரம் III பதவிக்கான போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து முதலாம் கட்ட நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்பட்டவர்களில் தொழில்சார் பாடங்களுக்கு விண்ணப்பித்தவர்களில் பலர் பட்டப்பின் பட்டங்களைக் கொண்டிருந்த போதிலும் முதலாவது பட்டத்தில் தொழில்சார் பாடங்களைக் கொண்டிருக்கவில்லை என்பதைக் காரணம் காட்டி 2ஆவது நேர்முகத்தேர்வுக்கு நிராகரிக்கப்பட்டு இருந்தனர்.

தற்போது 2ஆம் நேர்முகத்தேர்வுக்கு ஏனையோர் அழைக்கப்பட்ட விபரம் இணையதளங்களில் வெளியாகிய நிலையில் பாதிக்கப்பட்டவர்கள் ஒரு அவசர கலந்துரையாடலை ஒழுங்கு செய்துள்ளனர்.

இக் கலந்துரையாடலானது இன்றைய தினம் பிற்பகல் 10 மணிக்கு யாழ். இந்து ஆரம்ப பாடசாலைக்கு எதிரில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் எடிசன் அக்கடமியில் நடைபெறவுள்ளது.

பாதிக்கப்பட்டவர்கள் தமது நேர்முகத்தேர்வு இலக்கம், சபை இலக்கம் என்பவற்றுடன் தமது விபரங்களுடன் சமுகமளிக்குமாறு வேண்டப்பட்டுள்ளனர்.

மேலதிக விபரங்களுக்கு 077 314 5655 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (மு)




### திருப்பதி மலை வாழும் வெங்கடேசா

ஆகாசராஜாவும் தொண்டைமானும் அன்னை அன்புடன் அளித்ததைப் பகிர்ந்துண்டு பாங்காக வளர்ந்தனர். பாலகராய் இருந்தவர்கள் ப்ட்டம் சூட்டிக் கொள்ளும் அகவையை அடைந்தனர்.

மூத்தவனுக்கே முடியுரிமை என்னும் முன்னோரின் நியதிப்படி அரசன் சுதர்மன் ஆகாசராஜாவுக்கு முடிசூட்டி அரியணையில் அமர்த்தினான். இளையவன் தொண்டைமானிடம் அண்ணனை அனுசரித்துப் போகுமாறு சொன்னான்.

அகிலத்துக் கடமைகள் அனைத்தையும் இவ்வாறாக முடித்த அரசன் சுதர்மன் தன் தர்மபத்தினியுடன் வானப்பிரஸ்தம் மேற்கொள்ள வனம் புகுந்தான். (தொடரும்)

பீஸா (Pizza), பர்கர், உடனடி உணவுகள் (Fast foods) என்பவை அதிக சக்திப் பெறுமானம் கொண்ட அதிக சீனி, உப்பு, எண்ணெய் கொண்ட உணவுகளாகும். இவற்றை அடிக்கடி எடுத்துவரின், உடல் பருமனை அதிகரிக்கும். இதய நோய்களையும் ஏற்படுத்தும்.

தகவல்: சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, யாழ். மாநகர சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன்னிகிருஷ்ணனின் இசை நிகழ்ச்சி நிறுத்தப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதியில் வெலிங்டன் திரையரங்கு அமைந்திருந்த மைதானத்தில் நேற்று இசை நிகழ்ச்சியை நடத்துவதற்காக உன்னிகிருஷ்ணன் மற்றும் உன்னிகிருஷ்ணனின் மகள் உத்ரா உன்னிகிருஷ்ணன் ஆகியோர் யாழ்ப்பாணம் வருகை தந்திருந்தனர்.

இந்நிலையில் யாழ்ப்பாணத்தில் இசை நிகழ்ச்சி நடத்த வருகை தந்த தென்னிந்திய பின்னணி பாடகர் உன்னிகிருஷ்ணனுக்கு எதிராக யாழ்.நகரின் பல்வேறு இடங்களிலும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.

இதையடுத்து விழா ஏற்பாட்டுக் குழுவினர் நிகழ்ச்சியை இரத்துச் செய்தனர். (மு)

# விஜயதாசவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை

## 17 பேர் கைச்சாத்து!

(கொழும்பு)

நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவிற்கு எதிராக கொண்டுவருவதற்கு எதிர்பார்த்துள்ள உத்தேச நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் 17 பேர் தற்போதைக்கு கைச்சாத்திட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவிற்கு எதிராக அரசாங்கம் நம்பிக்கையில்லாப் பிரேரணை சமர்ப்பிக்கவுள்ளதாக பல்வேறு கருத்துகள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன.

அது தொடர்பில் வினவிய போதே அவர் இதனைத் தெரிவித்தார். (மு-11)

## சாஸ்திரங்கள்

✦ உண்மை உரைப்பதை பிரம்மா வாழ்த்துகிறார். உண்மை உரைப்பவர்க்கு இம்மைக்குப் புகழும் மறுமைக்கு மோட்சமும் வழங்குகிறார்.

-மனுசாஸ்திரம்

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**இராசி அதிபதி பொருத்தம் என்றால் என்ன?**

இராசி அதிபதி பொருத்தம் என்பது சம்பந்திகள் ஒற்றுமை மற்றும் உறவு முறைகளின் அந்நியோன்யத்தைக் குறிக்கும்.

உத்தம நிலை

ஆண், பெண் இராசியதிபதிகள் நட்பு இருத்தல்

ஆண், பெண் இராசியதிபதிகள் ஒருவருக்கு நட்பு, மற்றவருக்குச் சமம். (தொடரும்)

### சூரியகுமாரன் ஞாபகார்த்த கபடி போட்டி

# பருத்தித்துறை ஐக்கியத்தை தோற்கடித்து கிண்ணத்தை கைப்பற்றியது பலாலி விண்மீன்




பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடத்திய வடமராட்சி கபடிச் சங்கத்தின் அனுமதியுடன் "அமரர் ம.சூரியகுமாரன்" ஞாபகார்த்த 20 வயதுக்கு உட்பட்டோருகான யாழ். மாவட்ட ரீதியிலான கழகங்களுக்கு இடையிலான மாபெரும் கபடிச் சுற் றுப்போட்டியின் இறுதிப் போட்டி மின்னொளியில் (11.08.2017) அன்று இரவு 7.30 மணியளவில் பெரும்திரளான ரசிகர்கள் மத்தியில் நடைபெற்றது.

ஆரம்பம் முதலே போட்டியில் விண்மீனின் ஆதிக்கமே மேலோங்கியிருந்தது. நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்திய பலாலி விண்மீன் வீரர்களின் ஆட்டத்தால் நிலைகுலைந்த எதிரணியினரால் புள்ளிகளை வேகமாக பெறமுடியவில்லை. ஆட்ட நிறைவில் 41:32 என்ற புள்ளியடிப் படையில் வெற்றிபெற்று கிண்ணத்தை வென்றது பலாலி விண்மீன். சிறந்த ஆட்ட நாயகனாக பலாலி விண்மீன் வீரர் சாந்தன் தெரிவுசெய்யப்பட்டு பதக்கம் வழங்கி மதிப்பளிக்கப்பட்டார். (க)

## சக்திவேல் அணி அரையிறுதிக்கு தகுதி



உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் 11.08.2017 வெள்ளிக்கிழமை அன்று நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் தாளையடி செனி.அன்ரனீஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்தாடிய சக்திவேல் அணியானது 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்கு தகுதிபெற்றுள்ளது.

சக்திவேல் அணி சார்பாக. சரண் - 01 சிந்துஜன் - 01 இலக்கினையும் கைப்பற்றினர். (க)

## சம்பியனானது ஆவரங்கால் மத்தி



கைதடி தெற்கு சனசமூக நிலையம் தனது 62ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இரண்டு பிரிவாக நடத்திய கரப்பந்தாட்டத் தொடரில் 'ஏ' பிரிவில் ஆவரங்கால் மத்திய அணி கிண்ணம் வென்றது.

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் கரப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்தி அணியை எதிர்த்து அச்சுவேலியுத்அணிமோதியது.

ஐந்து செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதல் மூன்று செற்களையும் முறையே 25:15, 25:17, 25:20 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய ஆவரங்கால் மத்திய அணி 3:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது. ஆட்ட நாயகனாக ஆவரங்கால் மத்திய அணி வீரர் சிந்துஜன் தெரிவு செய்யப்பட்டார். (க)

## வடமராட்சி லீக்கின் அங்கத்துவ கழகங்களுக்கு ஓர் அறிவித்தல்

வடமராட்சி லீக்கின் அங்கத்துவ கழகங்கள் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டிகளுக்கு விண்ணப்பிக்கும் போது அச்சுற்றுப்போட்டிக்கு வடமராட்சி லீக்கின் அங்கத்துவ கழகங்கள் கலந்துகொள்ள வடமராட்சி லீக் உரிய "அனுமதியை வழங்கி உள்ளதா" என்பதனை உறுதி செய்த பின்னர் சுற்றுப்போட்டியில் கலந்து கொள்ள விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

வடமராட்சி அனுமதி இல்லாமல் ஏனைய லீக்குகளின் போட்டிகளில் கலந்து கொள்வதனால் ஏற்படும் தேவயற்ற முரண்பாடுகளை தவிர்த்துக் கொள்ளுமாறும் கழகங்கள் அறிவிறுத்தப்படுகின்றன.

ஒரு சில வேறு லீக்கின் அங்கத்துவ கழகங்கள் லீக்கின் அனுமதி எதையும் பெற்றுக்கொள்ளாது நேரடியாக அங்கத்துவ கழகங்களுக்கு தமது சுற்றுப்போட்டிக்கான விண்ணப்பப்படிவங்களை விநியோகிப்பதாக நாம் அறிந்துள்ளோம்.

எனவே வடமராட்சி கழகங்கள் அவதானமாக இருக்குமாறு வேண்டபடுகின்றீர்கள்.

மேலதிக தகவல்களுக்கு வடமராட்சி உதைபந்தாட லீக் தலைவருடன் 077 773 3776 எனும் இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும். (க)

## தேசிய கால்பந்தாட்ட அணியில் யாழ்.மத்திய கல்லூரி வீரர் தெரிவு

ஈரானின் ஷிராஸ் நகரில் இடம்பெறவுள்ள 18 வயதிற்குட்பட்ட 45 ஆவது ஆசிய பாடசாலை கால்பந்தாட்ட சம்பியன்ஷிப் போட்டி தொடரில் இலங்கை தேசிய அணியில் 22 வீரர்கள் குழாமில் யாழ்.மத்திய கல்லூரி வீரரும் நாவாந்துறை புனித நீக்கிலார் அணி வீரருமான ஆர்.ரெம்சன் (சுகிற்)தெரிவு செய்யப்பட்டார்.

ஈரானின் ஷிராஸ் நகரில் நடைபெறவுள்ள 18 வயதுக்கு உட்பட்டோருக்கான 45 ஆவது ஆசிய பாடசாலைகள் கால்பந்து சம்பியன்ஷிப் போட்டிக்கான 22 வீரர்களைக் கொண்ட குழாம் இலங்கை பாடசாலைகள் கால்ப்ந்து சம்மேளனத்தால் (SLSFA) தேர்வு செய்யப் பட்டுள்ளது.

எதிர்வரும் செப்டெம்பர் 8ஆம் திகதி தொடக்கம் 16ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இந்தப் போட்டித் தொடருக்கான வீரர்கள் தேர்வு கடந்த ஜூலை மாதம் இறுதிப் பாதியில் இடம்பெற்றன.

தற்பொழுது தேர்வு செய்யப்பட்டிருக்கும் குழாமில் 3 கோல் காப்பாளர்கள், 4 பின்களவீரர்கள், 9 மத்திய கள வீரர்கள் மற்றும் 6 முன்கள வீரர்கள் அடங்குகின்றனர்.



இவர்களில் கொழும்பு புனித பேதுரு கல்லூரியின் மூன்று வீரர்கள், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, வென்னப்புவ புனித ஜோசப் வாஸ் கல்லூரி மற்றும் கம்பளை ஸாஹிரா கல்லூரி என்பவற்றில் இருந்து தலா இரண்டு வீரர்கள் உள்ளடங்குகின்றனர். கொழும்பு ஸாஹிரா கல்லூரி மற்றும் ஹமீட் அல் ஹுஸைனி கல்லூரிகளில் இருந்து தலா ஒருவீரரும் இந்த அணியில் இணைக்கப்பட்டுள்ளனர்.(க)

## துள்ளுமீன் அணியைத் தோற்கடித்து 3ஆம் இடத்தைப் பெற்றது மைக்கல் அணி

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமராட்சி கபடிச் சங்கத்தின் அனுமதியுடன் "அமரர் ம.சூரியகுமாரன்" ஞாபகார்த்த 20 வயதுக்கு உட்பட்டோருக்கான யாழ். மாவட்ட ரீதியிலான கழகங்களுக்கு இடையிலான மின்னொளியிலான மாபெரும் கபடிச் சுற்றுப்போட்டியின் 11.08.2017 வெள்ளி அன்று 8 மணிக்கு இடம்பெற்ற மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் கொட்டடி துள்ளுமீன் விளையாட்டுக்கழகத்தை எதிர்கொண்டு மைக்கல் கபடி அணி விளையாடியது.

மைதானத்தில் அதிகளவு ஆதரவாளர்களுடன் களம் இறங்கிய கொட்டடி துள்ளுமீன் அணியை மைக்கல் அணி கம்பீரமாக கபடியில் தடம்பதிக்கும் மாலு சந்தி மைக்கல் அணியை தோற்கடித்து மூன்றாம் இடத்துக்கான போட்டியில் நுழைந்தது மாலு சந்தி மைக்கல் அணி மைதானத்தில் அதிகளவு ஆதரவாளர்களுடன் களம் இறங்கிய கொட்டடி துள்ளுமீன் அணியை மைக்கல் அணி கம்பீரமாக எதிர் கொண்டு விளையாடியது. இரு அணிகளும் ஆரம்பத்தில் சம பலத்துடன் மோதின.

தொடர்ந்து போட்டி விறுவிறுப்படைய மைக்கல் தனது புள்ளிகளை வேகப்படுத்த தொடங்கியது. தொடர்ந்து களவியூகங்களை மாற்றிய துள்ளுமீன் அணி வேகமான விளையாட்டை நகர்த்தி புள்ளிகளைப் பெற தொடங்கியது. இடைவேளையின் போது மைக்கல் அணி 19-25 என முன்னிலை பெற்றது. இடைவேளையின் பின்னர் போட்டி விறுவிறுபாக நகரத் தொடங்கியது. போட்டியில் பார்வையாளர்களின் உற்சாகம் மைதானத்தை அதிர வைத்தது.

தொடர்ந்து போட்டி இறுதிக் கட்டத்தை அடைய இரு அணிகளும் ஆக்ரோசமான நகர்வுகள் மூலம் புள்ளிகளைப் பெற முயற்சித்தனர். இறுதியில் 52-62 என்ற புள்ளியடிப்படையில் மாலு சந்தி மைக்கல் அணி வெற்றி பெற்று மூன்றாம் இடத்தை பெற்றது.



இப்போட்டியின் ஆட்ட நாயகனாக மைக்கல் வி.கழக வீரர் கௌதமன் தெரிவு செய்யப்பட்டார். இவருக்கான பதக்கத்தை வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் வழங்கி கௌரவித்தார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனவரியில் அரசி...

நல்லாட்சி அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் தமது கட்சியினருக்கு எதிராக தொடர்ந்தும் அழுத்தங்களும், தொந்தரவுகளும் கொடுக்கப்பட்டால்,எதிர்வரும் ஜனவரி மாதம அரசாங்கத்தில் இருந்து விலக ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளதாகவும்,

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை தனிப்பட்ட ரீதியில் சந்தித்து இந்த முடிவை அறிவித்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் கூறியுள்ளார்.

நல்லாட்சி அரசாங்கத்தில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு 106 ஆசனங்கள் இருப்பதுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கு 35 ஆசனங்கள் மாத்திரமே உள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியின் பெரும்பான்மை பலத்தை கவனத்தில் கொள்ளாது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பல சந்தர்ப்பங்களில் ஐக்கிய தேசியக் கட்சியை புறந்தள்ளி விட்டு தன்னிச்சையாக செயற்பட்டுள்ளது என பிரதமர், ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை கூட்டரசிலிருந்து ஐ.தே.க தனியான விலகி கொள்வதாகவும் முடியுமானால் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தனியாக ஆட்சியமைக்குமாறு ஐ.தே.க சிரேஷ்ட உறுப்பினர்களும் ஜனாதிபதியிடம் கூறியுள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது, நல்லாட்சி கூட்டு முன்னணிக்கு எதிராக சதி நடப்பதாகவும் நல்லாட்சிக்கான இலக்கு இல்லாமலாக்கப்படுவதாலேயே இந்த தீர்மானம் எடுக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (மு-11)

## டெனிஸ்வரனை...

ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், போக்குவரத்து அமைச்சர் பா.டெனிஸ்வரனை அமைச்சுப் பதவியிலிருந்து விலக்குவது குறித்து எமது இயக்கத்தின் தலைமைக்குழுவினால கோரிக்கை விடப்பட்டிருக்கின்றது.

இது குறித்து அமைச்சர் டெனிஸ்வரன் தனது முடிவினை இன்று அறிவிப்பதாகத் தெரிவித்திருக்கின்றார். எனவே இதன் பின்னர் இது குறித்த முடிவுகள் எமது தலைமைக் குழுவினால் முடிவெடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (மு-11)

## எஸ்.ரி.எப் மீது...

இடம் பெறவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த சம்பவம் நீர்கொழும்பு குறன பகுதியில் இடம்பெற்றதாகவும், அப்பகுதியில் நேற்றிரவு பதற்றம் நிலவியதாகவும் தெரிய வருகிறது.

விஷேட அதிரடிப்படையினர் பயணித்த வாகனத்தினை இலக்குவைத்து குறித்த துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு, அப்பகுதியில் பாதுகாப்பினை பலப்படுத்த பொலிஸார் மற்றும் அதிரடி படையினர் குவிக்கப்பட்டுள்ளனர். (மு-11)

## ராஜிதவுக்கு எதி...

வித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ராஜபக்ஷர்கள் வெளிநாடுகளில் 18 பில்லியன் டொலர் சேர்த்து வைத்துள்ளதாக பல இடங்களில் தெரிவித்துள்ளார்.

இந்த விசமத்தனமான பிரசாரம் தமக்கு பாரிய அபகீர்த்தியை ஏற்படுத்தியுள்ளதால் நட்டஈட்டுக்கு வழக்கு தாக்கல் செய்யவுள்ளதாக மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளாா.(மு)

## மகிந்த புலிகளுடன்...

யிலுள்ள ஒருசிலர் சமஷ்டியை ஆதரிக்கின்ற போதிலும்கூட ஜே.ஆர்.ஜெயவர்தனவினதும் டி.எஸ்.சேனநாயக்கவினதும் பரம்பரையில் வந்தவர்கள் ஒற்றையாட்சியையே ஆதரிக்கின்றனர். அந்தக்கட்சியிலுள்ள பெரும்பான்மையினரின் நிலைப்பாடு ஒற்றையாட்சி பாதுகாக்கப்பட வேண்டும் என்பது தான்.

ஒற்றையாட்சி என்ற பெயரில் தமிழர்க்கு சமஷ்டியை வழங்கி அதனூடாக நாட்டை இரண்டாகப் பிரிப்பதற்கு இந்தத் தேசிய அரசிலுள்ள சிலர் சதி செய்கின்றனர். மகிந்த ஆட்சியிலும் இவ்வாறானவர்கள் இருந்தனர். உண்மையில் இந்த இரண்டு பிரதான கட்சிகளும் ஆரம்பத்தில் சமஷ்டி என்ற நிலைப்பாட்டில்தான் இருந்தன. நாங்கள் தான் இவர்களை ஒற்றையாட்சி என்ற நிலைப்பாட்டுக்கு கொண்டுவந்தோம்.

நாம் ஒற்றையாட்சி பற்றி பேசிய போது சந்திரிகாவும் மகிந்தவும் சமஷ்டி நிலைப்பாட்டில் இருந்தனர். கோத்தபாய ராஜபக்ஷ அமெரிக்காவில் இருந்தார். விமல் வீரவன்ஸ வேறொரு சிந்தனையில் மூழ்கியிருந்தார்.

2015இல் மகிந்த ஆட்சிக்கு வந்த போது அவர் விடுதலைப்புலிகளுடன் யுத்தம் செய்வதற்கு இருக்கவில்லை. பேச்சு நடத்தவே திட்டமிட்டார். டிரான் அலஸின் ஊடாக புலிகளுடன் தொடர்பை ஏற்படுத்தினார். ஜெனிவாவில் விடுதலைப்புலிகளுடன் பேச்சைத் தொடங்கினார். ஆனால் நாம்தான் மகிந்தவை யுத்தத்திற்கு தள்ளினோம்.

இவ்வாறு கஷ்டப்பட்டு காப்பாற்றிய இந்த நாட்டை சமஷ்டித் தீர்வின் ஊடாக மீண்டும் விடுதலைப்புலிகளிடம் ஒப்படைப்பதற்கு இந்த அரசிலுள்ளவர்கள் முயற்சிப்பது கவலைக்குரிய விடயம். இதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்கமாட்டோம் எனக் குறிப்பிட்டுள்ளார். (மு-11)

## 20 ஆவது திருத்த...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு அளிக்காது என்று கூட்டமைப்பின் பேச்சாளரான நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

மாகாணசபைகளைக் கலைக்கும் அதிகாரத்தை நாடாளுமன்றத்துக்கு வழங்கும் இந்த திருத்தச் சட்டம் தொடர்பாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அரசாங்கம் பேச்சு நடத்தவில்லை.

இது தொடர்பாக அரசாங்கத்துடன் எந்த இணக்கப்பாடும் ஏற்படுத்தப்படவில்லை. இந்த சட்டவரைவு தொடர்பாக குறிப்பிட்ட காலத்துக்குள் அரசியல் கட்சிகளுடன் தீவிரமான கலந்துரையாடல்களை நடத்துவதன் மூலம், அரசாங்கம் தேவையற்ற பிரச்சினைகளைத் தவிர்க்கலாம்.

ஏனைய கட்சிகளின் ஒப்புதலுடன், இந்த சட்டவரைவை அரசாங்கம் மீண்டும் அறிமுகப்படுத்தினால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதற்கு ஆதரவாக நிச்சயம் வாக்களிக்கும்.

மாகாணசபைத் தேர்தலை பிற்போடுவதற்காக மாத்திரமே இந்த சட்டத் திருத்த வரைவைக் கொண்டு வருவதை ஏற்க முடியாது என்றும் அவர் கூறினார்.

20 ஆவது திருத்தச்சட்ட வரைவை நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றுவதற்கு, 16 உறுப்பினர்களைக் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவு முக்கியமாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (மு-11)

## வடக்கில் அமைதி...

இரத்த ஆற்றை ஓடவைக்க முயற்சிப்பதாக வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

இவ்வாறு குழப்பத்தை ஏற்படுத்த முற்படுவோருக்கு துணைபோக கூடாது எனவும் வலியுறுத்தியுள்ளார்.

வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சின் கீழ் வடக்கில் தொழிற்பயிற்சி வழங்கப்பட்டவரகளுக்கான தொழில் உபகரணங்கள் வழங்கும நிகழ்வு யாழ் திருமறைக்கலாமன்ற கலைத்தூது கலையகத்தில்நேற்று இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சர் சஜித் பிரேமதாச, வடக்கில் எந்த விதமான பிரச்சினைகளும் இல்லை எனவும் சிலர் பிரச்சினைகளை தூண்டி விடுவதாகவும் குற்றம் சாட்டினார்.

தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் யாழ் மாவட்ட முகாமையாளர் எஸ்.ரவீந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அமைச்சர் சஜித் பிரேமதாச பிரதம விருந்தினராக கலந்து கொண்டதுடன், இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா, யாழ் மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (மு-11)

## வாகன விபத்துக...

குறித்த காலப்பகுதியில் மோட்டார் சைக்கிள் விபத்துகள் 528 இடம்பெற்றுள்ளதுடன் அதில் சிக்கி 548 பேர் பலியாகியுள்ளனர்.

இதேவேளை கடந்த வருடத்தின் முதல் ஐந்து மாத காலப்பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்துகளில் சிக்கி பலியானவர்களின் எண்ணிக்கையை விட இவ்வருடத்தின் முதல் ஐந்து மாதங்களில் 34 மரணங்கள் அதிகரித்துள்ளதாகவும் போக்குவரத்து பொலிஸ் பிரிவு தெரிவித்துள்ளது.(மு-11)

## வழக்குகளை துரி...

தனக்கு அறிவிக்குமாறும குற்றம் புலனாய்வு திணைக்களம் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களம் ஆகியவற்றுக்கு பிரதமர் உத்தரவிட்டுள்ளார்.

றக்பி விளையாட்டு வீரர் வசீம் தாஜுடீன் மற்றும் ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க போன்றோரின் படுகொலை, ரத்துபஸ்பல பொதுமக்கள் கொலை, பாரிய ஊழல் மோசடிகள், வெலிகடை சிறைச்சாலை படுகொலை போன்றவற்றுடன் சம்மந்தப்பட்ட யாராயினும் கைது செய்வதற்கான நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துமாறே அவர் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த தேர்தல் காலங்களில் மக்களுக்கு வாக்குறுதி வழங்கியபடி ஊழல்வாதிகள் மற்றும் குற்றவாளிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்காமல் இருப்பதனால் பொது மக்களுக்கு அரசாங்கத்தின் மீதான நம்பிக்கை இல்லாமல் போய்விட்டதாகவும் இதனால் மாகாண சபைத் தேர்தலில் அரசாங்கத்துக்குச் சாதகமற்ற தன்மை காணப்படுவதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் தொகுதி அமைப்பாளர்கள் பிரதமரிடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.

முன்னாள் அமைச்சர் ரவி கருணநாயக்க பதவியில் இருந்து விலகியமையானது அரசாங்கத்தின் மீது பொதுமக்களுக்கு புது நம்பிக்கையைத் தோற்றுவித்துள்ளது. இதே நம்பிக்கை நிலையைத் தொடர்ந்தும் தக்கவைக்கவேண்டிய சூழ்நிலை அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சிக்கு நெருங்கிய வட்டாரங்கள் அறிவுறுத்தியுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (மு-11)

## சுஷ்மாவுடன் சந்தி...

இந்த சந்திப்பு நேற்று முன்தினம் நேபாளத்தில் நடைபெற்றுள்ளது.

பிம்ஸ்ரெக் அமைப்பின் அமைச்சர்கள் மாநாட்டிற்கு அமைய இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான முக்கிய விடயங்கள் தொடர்பில் இருவரும் கலந்துரையாடியுள்ளதாக இலங்கை அரசாங்க தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மு-11)

# ஐ.நா கண்காணிப்பில் தீர்வு காண வேண்டும் – சிவாஜிலிங்கம்

(யாழ்ப்பாணம்)

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான பிரச்சினைகளுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் நேரடி கண்காணிப்பின் கீழ் தீர்வு காணப்பட வேண்டும் என வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

அத்துடன் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கு சர்வதேசத்தின் கண்காணிப்பின் கீழ் உடனடி நிவாரணம் வழங்கப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நேற்று 170ஆவது நாளாக சுழற்சிமுறை உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளை வடமாகாணசபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் நேற்று சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது காணாமல்போன தமது உறவுகளை இழந்து தற்போது வீதியில் போராடும் உறவுகள் தமது மன வேதனைகளையும் துயரங்களையும் வடமாகாண சபை உறுப்பினருக்கு தெரிவித்திருந்தனர்.

இந்த சந்திப்பின் பின்னர் கருத்து வெளியிட்ட வடமாகாணசபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள கூட்டத் தொடரின்போதும் காணாமல் போனவர்களின் விடயம் தொடர்பாக அழுத்தம் கொடுக்கவுள்ளதாக குறிப்பிட்டார். (மு-11)

# கிராம உத்தியோகஸ்தரை தாக்கிய இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி - புத்தூர் பிரதேசத்தில் கிராம உத்தியோகஸ்தரை தாக்கிய சம்பவம் தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிராம உத்தியோகஸ்தரின் காரியாலயத்தின் அருகாமையில் உள்ள விளையாட்டரங்கில் விளையாடிக் கொண்டிருந்த இளைஞர்களிடம், தனது பணிக்கு தடங்கல் ஏற்படாதவாறு விளையாடுமாறு கூறிய உத்தியோகஸ்தர் மீதே தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதனையடுத்து தாக்குதல் நடத்தியவர்கள் எனக் கூறி 16 வயதுடைய மற்றும் 25 வயதுடைய இளைஞர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்கள் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர். (மு-11)

# தேசிய பாடசாலை ஆசிரியர்கள் 10 ஆயிரம் பேருக்கு இடமாற்றம்

(கொழும்பு)

தேசிய பாடசாலையொன்றில் 10 வருடங்களுக்கு மேலாக தொடர்ந்து பணியாற்றி வரும் பத்தாயிரம் ஆசிரியர்களுக்கு இவ்வருடம் முடிவடைவதற்குள் இடமாற்றம் வழங்குவதற்கு கல்வியமைச்சு நடவடிக்கை எடுத்து வருகிறது.

இவ்விவகாரம் தொடர்பில் அவ்வமைச்சு ஆசிரிய தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி உடன்பாட்டுக்கு வந்துள்ளது.

எனவே ஆசிரிய இடமாற்றம் தொடர்பில் அவ்வவ் மாகாணங்களில் ஆசிரிய இடமாற்ற சபை நிறுவுவதற்கும் கல்வியமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

ஆகவே அச்சபையூடாக குறித்த இடமாற்றங்கள் நடைபெறவுள்ளது. மேலும் குறித்த ஆசிரிய இடமாற்ற நடவடிக்கைகள் மூன்றாம் தவணை கல்வி நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதும் முன்னெடுக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (மு-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அறிவுபூர்வமான முதலீடு - வளமான எதிர்காலம்**
**யாழ் - முதலீட்டாளர் கருத்துக்களம்**

Aug.26 (Saturday) @ 9.30am
@Tilko City Hotel
முன்பதிவு : Call & SMS to 0777822014 (C-9287)

CSE COLOMBO STOCK EXCHANGE



## வீடு காணி விற்பனைக்கு

நீர்வேலியில் அரசகேசரிப்பிள்ளையார் கோவில் (செம்பாட்டுப் பிள்ளையார்) அண்மையில் நற்சூழலில் அமைந்துள்ள 10 பரப்பு காணி வீட்டுடன் அமைந்தது உடனடி விற்பனைக்கு.
(C-9324) தொடர்புகளுக்கு : 077 639 5068



## வாடகைக்கு

நெல்லியடி நகரில் யாழ்.பிரதான வீதியில் 1ஆம், 2ஆம் மாடிகள் வாட கைக்கு விடப்படும்.
தொடர்புகளுக்கு : 077 440 4475, 077 444 9594 (114)



## V2 TRAVELS




வெளிநாடுகளிலிருந்து வருவோருக்கு இலங்கை விசா நீடிப்பு யாழ்ப்பாணத்திலேயே செய்து கொடுக்கப்படும்.
**VISA EXTENSION**
FOR FOREIGN PASSPORT
(விசா எக்ஸ்ரென்சன்)
0768227499
• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • சாவகச்சேரி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை



## கார், வான் வாடகைக்கு

**Van KDH Car Prius & Ailto**
விசேட சலுகைகளுடன் வாடகைக்கு விடப்படும்

இல.28, ஐயனார் கோவில் வீதி, வண் மேற்கு. யாழ்ப்பாணம்.
தொடர்பு : 077 152 3899
077 185 3748 (120)



# HOTEL FOR SALE (JAFFNA)



- Fully furnished Hotel with Restaurant situated AT KANDY ROAD 200M AWAY FROM KACHCHERI.
- 2km away from jaffna town.
- ST/JHONS, OLD PARK are situated within 100m
- LAND – 50perches
- 12 fully furnished luxury Rooms with attached bathroom and A/C facilities.
- Spacious garden and Secure Parking are available
- PRICE – 33million (Negotiable)
- ADDRESS -No.41, Kandy Road, Chundukuly, Jaffna.
- CONTACT NO- 0779924599, 0779925540, 0777180580

(C-9307)



## அவசர கலந்துரையாடல்

கல்வியியலாளர் சேவை தரம் III இன் தொழில் சார் பாடங்களுக்கான 2ஆம் நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்படாதவர்களுக்கான அவசர கலந்துரையாடல் இன்றைய தினம் (13.08.2017) யாழ்ப்பாணம் வடிசன் அக்கடமியில் (யாழ்.இந்து ஆரம்ப பாடசாலைக்கு எதிரில்) மு.ப. 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது. உரியவர்கள் தமது விபரங்களுடன் தவறாது கலந்து கொள்ளவும். T.P : 0773145655 / 0779232333 (117)



## கிளிநொச்சி திருவையாற்றில் பண்ணை விற்பனைக்குண்டு

கிளிநொச்சி திருவையாற்றில் 2000 கோழிகள் வளர்க்கக் கூடிய 2 கோழிக்கூடுகளும், மாட்டுத்தொழுவம் ஒன்றும், நீர்ப்பாசன வசதியுடன் கூடிய 100 க்கு மேற்பட்ட தென்னங்கன்றுகளுடன், 2 அறைகள் கொண்ட வீடும் 2 ஏக்கர் விஸ்தீரணம் உள்ள பண்ணைக் காணி விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு : 077 229 2436 (119)



## பதவி வெற்றிடங்கள்

1. **Driver - 25 - 35** வயதுடைய ஆண்
2. **Receptionist -** தமிழ், ஆங்கிலம் சரளமாகப் பேசக் கூடியவர்கள்
3. **Bill Clerk -** ஆண் / பெண் - 25 - 35 வயதுடைய கணனி அறிவு உள்ளவர்கள்

மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கு தகுதியுடையவர்கள் கீழ்க் குறிப்பிடப்படும் தொலைபேசி இலக்கத்துடன் 16.08.2017 புதன்கிழமைக்கு முன் தொடர்பு கொள்ளவும். தொடர்புகளுக்கு : 32, Stanly Road, Jaffna. 021 222 8468 (C-9323)



## CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை



உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள். (C-9304)

CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931062
follow us : cnrworldwideexpress



## உடனடி வேலைவாய்ப்பு

இளைஞர் யுவதிகளே! உங்களுக்கோர் அரிய வாய்ப்பு. சர்வதேச ரீதியாக 30 வருடங்களாக செயற்படும் **D.M.I, International** ஆகிய எமது நிறுவனத்தில் பல்வேறு பதவி நிலைக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**தகைமை - O/L மற்றும் A/L**
**வயதெல்லை - 18 - 45**

இறுதி திகதி 25.08.2017
தொடர்புகளுக்கு : Mullaitivu, Kilinochchi, Jaffna : 0777009820
Mannar : 0232251886 (118)


## நேர்மை...

யல் கலாசாரத்தை நாட்டில் கட்டியெழுப்பும் நட வடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

தலவை விளையாட்டு மைதானத்தில் நேற்று நடைபெற்ற மகாவலி எச் வலயத்தில் உள்ள விவசாயிகளுக்கு காணி உறுதிகளை வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனை தெரிவித்தார்.

எண்ணதான்விமர்சனங்கள், குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்பட்டபோதும் எந்தவொரு அரசாங்கமும் நிறைவேற்றாத பணிகளை தற்போதைய அரசாங்கம் குறுகிய காலத்தில் நாட்டுக்காகவும் மக்களுக் காகவும்நிறைவேற்றியுள்ளதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி, விவசாய சமூகத்தின் பொருளா தாரத்தை பலப் படுத் தி, அதன்மூலம் தேசிய பொருளாதாரத்தை கட் டியெழுப் பும் பணிக்கு அரசாங்கம் முன்னுரிமை அளித்துள்ளதாக குறிப்பிட்டார். (மு-11)


**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



## அரியதோர் வேலைவாய்ப்பு

உலகெங்கிலும் விஸ்தரிக்கவுள்ள எமது **American** நிறுவனமானது இரக்குமதி மற்றும் மொத்தவியாபாரங்களை மேற்கொண்டு வருகின்றது. இந் நிறுவனம் இலங்கையின் வடபகுதியில் (வவுனியா, மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு) ஆகிய இடங்களில் 12 புதிய கிளைகளை ஆரம்பிக்கவுள்ளது. இக் கிளைகளுக்கான பதவி வெற்றிடங்களும் தகைமைகளும்.

விற்பனைப் பிரதிநிதி / மேற்பார்வையாளர்
**O/L கல்விகற்றோர்**

அலுவலர்கள் / உதவி முகாமையாளர்
**A/L கற்றோர்**

முகாமையாளர்
**A/L மேற்தகைமையுடையோர்**

தகுதியுடையோர் நேர்முகத்தேர்வின் மூலம் தெரிவு செய்யப்படுவர். உணவு மற்றும் தங்குமிட வசதி உண்டு.
தொடர்பு : 077 062 1631, 077 298 6763, 077 544 6584 (113)



## 2018 4ம் 5ம்

தர புலமைப்பரிசில் மாணவர்களுக்கும் 6,7,8 தர மாணவர்களுக்கும்ஆரம்பத்தில் இருந்து

# சிங்களம்

தமிழ் பாடசாலையில் பயிற்றப்பட்ட சிங்கள ஆசிரியராக சேவை செய்த அனுபவமுள்ள நான் யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம் அண் மித்த பிரதேசங்களில் இயங்கிவரும் கல்வி நிறுவனங்களில் சேவை செய்வதற்கு விரும்புகின்றேன்.

**சனி, ஞாயிறு**

தினங்களில் நேரம் ஒதுக்க முடியுமானால் நடத்துநர்கள் தொடர்பு கொள்ளவும். (089)

**M.N.RAZEEM**
**T.P : 0772 83 83 82**



## விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு

**UK - 550/=** (C-9290)



கப்பல் மூலம் கனடாவிற்குப்பொதிகள் அனுப்ப
**CANADA - 400/=** மட்டுமே
(நிபந்தனைக்குட்பட்டது)

**V2 TRAVELS-0768226240**

• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி
• சாவகச்சேரி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை



## வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை



**070 330 5500**
அண்ணா அன் கோ (C-9290)
976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் annalk.com

கனடாவுக்கு (Canada) மிகக் குறைந்த கட்டணத்தில் கப்பல் ஊடாக அனுப்பிடவும்

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.

யாழ்ப்பாணம் | ஊர்காவத்துறை | சாவகச்சேரி | கிளிநொச்சி | முல்லைத்தீவு | மல்லாவி | வவுனியா | திருகோணமலை


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.08.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a Newspaper in Srilanka
Viber 076 636 3378

வாரமலர்

# வலம்புரி

சங்குநாதம்

நாதம் 130

வள்ளுவர் ஆண்டு 2048 | 13.08.2017 | தொலைபேசி : 021 222 3378



# வீட்டுக்குள் முரண்பாடு





உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு



## கோட்சூட் அணிந்து நடத்திய தமிழ்ப் பண்பாட்டு மாநாடு

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர். இறை வணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் வைத்திலிங்கம் அறிவிக்க, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

வெயில் கொடுமை; மழை இல்லாமல் மக்கள் பெரும் கஷ்டங்களை அனுபவிக்கப் போகினம். மழை வேண்டி யாகம் வளர்க்க வேணும். இப்பிடிப் பண்டிதர் கூற, உண்மைதான் வரட்சிக் கொடுமை சனங்களை வாட்டத்தான் போகுது. அந்த நேரமே மகாவலி கங்கையை வடமாகாணத்திற்குக் கொண்டு வந்திருந்தால்... விதானையார் விசுவலிங்கம் பண்டிதருக்கு ஆதரவாகக் கூறினார். மகாவலி கங்கை வந்தால் சிங்களக் குடியேற்றமும் வந்து விடுமல்லோ. அந்தப் பயத்தில தான் எங்கட ஆட்களும் மகாவலி கங்கையைக் கொண்டு வர பின்னடித்தவியள்.

மூப்பர் முணுமுணுக்க இப்ப மட்டும் என்ன வாம். கங்காணியார் பக்க வாத்தியம் இசைத்தார்.

**வாத்தியார்:** ஆறில்லா ஊருக்கு அழகு பாழ் என்பது எவ்வளவு உண்மை. கடும் வெயிலும் வரட்சியும் மக்களின்ர மனநிலையையும் பாதிக்கும். நல்ல தண்ணி இருக்கிறது. மிகப்பெரிய செல்வம். எப்பாடுபட்டும் மகாவலி கங்கையை வடமாகாணத்திற்கு கொண்டு வரவேணும்.

**சாத்திரியார்:** மகாவலி கங்கையோட சிங்களக் குடியேற்றங்களும் வந்தால்...

**வாத்தியார்:** எல்லாவற்றுக்கும் பயந்து நடுங்கிறதை விட்டிட்டு மகாவலி கங்கையை வடமாகாணத்திற்குக் கொண்டு வரும் அதேநேரம் சிங்களக் குடியேற்றங்கள் வராத வண்ணம் என்ன பிளான் போடவேணும் என்பது பற்றித்தான் சிந்திக்கவேணும்.

இதைவிட்டிட்டு மகாவலி கங்கையை கொண்டு வந்தால் சிங்களக் குடியேற்றமும் வரும் எண்டு நினைத்து தண்ணியில்லாமல் தமிழர் சாகிறதோ...

**விதானையார்:** இதுகளைப் பற்றிக் கதைப்பதற்கு ஆர் இருக்கினம். வரட்சி நிலை காரணமாக எங்கட சனங்கள் எவ்வளவு துன்பப்படுகினம்.

**பண்டிதர்:** எங்களிட்ட எதிலும் ஒரு திட்டமிடல் இல்லை. அதால எல்லாம் பிழைத்துப் போறதா இருக்குது.

**விதானையார்:** பண்டிதர் சொல்லுறது நூறு வீதம் உண்மை. அண்மையில உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கத்தின் 13 ஆவது சர்வதேச மாநாடு யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நடந்தது.

**வாத்தியார்:** அதைக் கதையாதீங்கோ. வெளிநாட்டில இருக்கிறவியள் வந்து பணத்தைக் கொட்டிப் போட்டுப் போயிற்றினம். ஐந்து சதத்திற்குப் பிரயோசனம் இல்லை.

**பண்டிதர்:** யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த்துறை சார்ந்தவர்களுக்கே அழைப்பிதழ் வழங்கவில்லையாம்.

**மூப்பர்:** இதென்ன கதை உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கம் நடத்தின சர்வதேச மாநாட்டிற்கு தமிழ்த்துறை சார்ந்தவர்களுக்கு அழைப்பு விடவில்லையோ.

**கங்காணி:** அவையளுக்கு மட்டுமல்ல பலருக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை.

**மூப்பர்:** அப்ப ஏன் அந்த மாநாட்டை வைச்சவியள்.

**வாத்தியார்:** காசு கொடுக்கிறவியளுக்கு மாமணிப் பட்டம் வழங்கிறதுக்குத்தான்.

(ஆலடியில் சிரிப்பு)

**பண்டிதர்:** அழைப்பு விடாதது மட்டுமல்ல அந்த மாநாட்டின் ஏற்பாட்டாளர்கள் மாநாட்டில் கோட்சூட்டுத்தான் நிண்டவியளாம்.

**சாத்திரியார்:** என்ர கடவுளே! உலகத் தமிழர் பண்பாடு எண்டு சொல்லிப் போட்டு கோட்சூட்டில நிண்டால் எங்கட பண்பாடு என்னாகும்.

**வாத்தியார்:** சரி வெளிநாட்டில வாழ்ந்தவையளல்லோ. அதால கோட் சூட்டோட வந்தவியளாக்கும். வேட்டி கட்டி கழன்று விழுந்து போனால் அதுவும் பண்பாட்டிற்குப் பாதகம் தானே!

**மூப்பர்:** அப்ப வாத்தியார் தமிழ்ப்பண்பாடு எண்டு சொல்லிப்போட்டு மேலைத்தேய கலாசாரத்தில உடை அணியலாமோ?

**வாத்தியார்:** மூப்பர் நான் அப்படி நியாயப்படுத்தவில்லை. நான் என்ன சொல்ல வாறன் எண்டால் எத்தனையோ வெளிநாட்டு அறிஞர்கள் அந்த மாநாட்டிற்கு வந்தவியள். ஆனால் அவர்களின்ர தரமான பேச்சுக்களைக் கேட்பதற்கு பொதுமக்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை.

**சாத்திரியார்:** அதெண்டால் உண்மை தான். தமிழ்ப் பண்பாட்டின்ர ஒரு உலக மாநாட்டை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்குள்ள வைக்காமல் வெளியில வைச்சிருந்தால்- போதுமான பரப்புரை செய்திருந்தால் சனங்கள் குவிஞ்சிருக்கும்.

**வாத்தியார்:** நீங்கள் சொல்லுற இந்தக் கருத்துக்கள் எதுவும் செல்லாது பாருங்கோ. அவையள் வந்தது காசைச் செலவழிக்கவும் மாமணி விருது வழங்கவும். வந்த காரியத்தை ஒரு மாதிரியாகச் செய்து போட்டினம். அலுவல் முடிஞ்சுது தானே.

இனி வெளிநாட்டில போய் நாங்கள் யாழ்ப்பாணத்திற்குப் போய் அங்க 13 ஆவது உலக மாநாட்டை வெற்றிகரமாக நடத்திப் போட்டம் எண்டு பெருமையாகச் சொல்லுறது தானே.

**பண்டிதர்:** என்னவாக இருந்தாலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இப்படியான குறுகிய சிந்தனைகளுக்கு இடம் கொடுக்கக் கூடாது.


யாழ்ப்பாணத்தில நடந்த இவ்வுலக மாநாட்டில பயன்பெற்ற சனங்களின்ர எண்ணிக்கை எவ்வளவு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள், உயர்தரத்தில் கற்கும் மாணவர்கள் எவ்வளவு பேர் கலந்து கொண்டனர். இதுபற்றி ஒரு ஆய்வு செய்யவேணும்.


**விதானையார்:** ஆய்வுகள் ஒண்டும் நடக்கப் போறதில்லை. ஆனால் இப்படியான மாநாடுகளை நடத்துகிறதா இருந்தா இனிமேலாவது மக்களுக்குத் தெரியப்படுத்தி பொது இடங்களில் நடத்தி எங்கட மக்கள் பங்குகொண்டு நன்மை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கவேணும்.

இப்படி விதானையார் கூற அதனை ஆதரிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோயில் மணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

**ஆதித்தன்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





# வீட்டிற்குள் குழப்பம்

தன்வினை தன்னைச் சுடும். ஓட்டப்பம் வீட்டைச்சுடும். இவ்வாறு கூறியபடி பட்டினத்தடிகள் வீட்டின் மேல் அப்பத்தை எறிகிறார். வீடு பற்றி எரிகிறது.

ஞானியாகிய பட்டினத்தடிகளின் சக்தி அது ஆயினும் அந்தச் சக்தியை பாவவினை என்பதாக அந்த ஞானி நமக்கு உணர்த்தி நிற்கிறார்.

அப்பத்தை எறிந்து வீட்டை எரித்து இந்த உலக மாந்தர்களுக்கு ஓர் உண்மைத் தத்துவத்தைப் பட்டினத்தடிகள் உணர்த்தும் பாங்கு அற்புதமானது.

இது ஒருபுறம் இருக்க, எப்போதும் மற்றவர்கள் தொடர்பில் தீய எண்ணமும் சதித் திட்டங்களும் தீட்டுவதே நம் வாழ்வாக இருக்குமாயின் அழிவு நமக்கானதாகவே இருக்கும். இதுவே உண்மை. எனினும் இந்த உண்மையை எவரும் உணர்ந்து கொள்வதாகத் தெரியவில்லை.

வடக்கின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் மீது நம்பிக்கையில் லாப் பிரேரணையைக் கொண்டு வந்ததால் இப்போது தமிழரசுக் கட்சி மிகப் பெரும் பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டியுள்ளது. நாளுக்கு நாள் புதுப்புதுப் பிரச்சினைகள் ஏற்பட்ட வண்ணமுள்ளன.



கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தர் அவர்களுக்குத் தெரியாமலே சிலர் தீர்மானங்களை எடுக்கும் அளவில் தமிழரசுக் கட்சி தடம்புரளத் தலைப்பட்டு விட்டது. இதன் முடிவு என்னவாகும் என்பதை காலமே தீர்மானிக்கும்.

'எதுவாயினும் தமிழரசுக் கட்சித் தலைமை கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அவர்களுடன் கதைத்துப்பேசி சில முடிவுகளை எடுக்காததால் அந்தக் கட்சி தனது தலையில் மண்ணைக் கொட்டிக் கொண்டே இருக்கிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தர் அவர்கள் பழுத்த அரசியல் வாதி. அவரின் அனுபவமும் அறிவாற்றலும் பல இடங்களில் தமிழ் அரசியல் தலைமையைத் தளரவிடாது தொடர்ச்சியான பயணத்திற்கு வழிவகுத்தது.

எனினும் சிலர் தமது சுயநலனை அடிப்படையாகக் கொண்டு அரசியல் நடத்த முற்படுவதால் இரா. சம்பந்தரும் எதுவும் செய்யமுடியாது என்றொரு சூழ்நிலையை ஏற்படுத்தி வருகிறது.

அண்மையில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தர், தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை. சேனாதிராசா ஆகியோர் உள்ளிட்ட கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்களும் அடங்கிய சந்திப்பொன்று நடந்தது.

அந்தச் சந்திப்பில் தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை. சேனாதிராசா அவர்கள் மிகவும் கடுமையாக முதலமைச்சருடன் கதைத்ததாக அறிய முடிகின்றது.

ஒரு கட்டத்தில், மீண்டும் நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வருவோம் என்று மாவை சேனாதிராசா முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்களைப் பார்த்துக்கூறியுள்ளார்.

அதுவரை எல்லாவற்றுக்கும் பொறுமையாக இருந்த முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் அவர்கள் முடிந்தால் அதைச் செய்துகாட்டுங்கள் பார்க்கலாம் என்று பதிலளித்தார்.

இந்தப் பதில் மாவை. சேனாதிராஜாவை மட்டுமல்ல இரா. சம்பந்தரையும் அதிர வைத்தது.

முதலமைச்சரின் நெஞ்சுரம் கண்ட சம்பந்தர் நிலைமையை சமாளிக்கக் கடும் பிரயத்தனம் செய்து கொண்டார் என்று அறிய முடிகிறது.

முதலமைச்சரின் பண்பான போக்கை பலவீனமாக கருதிய மாவை. சேனாதிராசா அவர்கள் நடந்து கொண்டதால் வந்த விளைவு இது.

ஒரு நிதானமான போக்கில் பயணிக்க வேண்டும் என்று நினைக்கின்ற கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தருக்கு இது மிகுந்த தலையிடியைக் கொடுக்கவே செய்கிறது.

வடக்கின் முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்கள் தேர்தலுக்குப் பின்னர் தமிழரசுக் கட்சியின் தலைமை அலுவலகத்திற்கு ஒருபோதும் வரவில்லை என்பது முதலமைச்சர் தொடர்பான மாவை. சேனாதிராசாவின் குற்றச்சாட்டாக இருந்தது. முதலமைச்சர் விக்னேஸ்வரன் தங்களை விட்டு எட்டச் செல்கிறார் என்பது போல காட்டுவதற்காக இப்படியொரு குற்றச்சாட்டை மாவை. சேனாதிராசா முன்வைத்திருந்தார்.

எனினும் முதலமைச்சர் பெருந்தன்மையோடு தமிழரசுக் கட்சியின் தலைமையலுவலகத்திற்கு அண்மையில் சென்றிருந்தார். இவ்வாறு சென்றமை இரா. சம்பந்தரையும் ஆறுதல் படுத்தியிருக்கும். தமிழரசுக் கட்சியின் தலைமை அலுவலகத்திற்கு முதலமைச்சர் வந்து போன பின்பு நிலைமை சுமுகமாகும் என்றால், அது தான் இல்லை.

மீண்டும் நம்பிக்கையில்லாப் பிரேரணை பற்றி மாவை. சேனாதிராசா பேசுகிறார். அதனைச் சுட்டிக் காட்டி அச்சுறுத்துகிறார் எனில் அவரின் உள்நோக்கம் என்ன? என்பதைப் புரிந்து கொள்ள முடிகின்றது.

எதுவாயினும் முதலமைச்சராக சி.வி.விக்னேஸ்வரன் இருக்கும் வரை அமைச்சுப் பதவிகளை பொறுப்பேற்பதில்லை என்ற தமிழரசுக் கட்சியின் தீர்மானம் குழந்தைப்பிள்ளைத் தனமானது.

இந்தத் தீர்மானத்தை கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் கடுமையாகச் சாடியுள்ளார்.

இச்சாடல் தமிழரசுக் கட்சியின் தலைமை முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு எதிராகச் செயற்படுகிறது என்பதை சம்பந்தர் வெளிப்படையாக உணர்ந்துள்ளார்.

எது எவ்வாறாயினும் முதலமைச்சர் விக்னேஸ்வரன் மீது தமிழரசுக் கட்சி நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்து உள் வீட்டிற்குள் குழப்பங்களையும் பிரச்சினைகளையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்தப் பிரச்சினைகள் தொடரும் போது அது வீட்டை பங்கீடு போடு என்பதாகவும் நிலைமை மாறலாம்.

விதுரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

ஹாய் குட்டீஸ்!
எமது சிறுவர் அரங்கம் பகுதியில் உங்கள் ஆக்கங்கள் இடம்பெற வேண்டும் என்றால் உங்கள் சுய ஆக்கங்களை அனுப்பி வையுங்கள்.

## எல்லாம் நன்மைக்கே!



ஒரு காட்டில் பல உயர்ந்த மரங்கள் இருந்தன. ஒன்றை விட மற்ற எல்லா மரங்களும் நேராய் நிமிர்ந்து நின்றன. ஒரு மரம் மாத்திரம் வளைந்து நின்றது. மற்ற எல்லா மரங்களும் வளைந்த மரத்தை ஏளனம் செய்தன. வளைந்த மரமும் இதைக் கேட்டுக் கேட்டு கவலைப்படும். காற்றிற்கு வளைந்த மரம் அடிக்கடி வளைந்தது. ஆனால் மற்ற மரங்கள் அசையாமல் நின்றன. இதைப் பார்க்கவும் வளைந்த மரத்திற்கு கவலை ஏற்பட்டது. வளைந்த மரத்தின் கனிகள் காற்றிற்கு ஒவ்வொன்றாக நிலத்தில் வீழ்ந்து அழுகிப் போய்விட்டன. ஆனால் நேரான மரங்களின் கனிகளோ அழுகாமல் இருந்தன.

ஒரு நாள், மரம் வெட்டுவதற்காய் ஓர் விறகு வெட்டி காட்டிற்கு வந்தான். இவ்வளவு நிமிர்ந்த மரங்கள் ஒரு காட்டிலே இருக்கும்என அவன் நினைக்கவில்லை. அவன் மிகவும் மகிழ்ச்சியுற்றான்.

அடுத்த நாள் காலையில் அவன் தனது கோடரியுடன் இன்னும் ஐந்து நண்பர்களை அழைத்துகொண்டு வந்தான். அவர்கள் எல்லா மரங்களையும் வெட்டினார்கள். வளைந்த மரம் இருந்த இடத்திற்கு வந்த போது அவர்கள் அந்த மரத்தைப் பார்த்து இந்த மரம் எமக்குப் பயன் படாது. இதை நாம் விட்டுவிடுவோம் என்றார்கள்.

காடு அழிந்து ஒரு மரம் மாத்திரம் மிகுதியாய் இருந்ததால் அங்கு மக்கள் குடியேறத் தொடங்கினர். வளைந்த மரம், அம் மக்களுக்கு பயன்படத் தொடங்கியது.

**எவரையும் நாம் ஏளனம் செய்யக் கூடாது.**

செல்வன்.ஶ்ரீகரன் மேனன்
தரம் 7
யாழ்.பரியோவான் கல்லூரி.

## பழமொழிகள்

1. அன்னம் இட்டவர் வீட்டில் கன்னம் இடலாமா?
2. ஆழமறியாமல் காலை இடாதே.
3. இரக்கப் போனாலும் சிறக்கப் போ.
4. ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்.
5. உறியிலே வெண்ணெய் இருக்க நெய்க்கலைவானேன்
6. வியாதிக்கு மருந்துண்டு விதிக்கு மருந்துண்டா?
7. எல்லோருக்கும் ஒவ்வொன்று எளிது
8. ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளை ஒக்கும்.
9. கண்டதே காட்சி கொண்டதே கோலம்.
10. கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பம் ஏன்?
11. குறைகுடம் தளும்பும், நிறைகுடம் தளும்பாது.
13. கூலியைக் குறைக்காதே வேலையைக் கெடுக்காதே?
14. கோழி மிதித்துக் குஞ்சு முடம் ஆகுமா?
15. பூமியைப்போலப் பொறுமை வேண்டும்.
16. பெற்ற மனம் பித்து பிள்ளை மனம் கல்லு.
17. பொறுமை கடலினும் பெரிது.
18. போனதை நினைக்கிறவன் புத்தி கெட்டவன்.

## பொது அறிவு

1. ஏலக்காயில் இருக்கும் எண்ணெயின் பெயர் என்ன?
**வோலடைல்**
2. தன் வாழ்நாளில் நீரே அருந்தாத மிருகம் எது?
**கங்காரு எலி**
3. ஒட்டகச்சிவிங்கியின் கழுத்தில் எத்தனை எலும்புகள் உள்ளன?
**ஏழு**
4. பிறக்கும்போது குழந்தைகளுக்கு எத்தனை எலும்புகள் இருக்கும்?
**330**
5. தாஜ்மஹால் எந்தவகை மார்பிளால் கட்டப்பட்டுள்ளது?
**மக்ரானா**
6. பனிக்கட்டிகளின் மேல் வளரும் செடிகளின் பெயர் என்ன?
**க்ரயோ பைட்ஸ்**
7. டயாலிஸிஸ் இயந்திரத்தைக் கண்டறிந்தவர் யார்?
**வில்லியம் கோல்ப்**
8. உலகில் பூக்கள் உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் நாடு எது?
**நெதர்லாந்து**
9. கடற்கரை மணலைச் சுத்தம் செய்யும் கருவியின் பெயர் என்ன?
**பீச் கோம்பர்**
10. நமது ஒவ்வொரு கண்ணிலும் எத்தனை தசைகள் உள்ளன?
**ஆறு தசைகள்**




## வர்ணம் தீட்டுக



## மிருகக்காட்சிச்சாலை




அம்மா அப்பா அழைத்துச் சென்றார்
அங்கே ஓரிடம்
அங்கிருந்த குயிலும் மயிலும்
ஆடத் தொடங்கின
பொல்லா நரியும் புனுகுப் பூனையும்
எல்லாம் இருந்தன
குட்டி மான்கள் ஒட்டகச்சிவிங்கி
கூட நின்றன
குரங்கு என்னைப் பார்த்துப் பார்த்து
குர் குர் என்றது
யானை ஒன்று காதைக் காதை
ஆட்டி நின்றது
முதலை தலையைத் தூக்கிப் பார்த்து
மூச்சு விட்டது
கரடி கூட உறுமிக் கொண்டே
காலைத் தூக்கிற்று
சிங்கம் புலி எல்லாம் கண்டேன்
கண்டும் பயமில்லை
சூரனைப் போல் நின்றிருந்தேன்
சிறிதும் அஞ்சவில்லை
சென்று வந்த இடம் உனக்குத்
தெரியவில்லையா?
மிருகக்காட்சிச்சாலைதானே வேறு
ஒன்றுமில்லை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









பிக்போஸில் யார் வெற்றி பெறுவார்கள்?

தமிழ்த் தலைமைப் பதவி உங்களுக்குக் கிடைத்தால்?

உயர்தரப் பரீட்சை ஆரம்பமாகிவிட்டது. மாணவர்களுக்கு நீங்கள் கூற விரும்புவது?

**சயன் — யாழ்ப்பாணம்**

**தமிழ்த் தலைமைப் பதவி உங்களுக்குக் கிடைத்தால்?**

உடனடியாக எதிர்க்கட்சித் தலைமையைப் பிடிப்பேன். இங்கொன்று அங்கொன்று பேசுவேன். இந்தாவருகிறது தீர்வு அந்தா வருகிறது தீர்வு என்று பீலா விடுவேன்.

ஐ.தே.கவை அரவணைத்து சுதந்திரக் கட்சியை ஓரம் கட்டுவேன். ஆட்சி முடியும் தருவாயில் சுதந்திரக் கட்சியை அரவணைத்து ஐ.தே.கவை ஓரங்கட்டுவேன். தேர்தல் நெருங்கும் போது ஓவர் அக்ரிங் விடுவேன். முடிந்து வென்ற பின் அடங்கி விடுவேன்.

கொடிகளில் வேற்றுமை இல்லை. எந்தக் கொடி என்றாலும் பரவாயில்லை. உடனடியாக தூக்கிப் பிடித்து விடுவேன். முக்கியமாக கொழும்பில் தான் சதா இருப்பேன் யாழ்ப்பாணப் பக்கம் திரும்பியும் பார்க்கமாட்டேன்.

**அன்பன் — யாழ்ப்பாணம்**

**காதல் என்றால் ஏன் வெறுப்பான பதில் தருகிறீர்கள்?**

அனுபவங்கள் தான் வாழ்க்கை. இனிமையானவை என நாம் எதனைக் கருதுகின்றோமோ அவை மிகக் கொடுமையானவை. வாழ்க்கை என்ற வானவெளியில் காதல் என்பது ஒரு நட்சத்திரமே ஒளிய அது சூரியன் இல்லை என்பதை நீங்கள் புரிந்து கொள்ளும் காலம் வரும். அப்போது வியாசரைப் பற்றி நினைப்பீர்கள். மகிழ்ச்சி.

**தரன் — மாதகல்**

**தங்களை கசூரினாபீச் பக்கம் கண்டதாக ஒரு செய்தி?**

தம்பி தரன் செத்துப்போன கிளிக்கு எதுக்கடா சிங்காரம்.

**மது — மருதனார்மடம்**

**எமது கலாசாரம் சீரழிய காரணம்?**

நவீன உலகென்ற மாயைக்குள் எப்போது புகத் தொடங்கினோமோ அப்போதே எமது கலாசாரம் சரிவுகாணத் தொடங்கிவிட்டது. இதில் ஆண்கள் தான், பெண்கள் தான் என்று பிரித்து விட முடியாது. நாம் அனைவரும் தான் காரணம் என்ற பொதுமைக்கு வந்தால் சரி.

கட்டைப்பாவாடை போடுவது, அடங்காமல் தலையை விரித்து விடுவது, சமூக வலைத்தளங்களில் முகம் தெரியாதவர்களுடனான நட்பு இவைதான் நாகரிகம் என்று பெண்களும்; காதில் கடுக்கண் போடுவது, பல்சரில் பயங்கர வேகத்தில் சுற்றுவது ,தெருவில் நின்று சண்டை போடுவது இவைதான் நாகரிகம் என்று ஆண்களும் நினைப்பதனால் தான் எமக்கு இந்த நிலை. இதைப்புரிந்து கொண்டால் சரி.

**சுபிக்குட்டி**

**ஆண்களுக்கு காதல், காமம் இரண்டும் வேறு வேறென்று எவ்வாறு புரியவைக்கலாம்?**

இதில் ஆண்களுக்கு மட்டும் முழுப்பொறுப்பில்லையே. அரைவாசி பெண்களிடமும் தான் இருக்கிறது. கடலில் படகு செல்வதைப் போன்றது காதல். தடமே தெரியாது. அதே மணல் வெளியில் நடந்து செல்வதைப் போன்றது காமம். தடம் தெரிந்தே ஆகும்.




**சுதன் — குப்பிளான்**

**தமிழர் எதிர்பார்த்த தீர்வு தமிழருக்குக் கிடைக்குமா?**

அறமென்றோம் தரவில்லை, ஆயுத வழியென்றோம் பெற முடியவில்லை,மீண்டும் அறவழி செல்வோம் என ஒட்டுமொத்த தமிழினமும் வீட்டிற்கு அடிமைப்பட்டோம். இதோ வருகிறது என ஆண்டுகள் அடுக்கப்பட்டதே தவிர எதுவுமே வரவில்லை.

இப்போதுகூட எதுவோ வரப்போகிறது என்கிறார்கள். இறுதியில் தெற்கில் புலிவந்து விட்டது என்ற பிரசாரம்தான் வருகிறது. ரொம்ப நன்றி.

**துஷா — கோண்டாவில்**

**பல்கலைக்கழக வாழ்வு பற்றி?**

படித்தவர்க்கு ஒரு அனுபவமும் பம்பல் அடித்தவர்க்கு இன்னொரு அனுபவமும் இருக்கும். சந்தோசம், சுதந்திரம் என்பவற்றின் இறுதிச் சந்தர்ப்பம்.



**இந்து — யாழ்ப்பாணம்**

**பிக்போஸில் யார் வெற்றி பெறுவார்கள்?**

தேநீர் கடையில் இருவர் கவலையுடன் பேசிக் கொண்டிருந்தார்கள். ஓவியா போனபின்பு பிக்போஸ் பார்க்கவே பிடிக்கவில்லை என்று. இடையில் நான் புகுந்து யார் அந்த ஓவியா என்று கேட்க,

என்னது ஓவியாவைத் தெரியாதா நீர் வாழ்க்கையில் அரைவாசியை இழந்து விட்டீர் என்றான் ஒருவன்.

இல்லை இல்லை வாழ்க்கையே இழந்து விட்டீர் என்றான் மற்றவன். நன்றி வணக்கம் என்றுவிட்டு வந்துவிட்டேன் நான்.

**சுகந்தினி — மந்துவில்**

**உயர்தரப் பரீட்சை ஆரம்பமாகிவிட்டது. மாணவர்களுக்கு நீங்கள் கூற விரும்புவது?**

அன்புச் செல்வங்களே! இதுதான் உங்களுக்கான இறுதித் தடை. இந்தத் தடையைத் தாண்டுவீர்களாக இருந்தால் உங்கள் வாழ்வு சிறக்கும்.

மனதை ஒரு நிலைப்படுத்துங்கள். படித்தவற்றை மறுபடி மறுபடி மீள் நினைவூட்டுங்கள். எந்தச் சஞ்சலமும் இன்றி கேள்விகளுக்கு பதில் எழுதுங்கள். வெற்றி நிச்சயம்.

**யுபா — கரவெட்டி**

**தமிழ்த் தலைமகன் மனச்சாட்சிப்படி நடக்கின்றானா?**

இவர்களை நல்லூர் ஆலயத்திற்கு அழைத்துச் சென்று கற்பூரம் கொளுத்தி அதை கையால் அணைக்கச் செய்து கேட்க வேண்டிய கேள்வி.



**சகானா — மானிப்பாய்**

**சமூகம் தானாக திருந்துமா?**

சமூகம் என்பது ஒன்றும் கழுதைப் புண் இல்லையே புழுதி மருந்தாகி விட. சிலதை தடவியும் பலதைத் தட்டியும் தான் கேட்க வேண்டியிருக்கிறது.

**சுகிர்தா — ஆனைப்பந்தி**

**பெண் பெண்ணை திருமணம் செய்யலாமா?**

இதொன்று மட்டும்தான் எம் சமூகத்தில் இன்னும் நடக்கவில்லை. கோவிந்தா கோவிந்தா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




### இழக்காத கரங்கள்

இறைவா!
என்னைப் படைத்து ஏன்
இந்த வலியை தந்தாய்
வாய்ப்புக்கள் இருந்தும்
எல்லாம் மறைந்துவிட்டது
வேதனை எனும் கூடரில்
நித்தம் நித்தம் தரித்து
கொண்டிருக்கின்றேன்
எதற்கு இப்படியொரு
வேதனை இதற்கு நீ
எனது கைகளை
ஊனமாக்கிவிடலாம்
கொக்கிடம் மாட்டிக்கொண்ட
மீன்போல துடிதுடிக்கின்றேன்
முத்துமுத்தாய் எழுதும் எனது
கைகள் பேனாவை எடுக்க
முடியாது தவிக்கின்றது
எழுத துடிக்கும் எனது கைகள்
உணர்வற்றுக் கிடக்கின்றது
என் இலட்சியங்கள் கனவுகள்
சிதைக்கப்படுகின்றது
ஏன் எனக்கு இந்தத் தண்டனை
எனது கைகளுக்கு விலங்கிட்டு
நீ என்ன சுகம் பெற்றாய்
இறைவா!

**த.சர்மினி**
**புதிய கற்பகபுரம்**

### பொய்தானே வேதம்

சிறுபொறி பெரிய காட்டை அழிக்கும்
சிறுசொல் மனித மனத்தை எரிக்கும்
நல்லவை செய்தால் நன்மை விளையும்
தீயவை செய்தால் தீமையே பலன்
தினை விதைத்தால் தினை விளையும்
வினை விதைத்தால் அதுவே அறுவடை
நஞ்சென உள்ளே வஞ்சம் விளைந்தால்
கிஞ்சித்தும் மனதில் அமைதி வராது
தூய மனதில் தீயவை இல்லை
தீய மனமோ பாவத்தின் விளைநிலம்
கள்ளருக்கில்லை வெள்ளைச் சிந்தை
காமத்துக்குக் கண், கரை இல்லை
உப்பைத் தின்றவன் தண்ணீர் குடிப்பான்
தப்புச் செய்தவன் தண்டனை அடைவான்
கொடுப்பவனுக்கு இடுக்கண் இல்லை
இடுக்கண் வருங்கால் சிரித்தால் தீரும்
அன்பு செய்தால் இன்பம் விளையும்
அன்பிலா நெஞ்சில் ஆண்டவன் இல்லை
சத்தியவான்களுக்கு நிதர்சனம் வேதம்
சாத்தான்களுக்குப் பொய்தானே வேதம்

**கந்தபேரின்பம்**
**காவலூர்க்கவிஞன்**

### இன்றைய மகளே...!

மன்னித்துவிடு என்னை
மிருகங்கள் வாழும்
மண்ணில் உன்னை
மகளாகப் பெற்றதற்கு
மன்னித்துவிடு என்னை
செம்மணியில் கிரிசாந்தி
அழுதபோது...
புங்குடுதீவில் வித்தியா
அனுங்கிய போது
எதுவும் செய்ய முடியாமல் போன
இந்த மண்ணில்...
எதுக்கம்மா நீ வந்தாய்?
பாதுகாப்பே இல்லா மண்ணில்
எப்படி உன்னை
பார்த்துக்கொள்வேன்
எண்ணும் போதே பயமாயிருக்கு...
பள்ளியில்கூட வேட்டையாட
ஓநாய்க்கூட்டம் ஒதுங்கி இருக்கே
சந்தியில் நிற்கும்
தெருநாயெல்லாம்
வெறித்துப் பார்க்க
பயமாயிருக்கு...
எப்படி உன்னைப் பாதுகாப்பேன்?
விடுதலையில்லா
தேசத்தில் உன்னை...
விலங்கு போட்டே
அழைத்துச் செல்ல
வலிக்குது உன்னைப்
பெற்ற நெஞ்சம்...
மகளே உனக்காய்
இந்த நாளில்
என்ன பரிசைத்
தேடித் தருவேன்...
அன்பையுருக்கி
ஆசையையடக்கி
காமுகரில்லா தேசம் செய்து
வீடுகட்டி தரவே ஆசை...

**ஆர்.சிந்து, உடுப்பிட்டி**

## செயற்கை

வானவில்லின்
ஜாலங்களைக் கண்டு மயங்கினோம்
வண்ணத்துப்பூச்சிகளின்
வர்ணங்களில் மனம் மகிழ்ந்தோம்
கல்லில் சிலை வடிக்க
கண்டு மனமுருகினோம்
சொல்லில் கவி படிக்க
கேட்டு பரவசமடைந்தோம்

இன்பம் இதுவென்று
ஏங்கி ஏங்கி நின்றோம்
துன்பம் வரும் வேளையிலே
துவண்டு கிடக்கையிலே
கண்டுகொள்ள யாருமில்லை
கானல் நீரான வாழ்க்கைக்கு
இயற்கை இன்பமாகிற்று

செயற்கைகள்
செய்யப்படுகின்றன...

வானவில் வருவதில்லை
வண்ணத்துப்பூச்சிகள்
அவதரிக்கவில்லை
கல்லில் சிலை காணாமல்போக
பிளாஸ்டிக் பொம்மைகள்
தொற்றிக் கொண்டன
காதில் தேன் பாய்ந்த
கவி வரிகள் இப்போது
வெறும் வார்த்தையும் சத்தமுமாய்...

தோன்றிய உலகமது
செய்யப்பட்டதாய் மாறிவிட
செய்யப்பட்ட மனிதர்கள்
செயற்படுகின்றர்...

**மாவை. நா.கஜேந்திரன்**

# மௌனத்தின் தேடல்– 364



### நம்பிக்கைத்துரோகி

கல்லானாலும் கணவன்
புல்லானாலும் புருஷன்
என்று உன்னை
சரணடைந்தவளின்
உண்மை அன்பை புரியாது
போலி அன்பை காட்டி
அவளை ஏமாற்றிவிட்டு
வேறு துணையின்
கரம் பற்றும் வஞ்சகனே
காலம்தான் உனக்கு
பதில் சொல்ல வேண்டும்

**சி.பிரியங்கா**
**மட்டுவில் தெற்கு**

### அரவணைப்பின் அன்பு

அரவணைப்பில் அன்பால்
அமுது போலாக்கி
பின்புறத்தால் உலா
கொல்லல் தகா

**நா.தனையசிங்கம்**
**கொக்குவில்**

### பட்டாம்பூச்சிகள்

வானத்திலே சிறகடிக்கும்
பட்டாம்பூச்சிகளாம் இளைஞர்
அவர்களின் சிறகுகளாம் காதல்
ஆனால் இவர் போல் சிலர் காதலை
கொச்சைப்படுத்துகிறார்கள்
அது ஏன்?

**ர.டயாளினி**
**சண்டிலிப்பாய்**

### நட்பும் காதலும்

பார்த்துப் பேசிப்பேசி
சேர்த்து வைத்தருமை
தோழியே மனம்மாறி
வில்லியான கதைதான்
இங்கும் நடக்கின்றது
தங்கு தடை ஏதுமின்றி
காதலும் நட்பும் தடம் மாறி
தானாகவே கைகோர்த்த
தன்மை என்றென்றும்
நன்மையைத் தராது
நெருப்பும் பஞ்சும்போல்
அருகருகே இருப்பதாபத்து
சந்தி சிரிக்க வைக்காமல்
விழிப்படையுங்கள்

**க.நாகராசா**
**நுணாவில்**

### தவறு அல்ல

அவன்
காதலிக்கு துரோகம்
செய்யவில்லை
காதலியின்
தோழியையும்
காப்பாற்றுகின்றான்
அவள்
தோழிக்கு துரோகம்
செய்யவில்லை
தோள் சாயும்
தோழியின் காதல்
சாயாது கை கொடுக்கிறாள்

**கில்பேட்**
**வாணர் குடியிருப்பு**

### காதல் நேரம்

உள்ளம் படபடத்து
உதிரம் சூடேறி
உணவில் சுவை பாராது
உடையில் வனப்பூட்டி
இரவும் பகலாகி
நிழலில் வதனம் பார்த்து
ஆமென்று சொல்லாவிட்டால்
அக்கினியே என் வீடு
போவென்று செப்பினால்
போவேன் பிணமாய் சுடுகாடு
காலம் கனிந்திருக்கிறது
காதல்தா! காதல்தா! காதல்தா!
காதல்தா! பெண்ணே!

**தான்தோன்றி,பண்டத்தரிப்பு**

### நீதியின் பிடி

இன்றைய இலத்திரனியல் யுகத்தில்
வாழும் இளம் சமுதாயம்
மாயை வலையில் சிக்காமல்
நீதியின் பிடியைப் பிடித்து
அன்பின் பிடியில் அணைத்து
வாழ்வை வாழ்ந்தால்
கோபம், கொடுமை, கொள்ளை
கொடூரம், கொலைகள்,
அநீதி நிகழ்வுகள்
இங்கும், அங்கும்,
எங்குமே நிகழாது!

**சி.சுகிர்தமலர்**
**உரும்பிராய்**

### 'காலம் கெட்டுக் கிடக்கு'

முதுகுக்குப் பின்னால்
முரண்படும் சீலம்
மோதித்தள்ளும்
ஒருவனுக்கு ஒருத்தி
என்ற சூத்திரம்
களைத்துப் போனதா– விசித்திரமே
கலவியின் தேடலில்
கவிழ்ந்து போன கல்வியறிவு
நெறிமுறை காக்க முடியாமல்
நிலை தடுமாறும்
இளமையின் சரசம்
உரசும் உலக விழுமியங்களை
உயர்த்திட முடியாமல் தள்ளாடும்
மண்ணின் மூத்த மாந்தர்களின்
முணுமுணுப்பு 'காலம் கெட்டுக் கிடக்கு!'

**அராலியூர்**
**சோ.சிவகுமாரன்**

# மௌனத்தின் தேடல் –365



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 16.08.2017ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளுக்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பு மாநகரின் கால நிலை என்றைக்குமே ஒரு அதிசயம்தான். இயல்பு வாழ்க்கையை ஒரு சில நொடிகளில் குழப்பி விடும்! மக்கள் நொடியிலும் வேகமாக இயல்பு வாழ்க்கைக்குத் திரும்புவது அதைவிட அதிசயம்!!

# விரக்தி



சிறுகதை

காலையில் வந்திறங்கிய பொழுது கொளுத்தியெறிந்த வெயில், சில மணித்தியாலங்களில், கொட்டும் மழையாகப் பொழிந்து கொண்டிருக்கிறது. வெள்ளம் கணுக்காலளவையும் தாண்டிப் பாய்கிறது.

கொழும்பின் வடிகாலமைப்பு என்ன தான் சீராக அமைக்கப்பட்டிருந்தாலும், கொட்டஹேனாவின் நெருக்கடிக்குள் வெள்ளம் சரணடைந்துவிடும். ஒருவரின் வீட்டுக் கூரையில் விழும் மழை நீர் இன்னொரு வீட்டின் மீது விழுந்து, மற்றவர் வீட்டுக் கூரையில் வழிந்தோடி, எங்காவது ஒரிடத்தில் மண்ணை முத்தமிடும். அங்கிருந்து தப்பிக்கும் முயற்சியில் பெரும்பாலும் தோற்றுப் போவ தென்னவோ மழை வெள்ளம்தான். அப்பிடித் தப்பிப் பிழைக்கும் நீரெல்லாம் அகப்பட்ட ஏதோவோர் தெருவினூடாகப் பாய்ந்தோடும்.

சலசலவென்று கால்கள் கனக்க நடப்பது போதாதென்று வேகமாக விரையும் முச்சக்கரவண்டிகளும் நீரை வாரியிறைத்துச் செல்லும்.

கொட்டஹேனாவில் ஒரு விலாசத்தைத் தேடுவதன் சிரமத்தை அனுபவித்தவர்களால் மட்டுமே உணர்ந்து கொள்ள முடியும். அதுவும் மழை பெய்யும் நேரமென்றால்... சொல்லவே வேண்டாம். யாரிடமாவது விசாரித்தால் 'உன்கென்ன பைத்தியமா?' என்பது போல் முறைத்து விட்டுச் செல்வார்கள்.

இன்றென்னவோ அந்த முகவரியை என்னால் இலகுவாகக் கண்டுபிடிக்க முடிந்தது.

அழைப்பு மணியை அழுத்திக் காத்திருக்க, மெதுவாகத் திறக்கப்படும் கேற்றினூடாக ஒரு சிறுமி தலையை நீட்டி, 'உங்கட பேர் என்ன? ஆரைப் பாக்க வேணும்?' என்கிறாள்.

நான் சொன்னவற்றை உள்வாங்கி,

"அம்மா, அப்பா போனில சொன்ன அங்கிள் வந்திருக்கிறார்" என்கிறாள்.

"கேற்றைத் திறந்து உள்ளுக்க கூப்பிடு"

"அங்கிள் உள்ளுக்க வாங்கோ"

அவள் எனக்காகக் காத்திருக்காமல் உள்ளே செல்கிறாள்.

நான் ஈரம் சொட்டச் சொட்டக் காத்திருக்கிறேன். இந்த நேரத்தில் ஒரு சூடான தேநீர் எப்படியிருக்கும்? என்று என் மனம் அங்கலாய்க்கிறது. திரும்பவும் அந்தச் சிறுமியே வருகிறாள்.

"அங்கிள் இந்த ரண்டு பொக்ஸ்சும் தானாம்... அப்பா குடுக்கச் சொன்னவர்"

நான் பெட்டிகளின் மீது பார்வையைச் செலுத்துகிறேன். ஒன்று கட்டிளமைப் பருவ வாலிபனின் தேகம் போன்று உறுதியாக இருக்க, மற்றையது பல் விழுந்த கிழவனின் உடம்பு போல...

"தங்கச்சி பெட்டியொன்று உங்கட வீட்டில இருக்குமோ?"

"இல்ல அங்கிள். கடேலதான் வாங்க வேணும்"

"பரவாயில்ல. ஒரு சின்னக் கயித்துத் துண்டு"

"இல்ல அங்கிள் வெளீல போய்த்தான் வாங்க வேணும்"

நான் இந்தச் சிறுமிக்கு அங்கிள் என்றால் உள்ளேயிருக்கும் அச்சிறுமியின் தாய் எனக்குச் சகோதரி. தெப்பமாய் நனைந்து போயிருக்கும் அவளின் சகோதரனுக்கு உதவிசெய்யும் எண்ணம் கொஞ்சம் கூட அவளுக்கு இல்லைப் போலும்.

அதனால்தான் "தண்ணி கொதிச்சிட்டுது. குளிக்கவெல்லோ வேணும்" என்ற குரல் உள்ளேயிருந்து கேட்கிறது.

நான் புரிந்து கொண்டு

"ஒரு நிமிஷம் தங்கச்சி... நான் ஒரு ஆட்டோ பிடிச்சுக் கொண்டு வாறன்"

"அந்த லைட் போஸ்ட்டடில நிக்கிற பச்சக் கலர் ஆட்டோவைப் பிடியுங்கோ அங்கிள். தெரிஞ்ச அண்ணாதான். பெற்றாவுக்கு நூறு ரூபாய்தான் எடுப்பார்"

முச்சக்கரவண்டி வேகமாக விரைகிறது. தெருவில் நடந்து செல்லும் பலபேர் தெப்பமாக நனைகிறார்கள்.

"கொஞ்சம் கெதியாப் போங்கோ தம்பி" நான் வசதியாக உட்கார்ந்திருக்கிறேன்.

"எந்த பஸ் ஸ்ராண்ட்?"

"ஹற்றன் போக வேணும். பிறை வேட்டிற்குப் போங்கோ"

சில நிமிடங்களில் ஆட்டோ நிறுத்தப் படுகிறது.

"எவ்வளவு?"

"நூற்றைம்பது"

"நூறு ரூபாய் எண்டு சொல்லிச்சினம்"

"அது C.T.B க்கு. கெதியாத் தாங்கோ இதில நிக்கேலாது"

நான் மனதினுள் சபித்தவாறு நூற்றைம்பதைப் படியளக்கிறேன்.

"ஐயா எங்க கொண்டு போகோணும்?"

ஒரு அரைக் காற்சட்டை மனிதன் உரப்பவது போலக் கேட்கிறான்.

"ஹற்றன் பஸ்ஸடிக்கு... எவ்வளவு?"

நான் முன்னெச்சரிக்கையாகக் கேட்கிறேன்.

"நம்மட ஆக்களுக்கு கூலி கேட்கேலுமே... சாப்பாட்டிற்கு ஏதும் தாங்கோ"

நான் ஒரு பெட்டியை அவன் தலையில் வைக்கிறேன்.

"மற்றப் பெட்டியையும் வையுங்கோ ஐயா"

அவன் நடைக்கு ஈடு கொடுக்க முடியாமல் 'பாவம் ஐம்பது ரூபாய் கொடுக்க வேண்டும்' என்ற எண்ணத்துடன் பின்னால் ஓடுகிறேன்.

ஒரு இருபத்தைந்தடி சென்றிருக்க மாட்டோம். ஒரு பஸ் தயாராக நிற்கிறது.

நடத்துநர் 'டிக்கியை' திறந்துவிட, நான் ஒரு பெட்டியை இறக்கி வைக்கிறேன். இரண்டு பெட்டியையும் எந்தவிதமான சிரமமும் இல்லாமல் தூக்கி வந்தவன் முகத்தில் இப்போது வலியும் வேதனையும் குடி கொண்டிருக்கிறது.

நான் அவன் எண்ணத்தைப் புரிந்து கொண்டு, அவனைப் பரீட்சிக்கும் நோக்கத்துடன்

"இறக்கி வையுங்கோ" என்கிறேன்.

"ஐயோ கழுத்து முறியப் போகுது. இறக்கி வையுங்கோ"

நான் பெட்டியை இறக்குகிறேன்.

"எவ்வளவு?"

"முந்நூறு ரூபாய்"

அதிகம் கேட்பான் என்று நான் எதிர் பார்த்ததுதான். நூற்றைம்பது ரூபாயைக் கொடுக்கிறேன்.

"காணாது இன்னும் நூற்றைம்பது தா" அவனின் மரியாதைக் குறைவு என் கோபத்தைக் கிளற,

"ஏன் உப்பிடிக் கொள்ளயடிக்கிறியள்? பத்தடி நடந்ததுக்கு நூற்றைம்பது காணாதே?" என்கிறேன்.

அவன் என் நெஞ்சில் கை வைத்துத் "தாடா" என்கிறான். நான் முறைத்தவாறே திரும்பிப் பார்க்க இன்னும் இரண்டு மூன்று அரைக் காற்சட்டைகள் என்னை நோக்கி வேகமாக வருகின்றன. நான் அவனின் கையைத் தட்டி விட்டு, இன்னொரு ஐம்பது ரூபாயைக் கொடுத்து விட்டு பேருந்தை நோக்கி விரைய அவன் துரத்தி வருகிறான். நான் பேருந்தினுள் ஏறிக் கொள்ள, இவற்றைக் கவனிக்காத சாரதி பேருந்தைச் செலுத்தத் தொடங்குகிறார். நான் மெதுவாக எட்டிப் பார்க்கிறேன். ஏதோ கெட்ட வார்த்தையால் திட்டியபடி அவன் விலகிச் செல்வது தெரிகிறது.

'சீ என்ன மனிதர்கள் இவர்கள்?' என்ற விரக்தி மனதில் நிறைகிறது.

ஒருவனின் அவசரத்தில்... கஷ்டத்தில்... அவனை ஏய்த்துப் பிழைக்கும் சமுதாயம்.

ஓட்டோக்காரன்...

மூட்டை தூக்குபவன்...

கடை நிலையில் மட்டுமா இப்படி...?

மேல் மட்டத்திலும்தான்!

முப்பத்தையாயிரத்தில் தொடங்கி.. நாற்பத்தியெட்டாயிரம் வரை உயர்த்திய அச்சகத்தினர்... கொடுக்க வேண்டிய நேரத்தில் கொடுக்காததால் எனது திட்டங்கள் ஒரு மாதம் வரை தள்ளிப் போனதைப் பற்றி அவர்களுக்குக் கவலையில்லை. எனக்குத்தானே அதனால் சில ஆயிரம் ரூபாய்கள் நட்டம் போயின.

ஒரு புத்தகத்தின் பிரசுரம் என்பது 'பிரசவத்திற்கு' ஒப்பானது என்பார்கள். தவிர்க்கப்பட முடியாத அந்த வலியை, வேதனையை, பதற்றத்தை விருப்புடன் வரவேற்கும் தாய்மாரைப் போல, நானும்..

ஜன்னலினூடாகப் பார்க்கிறேன். மழை குறைந்ததாய்த் தெரியவில்லை. பேருந்தினுள் ஏறியவுடன் உறங்கிவிடும் பழக்கம், எனக்கு இறைவனால் கொடுக்கப்பட்ட வரம். இன்று மட்டும் ஏனோ உறக்கம் வர மறுக்கிறது. 'இவ்வளவு புத்தகத்தையும் எப்படி என் இருப்பிடம் கொண்டு போய்ச் சேர்க்கப் போகிறேன்' என்ற எண்ண மேற்பட, தலை வேறு வலிக்கத் தொடங்கு கிறது.

'நடப்பது நடக்கட்டும்' என்று மனதைத் தேற்றி உட்கார்ந்திருக்கிறேன். பாதித் தூக்கமும் பாதி விழிப்புமாக... சில மணி நேரப் பிரயாணத்தின் பின்னர்

"மல்லியப்புச் சந்தி... சுருக்கா றங்குங்க"

வட்டவளையைக் கடந்த போது தூறிக்கொண்டிருந்த மழை மீண்டும் கொட்டத் தொடங்கியிருந்தது. 'டிக்கியைத் திறக்க... திகைத்துப் போகிறேன்.

புதிதாய் இருந்த பெட்டியும் வாய் பிளந்து கொட்டிவிடக் காத்திருக்கிறது. மற்றைய பெட்டியிலிருந்த புத்தகங்கள் எல்லாம் சிதறிப் போய்க் கிடக்கிறது.

"சுருக்கா எடுங்கோ"

"ஓமண்ணை... ஒரு நிமிஷம்"

நான் ஒரு பெட்டியைத் தூக்கிக் கொண்டோடி, பேருந்து தரிப்பிடத்தினுள் வீசி விட்டு, திரும்பி வந்து, புத்தகங்களைக் கொத்தாய் அள்ளிக் கொண்டோடி..

மீண்டுமொரு முறை...

என்ன அதிசயம்? எனக்கு மட்டும் மழை படவில்லை. திரும்பிப் பார்க்கிறேன்.

"சேர் சீக்கிரம் போங்க.. நாலஞ்சு புஸ்தகம் டிக்கீல இருக்கு" கொட்டும் மழையில் எனக்குக் குடை பிடித்து பின்னால் ஓடி வருகிறார் ஒரு தோட்டத் தொழிலாளி.

என் கண்ணீரும் மழை நீருடன் கலக்கிறது.

எல்லாப் புத்தகங்களும் பாதுகாப்பாக பேருந்து நிலையத்தினுள் மாற்றப்பட்ட திருப்தி என்னுள் நிறைகிறது.

சில நிமிடங்கள் கரைந்து போக, பேருந்தொன்று நிறுத்தப்படுகிறது. நான் பெட்டியைத் தூக்கிக் கொண்டோடு கின்றேன்.

"சேர் தாங்க சேர்.. சீக்கிரம் போய் மீதிய எடுத்திட்டு வாங்க"

நடத்துநர் பெட்டியை வாங்கிக் கொள்ள, ஆசனத்தில் அமர்ந்திருந்த ஒருவரும் என்னுடன் இணைந்து, கொட்டிப் போய்க்கிடக்கும் புத்தகங்களை அள்ளிக் கொண்டு பேருந்தினுள் ஏறுகின்றார்.

"சேர் இருங்க" ஒரு முதியவர் எழுந்து கொள்கிறார்.

மனிதர்கள் பற்றிய என் முன்னைய கணிப்பெல்லாம் கரைந்து போகிறது.

தான் நனைந்து எனக்குக் குடை பிடிக்கும் ஒரு தோட்டத் தொழிலாளி..

என் சுமையைத் தன் சுமையாய்ச் சுமக்கும் நடத்துநர்...

என் புத்தகங்களை தன் புத்தகங்களாக சுமக்கும் இளைஞன்...

தனது ஆசனத்தை எனக்காக விட்டுத் தரும் முதியவர்...

ஆ...இவர்கள் அல்லவா மனிதர்கள்! இல்லையில்லை! இவர்கள்தான் மனிதர்கள்!!

பேருந்து பத்தன சந்தியை நெருங்கிக் கொண்டிருக்கிறது. முன் விளக்கிலிருந்து பரவிச் செல்லும் ஒளி வெள்ளத்தில் எனது ஆசிரியப் பயிலுநர்கள் கோரைப் பைகளுடன் எனது வருகைக்காக காத்திருப்பது தெளிவாகத் தெரிகிறது.



ம.நிரேஸ்குமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்பி, தொப்பிகல் மலைகள்

## ஆக்கிரமிப்பின் உச்சம்

கல் தோன்றிய காலத்தில் இருந்தே இந்தப் பிரதேசத்தில் இருக்கும் குசலான மலை, கேவர் மலை, தொப்பிகல் மலை, கார் மலை, குடும்பி மலை, நாகம்பு மலை, ரெண்டு கல் மலை, படர் மலை, மண் மலை போன்ற பல மலைகளில் இதுவும் ஒன்று. பெரிய மலைகள் என்று இல்லாமல், மலைக் குன்றுகள் என்றே சொல்லாமல்.

A-15 திருமலை வீதியில் மட்டக் களப்பில் இருந்து 24ஆவது கிலோமீற்றர் தூரத்தில் வரும் கிரான் சந்தியில் இரு ந்து, புலி பாய்ந்தகல் வீதியில் வடமு னையை நோக்கிச் செல்லும் பாதையில் 26 ஆவது கிலோமீற்றர் பிரிந்து 6-7 கிலோமீற்றர் சென்றால் குடும்பி மலைக் கிராமம் இருக்கின்றது.

வரலாற்று சிறப்பு மிக்க எந்த தடயங்க ளும் இல்லாவிட்டாலும் அண்மைக்கால வரலாற்றில் இடம்பிடித்து விட்ட ஒரு மலையாகவும் பெயராகவும் இந்த தொப்பிகல் மலைப் பிரதேசம் இடம் பெற்று விட்டது. தொப்பிகல் மலை சம்பந்தமாக மயக்கமான தெளிவற்ற நிலை பலரிடமும் இருக்கின்றது.

1977 ஆம் ஆண்டுகளுக்குப் பிறகு சிங்கள அரசினதும், பாதுகாப்பு படைக ளினதும் பேசு பொருளாக இந்த மலை இருந்து வருகின்றது.

திடீர் என்று 2006 ஆம் ஆண்டு இந்த தொப்பிகல் மலைப் பிரதேசம் சர்வதேச நாடுகளின் கவனத்தை ஈர்த்த தோடு (google) வலைத்தளத்திலும் தேடப்படும் ஒரு பொருளாக இந்தப் பிரதேசம் மாறியது. அத்தோடு உள்ளூ ரிலும், அண்டை நாடுகளில் இருந்தும் இந்தப் பிரதேசத்தை எல்லோரும் ஆவ லோடும் உற்றுப் பார்த்துக் கொண்டு இருந்தார்கள்.

என்ன நடக்கின்றது? எப்படி நடந்த தது? என்ற பல கேள்விகள் எல்லோரு டைய மனங்களையும் கிளறிக் கொண்டு இருந்தது. போதாக்குறைக்கு இலங்கை அர சாங்கமும் இராணுவத்தினரும் அரச ஊட கங்கள் ஊடாக தொப்பிகல் மலைப் பிர தேசம் பற்றியே பேசிக் கொண்டு இருந்தது.


அத்தோடு இலங்கை மத்திய வங்கி யும் மிகவும் முக்கியத்துவம் கொடுத்து தொப்பிகல் மலை என்று, குடும்பி மலையின் படத்தை 1000 ரூபா நாண யத்தாளில் பதிவிட்டு அந்தப் பிரதே சத்தில் அரச படையினர் சிங்கள கொடி யைப் பறக்க விடுவது போன்று அதி தீவிரமாக ஏற்றிக் கொண்டிருப்பதாக சாட்சிப்படுத்தி இருந்தது. இது ஒரு முக்கியத்துவம் மிக்க வரலாற்றுப் பதிவாக சிங்கள அரசு பதிவிட்டிருந்தது.

இந்தக் கொடி ஏற்றப்படுவதற்கு முன் இங்கே இந்தப் பிரதேசத்தில் பறந்து கொண்டிருந்த புலிக்கொடி பற்றியும் அதன் வரலாற்றுத் தடம் பற்றியும் ஆய்வா ளர்களைத் தேடிப் பார்க்க தூண்டிய ஒரு நிகழ்வாக இதைப் பார்க்கலாம். முதலில் தொப்பிகல் மலை, குடும்பி மலை இரண் டுக்கும் இடையில் உள்ள வித்தியாசம், தூரம் என்பவற்றைப் பார்ப்போம்.

இந்தக் குடும்பி மலை, கிரான் சந்தி யில் இருந்து 26ஆவது மைல் கல்லில் இருந்து குறுக்காக 6 கிலோ மீற்றர் தூரத்தில் இருக்கின்றது. சாதாரணமாக ஒரு சூடு நெற் கதிர்களை அறுத்து குவித்து வைப்பது போன்று தோற்றத்தில் இருக்கும்.

அடிவாரம் அகன்றும் விரிந்தும் வட்ட மாகவும் உச்சியில் ஒரு கல்லும் உடை யாது. இந்த உச்சிக்கல் தூரத்தில் இருந்து பார்த்தால் ஒரு குடும்பியைப் போல (பிரா மணர்கள் கட்டும் குடும்பியைப் போல) இருக்கும். இந்தத் தோற்றத்தை தூரத்தில் இருந்து பார்த்தால் தெளிவாகத் தெரியும்.

தொப்பிகல் மலை என்பது அதே பாதையில் மியான் குளச்சந்தியில் இருந்து 30 ஆவது கிலோ மீற்றரில் பிரிந்து தென் கிழக்குப் பக்கமாக 5 கிலோமீற்றர் சென்று பெரிய மியான் கல் வழியாக வெள்ளைக் கல் மலை, பால வட்டவான், மயிலத்த மடு, மாதவணை







போன்ற காட்டுப் பிரதேசங்களை அண்டி யதாக கிரானில் இருந்து சுமார் 50 கிலோமீற்றர் தூரத்தில் இருக்கின்றது.

அதேபோல் செங்கலடிச் சந்தியில் இருந்து பதுளை வீதியில் சென்று மேற் குப் பக்கமாக, மாவடி ஓடை, புலுட்டு மான் ஓடை, வழியாகவும் செல்லலாம்.

பொலநறுவை மாவட்டத்தில் இருந்து மட்டக்களப்பு - திருமலை வீதியில் மன் னப்பிட்டிச் சந்தி ஊடாக அருகம்பல என்ற சிங்கள கிராமத்தை தாண்டி கிழக்குப் பக் கமாக, மாந்தலை ஆற்றைக் கடந்தும் தொப்பிகல் மலைக்குப் போகலாம்.

இது வட்ட வடிவம் அல்லாத முன்பக் கத்திற்கு மட்டும் முனை வைத்த ஒரு தொப்பியை வைத்தது போன்று தோற்ற த்தில் இருக்கும். இந்தப் பிரதேசத்தில் இன்னும் ஒருவரும் குடியேறவில்லை.

ஆனால் நீண்டகாலமாக வந்தாறு மூலை, சித்தாண்டி, கிரான் போன்ற கிராமங்களைச் சேர்ந்தவர்கள் பருவ காலத்தில் மாடுகள், தங்கள் கால்நடை களை மேய்ப்பதற்காக இங்கு வருவார் கள். இந்தப் பகுதி நீண்டகாலமாக தமிழர்களின் கால்நடைகள் மேய்க்கும் மேய்ச்சல் தரையாகவே பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

ஆனால் யுத்தம் முடிந்த பிறகு பெரும்பான்மை இனத்தவர்கள் மியான் கல், மாந்தலை ஆற்றைக் கடந்து வந்து இந்த பிரதேசத்தில் இருந்த காடுகளை அழித்து நெல்லும் வேறு உப உணவுப் பயிர்களும் செய்தார்கள்.

அத்தோடு இங்கு உள்ள தமிழர் களின் கால்நடைகளைத் துப்பாக்கியால் சுட்டும் சுருக்கு வைத்துப் பிடித்தும் அநி யாயம் செய்தார்கள். இதைக் கேட்கச் சென்ற தமிழர்கள் அடித்து துன்புறுத் தப்பட்டார்கள். கால்நடைகளை கட்டி வைத்து நட்டஈடும் அறவிட்டார்கள்.

இவர்கள் காடுகளை அழித்த போது வன இலாகாவினர் கண்டு கொள்ள வில்லை. இவர்களுக்கு உதவியாகவும் பாதுகாப்பாகவும் மாந்தலை ஆற்று ஓரத்தில் முகாம் அமைத்து பாதுகாப்புப் படையினர் இருந்தார்கள்.

இந்த மேய்ச்சல் தரைப் பிரச்சினைக் கும் அத்துமீறிய குடியேற்றத்துக்கும் கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் கி.துரைராசசிங்கம் நீண்டகாலமாக பல முயற்சிகளை எடுத்து பல தரப்பினர்க ளிடம் பேசி தற்போது ஒரு முடிவுக்கு வந்திருக்கின்றார்கள்.

இதன்படி ஒரு பெரிய காவலரண் அமைக்கப்பட்டதோடு, இங்குள்ள கால் நடை வளர்ப்போருக்கு பாதுகாப்பும் கால் நடைகளுக்கான குடிநீர் குளமும் அமைக் கப்பட்டுள்ளது.

இந்த இரண்டு மலைகளுக்கும் வித்தி யாசம் தெரியாதவர்களே, தொப்பிகல் மலையின் மறுபெயர் தான் குடும்பி மலை என்று நினைத்துக் கொண்டு இருக்கின்றார்கள். இந்த மயக்கத்தை ஏற்படுத்தியது இலங்கை அரசாங்கமும் படைகளுமே ஆகும்.

குடும்பி மலையைச் சுற்றி மீரானக் கடவை, சின்ன மியான்கல், பெரிய மியான்கல்குளம், கிரான் வட்டை, அசுரவணச் சோலை போன்ற பல கிரா மங்கள் இருக்கின்றன.

1960 ஆம் ஆண்டு காலப் பகுதியில் சித்தாண்டி, கிரான், சந்திவெளி போன்ற கிராமங்களைச் சேர்ந்த மக்கள், காடுகள் வெட்டி சேனைப் பயிரும் வேளாண் மையும் செய்து வந்தார்கள். 1970 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தேக்கு மரம் நட்டும் அரசாங்கத்தின் திட்டத்தின்படி பலருக்கு இங்கே குடியேற வாய்ப்புக்கள் கிட்டியது.

1977ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஒரு பௌத்த பிக்குவின் தலைமையில் ஆயிரக்கணக்கான சிங்கள மக்கள் இப்பகுதியில் குடியேற்றப்பட்டு தமிழர் களின் நிலங்கள் பறிக்கப்பட்டு தமிழர்கள் எல்லாம் விரட்டி அடிக்கப்பட்டார்கள்.

இந்தக் குடியேற்றத்திற்கு பொலந றுவை பாராளுமன்ற உறுப்பினர் ஒருவ ரும் அதி தீவிரமாக செயற்பட்டார். அத் தோடு அரசாங்கத்தின் பூரண ஒத்து ழைப்பும் இருந்தது.

இந்தக் காலப் பகுதியில் "பொடியன் களின்" ஆத்திரம் மேலோங்கியதால், இந்தக் குடியிருப்புக்கள் தீயிட்டு அழிக் கப்பட்டதோடு, குடியேற்ற வாசிகளும் விரட்டி அடிக்கப்பட்டார்கள்.

குடும்பி மலையை அண்டிய கிரா மங்களிலெல்லாம் சின்ன மியான் கல், பெரிய மியான்கல் ஆகியவற்றில் 69 குடும்பங்களும் ஏனைய பகுதிகளில் எல்லாம் சேர்த்து மொத்தம் 169 குடும் பங்களைச் சேர்ந்த 774 பேர் குடியிருக் கின்றார்கள்.

மடுவடிப் பிள்ளையார், முத்துமாரி அம்மன், கண்ணகி அம்மன், வேங்கை யடி முருகன் போன்ற ஆலயங்களை யும் கட்டி வழிபட்டு வருகின்றார்கள்.

யுத்த காலத்தில் விடுதலைப் போராட் டத்தோடு இந்த மக்கள் இரண்டறக் கலந்திருந்தார்கள். பல போராளிகளை யும் மாவீரர்களையும் தந்த மண். இந்த மண். யுத்த அழிவுகளின் தடங்களை யும் இன்றும் இங்கே காணலாம்.

யுத்தம் முடிந்த பின்னர் இந்தப் பகுதி ஒரு ஆக்கிரமிப்புப் பிரதேசமாகவே இருக்கின்றது. மியான்கல்குளச் சந்தி யில் பெரியதொரு இராணுவ முகாமும் வசதிகளுடன் கூடிய உல்லாச விடுதியும் இருக்கின்றது. இந்த விடுதியை இராணு வத்தினரே நடத்தி வருகின்றார்கள்.

கிரான் ஆற்று ஓரம் இருந்து புலி பாய்ந்த கல், தரவை, நெடும் பாதை எங்கும் இரா ணுவ முகாம்களும் காவல் அரண்க ளும் இன்று இங்கு இருப்பதைக் காண லாம். இவ்வாறு சிங்கள பௌத்த பேரின வாத அரச இயந்திரத்தின் நில ஆக்கிர மிப்பின் அடையாளமாக குடும்பி மலை யும் தொப்பிகல் மழையும் காணப்ப டுகின்றது.

நன்றி இணையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணவாழ்வு சிறக்க ஐந்து வழிகள்



❖ நம்பிக்கை

கணவன்-மனைவி இருவரும் ஒருவரையொருவர் நன்றாக புரிந்துகொள்ள வேண்டும். ஒரு வரை மற்றவர் முழுமையாக நம்ப வேண்டும். தங்களுக்கென்று தனிப்பட்ட திறமை உள்ளது என்பதை உணர வேண்டும். அதை செயற்படுத்திக் காட்டும் வாய்ப்பினை ஒருவருக்கொருவர் உருவாக்கிக் கொடுக்க வேண்டும். வருங்காலத்தில் என்ன வெல்லாம் நடக்கப்போகிற தோஎன்று பயம் கொள்வதைவிட, நிகழ் கால வாழ்க்கையை வெற்றிகரமாக நடத்திக் காட்டுவது தான் புத்திசாலித்தனம்.

❖ பாதுகாப்பு

ஆண்களைவிட பெண்களுக்குத்தான் அதிக பாதுகாப்பு தேவைப்படுகிறது. திருமண வயதையடையும் வரை பெண்களுக்கு பெற்றோரால் பாதுகாப்பு தரப்படுகிறது. பெண்கள் தங்கள் தாயைக் காட்டிலும் தந்தையே அதிக பாதுகாப்பு தருவதாக எண்ணுகின்றனர். திருமணத்திற்கு பின் பாதுகாப்பிற்காக கணவனை நம்பி வாழ்கின்றனர்.

இந்த விடயத்தில் முரண்பாடு நிகழும் போதுதான் ஈகோ போன்ற பிரச்சினைகள் உருவாகின்றன. விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை இல்லாததுதான் இதற்கு காரணம். பெண், ஆணை விட தான் தான் மேலானவள் என்றும், ஆண் பெண்ணை விட தானே எல்லாவிதத்திலும் மேலானவன் என்றும் எண்ணுகின்றனர். இரு வரும் அவரவர் தனித் தன்மைகளில் மேலானவர் தான்.

❖ மரியாதை

ஒரு பெண் திருமணத்திற்கு பின் தன்கணவருடைய பெருமை, மரியாதை, கௌரவம் என்று அனைத்து விடயங்களிலும் தனக்கும் பங்குண்டு என்பதைக் காட்ட வேண்டும். அதில் தான் பெண்ணுக்கு மரியாதை உள்ளது. அதேபோல், மனைவியின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து அவளுடன் இணைந்து ஒற்றுமை குலையாமல் குடும்பத்தை பராமரிப்பதில் தான் கணவனுக்கு மரியாதை உள்ளது. இயல்புக்கு மீறிய நடத்தைகளில் ஈடுபடும் போது அவர்களது மரியாதைக்கு பங்கம் வந்து விடுகிறது.

❖ அன்பு

வாழ்க்கை பாதையை சீரமைக் கும் ஒரு கருவிதான் அன்பு. வாழ்வை அர்த்தமுள்ளதாக மாற்றும் வல்லமை அன்பிடம் மட்டுமே உள்ளது. இந்த உன்னதமான உணர்வுகள் தான் நம் வாழ்வையே அர்த்தமுள்ளதாக மாற்றக் கூடியவை. அன்பால் மலரும் உணர்வுகளே குடும்பத்தை வழிநடத்திச் செல்லும் என்பதை இருவரும்உணரவேண்டும். "என்னை நல்லபடியாக வைத்துக் கொள்ளும் அன்பு உன்னிடம் இருந்து நிச்சயம் கிடைக்கும்" என்ற எண்ணம் தம்பதிகள் இருவரிடம் வாழ்நாள் முழுவதும் நீடிக்க வேண்டும்.

❖ நேர்மை

நல்ல விடயங்களின் அடிப்படையில் உருவாக்கபடும் கூட்டுத் தொகுப்பே குடும்பம். நமக்கு நேர்மை அவசியம். "என் சிந்தனை உட்பட எனது ஒவ்வொரு வார்த்தையும், செயலும் உண்மை. அதை உன்னோடு பகிர்ந்து கொள்வேன். என் நோக்கம், இயல்பான முறையில் நீண்ட நாள் உறவை பேணுவது தான்" என்று இருவரும் எண்ண வேண்டும். நேர்மை இல்லாத குடும்பம் தண்டவாளத்தில் ஓடாத ரயில் போன்றது. நேர்மைதான் குடும்பத்தின் முதுகெலும்பு.

# மின்சாரத்தை சாப்பிட்டு உயிர் வாழும் மனிதன்!

உத்திரபிரதேச மாநிலம் முசாபர் நகரை சேர்ந்தவர் நரேஷ்குமார். இவரை அப்பகுதி மக்கள் மின்சார மனிதன் என அழைக்கின்றனர்.

நரேஷ்குமாரின் உடலில் மின்சாரம் பாய்ந்தால் அவருக்கு எந்த ஆபத்தும் ஏற்படுவதில்லை.

இதனையடுத்து அந்த நபருக்கு பசி எடுக்கும் போது அவர் பல்புகளை எரிய விடுகிறார்.

பிறகு அதன் ஒயர்களை எடுத்து தன் வாயில் வைத்து கொள்கிறார். இவ்வாறு 30 நிமிடங்கள் செய்வதன் மூலம் நரேஷ்குமாருக்கு பசி அடங்கி விடுகிறது.

நரேஷ்குமார் ஒருநாள் தெரியாமல் மின்சார வயரை



தொட்டுள்ளார். அப்பொழுது அவர் உடல் மீது மின்சாரம் பாய வில்லை .


இதனால் தனக்கு ஏதோ அபூர்வ சக்தி இருப்பதாக நரேஷ்குமார் தெரிந்துகொண்டார்.

மேலும் அவர் தொலைக் காட்சி வோஷிங் மிஷின் மற்றும் குளிர்சாதன பெட்டி போன்ற எல்லா வகையான மின்சார பொருட்களையும் தொடுவேன் என கூறியுள்ளார்.

இந்நிலையில் வீட்டில் உணவு இல்லாத போது மின்சார வயர்களை வாயில் வைத்து கொள்வதால் பசி அடங்கி விடுவதாகவும் கூறியுள்ளார்.

# ஏன்? எதற்கு? எதில்?

## மைலேஜின் மஜிக் ஸ்விட்ச்



(சென்றவாரத் தொடர்ச்சி)...

### கிளட்ச் கேபிள்

கிளட்ச் அசெம்பிளிக்கு, முன்னே சொன்ன மொத்தப் பணிகளையும், ஒரு வயர் மூலமாகக் கடத்திச்செல்வதுதான் இந்த கிளட்ச் கேபிள்.

### கிளட்ச் லீவர்:

மோட்டார் சைக்கிள் ஹேண்டில்பாரில் இடதுபக்கம் இருக்கும் இந்த கிளட்ச் லீவர், உலோகத்தால் செய்யப்பட்டிருக்கும். கிளட்ச் அசெம்பிளிக்கு இன்புட், இந்த லீவர் மூலமாகத்தான் செல்கிறது.

### எப்படி வேலைசெய்கிறது கிளட்ச்?

இன்ஜினும் கிளட்ச்சும் ஒரு வாகனத்தில் தனித்தனியாக இருந்தாலும், இரண்டுக்கும் தொடர்பு உண்டு. இன்ஜினின் ஒரு பகுதி கிளட்ச் என்றும் சொல்லலாம். இன்ஜின் கிராங்க்ஷாப்ட்டில் இருந்து டிரான்ஸ்மிஷன். அதாவது, கியர்பாக்ஸ்க்கு பவரை என்கேஜ் செய்வதும் டிஸ்என்கேஜ் செய்வதும் கிளட்ச்தான். இதனால் கிடைக்கும் பவரை, அப்படியே பைக்கின் பின்பக்கச் சக்கரத்துக்கு அனுப்பும் வேலைதான் கியர் பாக்ஸினுடையது.

ஒரு நோர்மல் கண்டிஷனில்... அதாவது இக்னீஷன் ஆஃப் செய்யப்பட்ட நிலையிலும்கூட, கிளட்ச் எப்போதுமே இன்ஜினுடன் தொடர்பில் இருக்கும். வாகனம் ஓடும்போதும், கியர் மாற்றும் வேளையில் கிளட்ச்சை நீங்கள் இறுகப் பற்றும்போதும், கிளட்ச்சின் உள்ளிருக்கும் காயில் ஸ்பிரிங்குகள் கம்ப்ரஸ் ஆகி, பிரஷர் பிளேட்டுகள் விரிவடையும். இதனால் கிளட்ச் அசெம்பிளிக்கும், இன்ஜினுக்கும் உண்டான தொடர்பு அற்றுப்போகும். இந்த நேரத்தில் கியர் பாக்ஸும், வீல்களுக்கு பவர் அனுப்பும் வேலையைச் செய்யாது. எனவே, நீங்கள் கிளட்ச்சை நன்றாகப் பிடித்து கியர்போடுவதுதான், இன்ஜினுக்கும் கியர் பாக்ஸுக்கும் கிளட்ச்அசெம்பிளிக்கும் நல்லது. இதைத்தான் ஹகிளட்ச் பிளே' என்கிறோம். பிறகு கிளட்ச்சை ரிலீஸ் செய்ததும், மீண்டும் இன்ஜினுக்கும் கிளட்ச் அசெம்பிளிக்கும் தொடர்பு ஏற்பட்டு, உங்கள் வாகனத்துக்கு வேகமும் பவரும் மாறி மாறித் தொடர்ச்சியாகக் கிடைக்கிறது.

### கிளட்ச்சுகளில் இரண்டு வகை...

கிளட்ச்சுகளில் இரண்டு வகை உண்டு. டிரை கிளட்ச், வெட் கிளட்ச் சாதாரண கணனி மோட்டார் சைக்கிள்களுக்கு, வெட் கிளட்ச்தான்




பயன்படுத்துவார்கள். இதன் பெயருக்கு ஏற்ப, இது இயங்குவதற்கு ஈரப்பதம் மிகவும் முக்கியம். அது இன்ஜின் ஓயில் மூலம் கிடைக்கிறது. ஓயில் மூலம் கிடைக்கும் வழவழப்புத்தன்மையில்தான் இது இயங்குகிறது. இந்த கிளட்ச் செட்-அப் முழுவதும், மோட்டார்சைக்கிளின் கேஸ்க்கு உட்புறம் பொருத்தப்பட்டிருக்கும். லூப்ரிகேஷன் மூலம் இயங்கு வதால், டிரை கிளட்ச்சுடன் ஒப்பிடும்போது, இதன் இயக்கம் மிகவும் ஸ்மூத்தாக இருக்கும். இதில் சத்தமும் குறைவுதான். ஆனால் இதைக் கழற்றி மாற்றுவது கொஞ்சம் சிரமம்.

டிரை கிளட்ச்சும், கிட்டத்தட்ட இதே சிஸ்டம்தான். ஆனால் இதற்கு ஆயில் தேவைப்படாது. லூப்ரிகேஷன் மூலமும் இயங்காது. இதை, பைக்கின் கேஸ்க்கு வெளியே பொருத்தியிருப்பார்கள். கண்ணுக்குத் தெரியும்வண்ணம் வெளியே இருப்பதால், இதை அகற்றி மாற்றுவது எளிது. டுகாட்டி போன்ற ஹை-பவர் சுப்பர் பைக்குகளில் இருப்பது டிரை கிளட்ச்தான்.

### கிளட்ச் பிளே எப்படி இருக்க வேண்டும்?

கிளட்ச் என்றால், இறுகப் பிடிப்பது என அர்த்தம். அப்படியென்றால், இறுகப் பிடிப்பதற்குக் கண்டுபிடிக்கப்பட்டதுதான் கிளட்ச். ஆம்! நீங்கள் கியர் போடும்போதும் குறைக்கும்போதும், எவ்வளவுக்கு எவ்வளவு அழுத்தமாக கிளட்ச்சைப் பிடிக்கிறீர்களோ, அவ்வளவுக்கு அவ்வளவு உங்கள் இன்ஜினும் ஹேப்பி... கியர்பாக்ஸும் ஹேப்பி! அதே நேரத்தில், பிரேக் பிடிக்கும்போது சிலர் கிளட்ச்சையும் சேர்த்தே பிடிப்பது... சிக்னலில் நிற்கும்போது முதல் கியரில் கிளட்ச்சைப் பிடித்துக் கொண்டே நிற்பது... எல்லாமே ரொம்பத் தப்பு பாஸ்!

ஏனென்றால், ஒரு மோட்டார் சைக்கிளின் மைலேஜ்க்கும் கியர் பாக்ஸின் ஆயுளுக்கும் மஜிக் ஸ்விட்ச், இந்த கிளட்ச்தான். எனவே, இறுக்கிப் பிடியுங்கள் முறுக்கி விரட்டுங்கள். (முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முப்பது ஆண்டுகளை நிறைவு செய்யும்

# இலங்கை-இந்திய ஒப்பந்தம்



இலங்கையில் நீண்ட காலமாக நிலவிய இனப்பிரச்சினையை தீர்ப்பதற்காக இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும் இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனவும் 1987 ஜுலை மாதம் 29 ஆம் திகதி மேற்கொண்ட எழுத்து மூலமான ஆவணமே இலங்கை-இந்திய ஒப்பந்தம். இராணுவம் ஒப்பரேஷன் லிபரேஷன் நடவடிக்கை மூலம் வடமராட்சிப் பிரதேசத்தைக் கைப்பற்றிய போது இந்திய அரசு தலையீடு செய்து யுத்தத்தை நிறுத்தியதோடு தொடர்ந்து இராஜரீக நெருக்குவாரங்களைக் கொடுத்து ஒப்பந்தத்திற்கு இலங்கை ஜனாதிபதியை சம்மதிக்க வைத்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்விடயத்தில் இந்தியாவின் அக்கறை, துடிப்பு என்பவற்றை மிக சாணக்கியமாக பயன்படுத்தி ஒப்பந்தம் செய்த ஜே.ஆர். இதனை 1918 இல் சோவியத் ஒன்றியம், ஜேர்மனுடன் செய்த Brest Litovsk ஒப்பந்தத்துடன் ஒப்பிட்டுப் பேசினார். வடக்கு- கிழக்கை நிரந்தரமாக இணைக்க மறுத்த ஜே.ஆர். தற்காலிக இணைப்புக்கே ஒப்புக் கொண்டார். விடுதலைப் புலிகள் இதனை ஏற்றுக் கொள்ளவில்லை. வடக்கு-கிழக்குப் பிரதேசத்தில் வந்திறங்கிய இந்திய அமைதி காக்கும் படைக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே முரண்பாட்டை ஏற்படுத்தி யுத்தத்தை உருவாக்குவதே இலங்கை அரசாங்கத்தின் மூலோபாயமாகவிருந்தது.

இலங்கை- இந்திய ஒப்பந்தத்தையடுத்து சுதுமலையில் நடைபெற்ற மாபெரும் மக்கள் கூட்டத்தில் கலந்து கொண்ட பிரபாகரன் இந்தியாவின் புவிசார் அரசியலையும் அதனுடன் தொப்புள் கொடி உறவாக பிணைந்து நிற்கும் இலங்கைத் தமிழர் பிரச்சினையையும் கருத்தில் கொண்டு இந்திய இராணுவ வீரனுக்கு எதிராக ஆயுதம் தூக்கமாட்டோம் எனப் பேசினார். அடுத்து 1987 ஓகஸ்ட் மாதம் யாழ்ப்பாணக் குடா நாட்டின் சிறு கலந்துரையாடல்களில் பங்கு கொண்டு தமது நிலைப்பாட்டை எடுத்துச் சொன்னார்.

அந்தவகையில் சாவகச்சேரியில் ஒரு கூட்டத்தில் பங்கு கொண்ட பிரபாகரன் வடக்கு- கிழக்கு மாகாணங்கள் நிரந்தரமாக இணைக்கப்படும் எனவும் காணி பொலிஸ் அதிகாரங்களுடன் புனர்வாழ்வுக்கான நிதியை இந்திய அரசாங்கம் தருமெனவும் ராஜீவ் காந்தி உறுதி அளித்துள்ளதால் வடக்கு- கிழக்கு நிர்வாகத்தை ஏற்பதெனவும் ஜே.வி.பி. தென்னிலங்கையில் ஒப்பந்தத்திற்கு எதிராக தொடர்ந்து கிளர்ச்சி செய்ய அது எமக்கு சாதகமாக அமையும் எனவும் கூறினார்.

பின்னர் செப்டெம்பர் 15 ஆம் திகதி அரசியல் பொறுப்பாளர் திலீபன் ஐந்து அம்சக் கோரிக்கையை முன்வைத்து சாகும் வரை உண்ணா நோன்பிருந்து உயிர் நீத்தார். அடுத்த ஒக்டோபர் மாதம் குமரப்பா, புலேந்திரன் உட்பட பன்னிருவர் கடலில் ஆயுதங்களுடன் பிடிபட்டு பேச்சுவார்த்தை பயன் அளிக்காத நிலையில் தங்கள் விதிமுறைகளுக்கு அமைய சயனட் உட்கொண்டு மரணித்தார்கள்.

ஜே.ஆரின் மூலோபாயம் நிறைவேறியது. ஒக்டோபர் 10 இல் விடுதலைப் புலிகளுக்கும் இந்திய அமைதி காக்கும் படைக்கும் இடையே யுத்தம் மூண்டது. அப்போது ஜே.ஆர். ஒரு பேட்டியில் இலங்கை ஆளணி மற்றும் நிதி விரயமாகாமல் யுத்தத்தை செய்கின்றேன் என்றார்.

1985 களில் ஏற்பட்ட ஈழ தேசிய விடுதலை முன்னணி போன்று தொடர்ந்து இயக்கங்கள் யாவும் ஐக்கியப் பட்டு கூட்டுத் தலைமையின் கீழ் போரா டியிருந்தால் இந்திய- இலங்கை ஒப் பந்தமே ஏற்பட்டிருக்காது. சகோதர இயக்க சிக்கல்கள், முரண்பாடுகள் ஏற்பட்டிருக்காது. மாறாக நிலைமை வேறாக அமைந்திருக்கும். இலங்கை- இந்திய ஒப்பந்தம், இந்திய இராணுவத்தின் வருகை, 13 ஆவது திருத்தச் சட்டம் என்பவற்றையும் கார ணங்காட்டி 1988, 1989 களில் ஜே.வி.பி. தென்னிலங்கையில் கிளர்ச்சியில் ஈடுபட்டது.

இவற்றை இலங்கை மீதான இந்தியாவின் விஸ்தரிப்பு வாதம் என்றே ஜே.வி.பி. (மக்கள் விடுதலை முன்னணி) பிரசாரம் செய்தது.

ஜே.வி.பியின் ஐந்து கோட்பாடுகளில் இந்திய விஸ்தரிப்பு வாதமும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது. இதனை ஏற்றுக்கொண்ட குறிப்பிட்ட சிங்கள இளைஞர்கள் ஜே.வி.பி. தலைவர் ரோஹண விஜய வீரவை ஒரு தீர்க்கதரிசி என்றே அழைத்தார்கள். அதன் ஒரு பக்க வெளிப்பாடே இன்றைய தேசிய சுதந்திர விடுதலை முன்

## ஒரு மீள்பார்வை

னணி (விமல் வீரவன்ச) மற்றும் ஜாதிக ஹெல உறுமய போன்ற இனவாத அமைப்புக்களாகும்.

இவ்வாறான துன்பியல்களுக்கு மத்தியிலேயே 1988 இல் 13 ஆவது திருத்தச்சட்டம் நிறைவேற்றப்பட்டு மாகாண சபைகள் உருவாக்கப்பட்டன. வடக்கு-கிழக்கில் தொடர்ந்து யுத்தம் நடைபெற்றமையும் 1991 இல் ராஜீவ்காந்தி படுகொலை செய்யப்பட்டமையும் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தியது. இந்தியா, இலங்கை தொடர்பாக தனது கொள்கையை மாற்றிக் கொண்டது. ஒற்றையாட்சியின் கீழ் 13 ஆவது திருத்தச் சட்டம் மாகாணங்களின் சுயாட்சிக்கான போதிய அதிகாரங்களைக் கொண்டிருக்கவில்லை என்பது பொதுவான மனக்குறையாகும். இதனால் பின்னர் வந்த அரசாங்கங்கள் மங்கள முனசிங்க அறிக்கை பிராந்தியங்களின் ஒன்றியம் எனும் சந்திரிகாவின் தீர்வுப் பொதி ஒஸ்லோ பிரகடனம் திஸ்ஸ விதாரண அறிக்கை என பல வெளியிடப்பட்டன. ஆனால் இவை ஒன்றும் அமுலுக்கு வரவில்லை.

இலங்கை இனப் பிரச்சினை வரலாற்றில் இலங்கை- இந்திய ஒப்பந்தத்தின் மூலம் 13 ஆவது திருத்தச் சட்டமே அமுலுக்கு வந்து எவ்வளவோ போராட்டங்கள் மத்தியில் உயிரோடு தப்பிப் பிழைத்திருக்கின்றது. இந்த ஒப்பந்தம் வடக்கு-கிழக்கு மாகாணங்கள் தமிழ் பேசுபவர்களின் பாரம்பரிய பிரதேசம் எனவும் வடக்கு- கிழக்கு இணைப்பையும் உறுதி செய்த படியால் ஏனைய தமிழ் அமைப்புக்கள் அதனை ஏற்றுக் கொண்டு ஜனநாயக அரசியலுக்குள் பிரவேசித்தார்கள்.

ஆனால் விடுதலைப் புலிகளோ இந்திய- இலங்கை ஒப்பந்தம், சந்திரிகாவின் தீர்வுத்திட்டம், ஒஸ்லோ பிரகடனம் தொடர்பான பேச்சுவார்த்தைகளை முறையாகப் பயன்படுத்தாமல் இராணுவ வழிவகை மூலம் தமிழ் ஈழத்தை அடைவதே தமது தாகமாக செயற்பட்டார்கள்.

இந்திய-இலங்கை ஒப்பந்தம் யாருக்காக ஏற்படுத்தப்பட்டதோ, அத்தரப்பு பிரதிநிதிகள் இடைக்கால நிர்வாகத்தை ஏற்று மக்கள் ஆதரவைப் பெற்றிருந்தால் வடக்கு- கிழக்கு இணைப்பை நிரந்தரமாக்கி, சுயாட்சிக்கான அதிகாரங்களையும் பெற்றிருக்கலாம். அதற்கான பலமும் கவர்ச்சியும் வாய்ப்பும் அவர்களிடம் இருந்தது. ஆனால் அது நடைபெறவில்லை. மாறாக 1987 நவம்பரில் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன எழுத்து மூலம் வாக்குறுதியளித்தவை நிறை வேற்றப்படவில்லை. 1988இல் ஜனாதிபதியான ரணசிங்க பிரேமதாஸ வடக்கு-கிழக்கு மாகாணசபையைக் கலைத்து இந்திய அமைதிப் படையை வெளியேறுமாறு உத்தரவிட்டார்.

13 ஆவது மாகாண சபைகள் சட்டமானது 1978 ஒற்றையாட்சி, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையில் காலணித்துவ கால மாகாணங்களை அலகாகக் கொண்டு ச[illegible]கள் உருவாக்கப்பட்டன. இங்கு வடக்கு- கிழக்கு தற்காலிக இணைப்பைத் தவிர பிராந்திய சுயாட்சிக்கான அதிகாரங்களைப் பெற முடியவில்லை. இதனால் 1994 இல் ஜனாதிபதியான திருமதி.சந்திரிகா பண்டாரநாயக்க 1995 தை மாதம் 8ஆம் திகதி பேச்சுவார்த்தையை ஆரம்பித்தார். பேச்சுவார்த்தை மேசையில் சிங்கக் கொடியும் புலிக் கொடியும் இருந்தன. ஆனால் பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தது. ஐந்து ஆண்டுகளின் பின்னர்




பிராந்தியங்களின் ஒன்றியம் என்னும் தீர்வுப்பொதியை முன்வைத்தார். அதுவும் பாராளுமன்றத்தில் ஐக்கிய தேசியக்கட்சியினரால் எரிக்கப்பட்டது. ஆனால் வடக்கு- கிழக்கு இணைப்பு 20 வருடங்களாக வர்த்தமானி மூலம் நீடிக்கப்பட்டே வந்தது. 2005 இல் ஜனாதிபதியாக மகிந்த ராஜபக்ஷ பதவி யேற்ற பின்னர் அவரது கூட்டமைப்பி லிருந்த மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) வடக்கு- கிழக்கு இணைப்பை பிரிக்கக் கோரி உயர் நீதிமன்றத்தில் வழக்கை தாக்கல் செய்தது. இவ் வழக்கின் பிரகாரம் 31.12.2006 இல் வடக்கு- கிழக்கு இணைப்பை இரத்துச் செய்யுமாறு தீர்ப்பு வழங்கப்பட்டது. இவ்வாறாக அரசாங்கங்கள் யாவும் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை சூனிய நிலைக்கே கொண்டு வந்தன. இது மீளாத வரலாறாக இருக்க புதிய அரசியல் யாப்பு எப்படி அமையப் போகின்றது என்பதே மக்களின் ஆதங்கம்.

பி.முத்துலிங்கம்
ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித எல்லைகளை மீறிய தங்க மகன் உசைன் போல்ட்!



தடகளப் போட்டியின் மிகப் பெரிய ஜாம்பவான்களில் ஒருவரான உசைன் போல்ட், லண்டன் உலக சம்பியன்ஷிப் தடகளப் போட்டியுடன் ஓய்வுபெற் றார்.

எதிர்வரும் 21ஆம் திகதியுடன் தனது 31ஆவது வயதை எட்டும் உசைன் போல்ட், இந்த அறிவிப்பை போன வருடம் வெளியிட்டார். "மின்னல் மனிதன்" உசைன் போல்ட் பற்றிய சிறிய அலசல்...

1986ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 21ஆம் திகதி, உசைன் போல்ட் பிறந்தார். சிறு வயது தலே கிரிக்கெட் மற்றும் கால் பந்து போட்டிகளில் ஆர்வம்காட்டிய உசைன் போல்ட், தனது 15 ஆவது வயதில் தடகளப் போட்டிகளில் பங்கேற்றார். கரிஃப்டா விளையாட்டுகளில் ஜமைக்கா சார்பில் முதல்முறையாகப் போட்டியிட்டு, 400 மீற்றர் ஓட்டத்தில் தனது அப்போதைய சிறந்த ஓட்டத்தை (48.28 நொடியில்) நிகழ்த்தி, வெள்ளிப்பதக்கம் வென்றார்.

அந்தப் போட்டியின் 200 மீற்றர் பந்தயத்திலும் 21.81 நொடியில் ஓடி, வெள்ளிப்பதக்கம் வென்றார். ஹங்கேரியில் அதே ஆண்டில் (2001) நடைபெற்ற "உலக இளையோர் தடகளப் போட்டி"யில் பங்கேற்று உலக அரங்கில் தன்னை அறிமுகப் படுத்திக்கொண்டார்.

அந்தப் போட்டியில் 200 மீற்றர் ஓட்டப்பந்தயத்தில் இறுதிச் சுற்றுக்குத் தகுதி பெறாவிட்டாலும், தனது அப்போதைய சிறந்த ஓட்ட நேரமாக 21.73 நொடியைப் பதிவுசெய்தார்.

தன் சொந்த ஊரான கிங்ஸ்டனில் நடைபெற்ற 2002ஆம் ஆண்டுக்கான உலக இளையோர் தடகளப் போட்டிகள் மூலம், தன் சொந்த மக்கள் முன்னிலையில் 200 மீற்றர் ஓட்டத்தை 20.61 நொடியில் கடந்து வெற்றிபெற்றார்.

இளையோர் போட்டியில் தங்கம் வென்ற இளம் வீரர்களுள், போல்ட்டின் வெற்றியே இதுவரை தங்கம் வென்றவருள் மிக இளம் வயதில் நிகழ்த்திய வெற்றி. அதே தடகளப் போட்டியில் ஜமைக்கா தொடர் ஓட்ட அணியில் பங்கேற்று 4×100 மீற்றர் மற்றும் 4×400 மீற்றர் பந்தயங்களில் முறையே 36.15 நொடி மற்றும் 3:04:06 நிமிடத்தில் ஓடி, வெள்ளிப்பதக்கங்களை வென்றார். மேலும், 2003ஆம் ஆண்டு நடைபெற்ற கரிஃப்டா தடகளப் போட்டி மற்றும் உலக இளையோர் தடகளப் போட்டிகளில் தங்கம் வென்று அசத்தினார்.

மே 31, 2008ஆம் ஆண்டில் நியூயோர்க் நகரின் ஐகேன் விளையாட்டரங்கில் நடைபெற்ற ரீபாக் கிராண்ட் ப்ரீலீக்கில், 9.72 நொடியில் 100 மீற்றர் ஓடி புதிய உலகசாதனை படைத்தார்.

உசைன் போல்டை உலகம் முழுவதும் நாயகனாக்கிய அந்தத் தருணம், 2008ஆம் ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக் போட்டி. ஒலிம்பிக்கில் 100 மீற்றர் பந்தயத்தின் இறுதிப்போட்டியில் 9.69 நொடியில் ஓடி, தனது சாதனையையும் முறியடித்து உலக சாதனை படைத்தார். இதை அடுத்து 200 மீற்றர் பந்தயத்தில் 19.30 நொடியில் ஓடி, புதிய உலக சாதனை படைத்தார். இரு தினங்கள்கழித்து நடைபெற்ற 4×100 தொடர் ஓட்டப்பந்தயத்தில் வெற்றி பெற்ற ஜமைக்கா அணியில் மூன்றாம் பகுதியை போல்ட் ஓடி, மூன்றாவது தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றினார். ஆனால், இந்தத் தொடரில் தன் சகவீரரான நெஸ்டா கார்ட்டர் ஊக்க மருந்து பயன்படுத்தியது தெரியவந்ததால் அந்தத் தங்கப்பதக்கம் பறிக்கப்பட்டது.

2009ஆம் ஆண்டு ஓகஸ்டில் நடைபெற்ற உலக சம்பியன்ஷிப் போட்டியில், 100 மீற்றர் ஓட்டத்தில் 9.58 நொடியில் ஓடி, உலக சாதனை படைத்தார். மேலும், 200 மீற்றர் ஓட்டப்பந்தயத்தில் பந்தயத்தூரத்தை 19.19 நொடியில் கடந்து மீண்டுமோர் உலக சாதனை படைத்தார். 2011ஆம் ஆண்டு நடைபெற்ற உலக தடகளப் போட்டிகளில் முன்னதாகவே ஓட்டத்தைத் தொடங்கியதால், பிழையான தொடக்கத்தின் அடிப்படையில் பந்தயத்திலிருந்து நீக்கப்பட்டார்.

2012ஆம் ஆண்டு லண்டனில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில், 100 மீற்றர், 200 மீற்றர் மற்றும் 4×100 தொடர் ஓட்டத்தில் தங்கம் வென்று அசத்தினார். 2013-ம் ஆண்டு நடைபெற்ற கோல்டன் காலா மற்றும் உலக சம்பியன்ஷிப்பில் 100 மீற்றர், 200 மீற்றர் மற்றும் 4×100 தொடர் ஓட்டத்தில் தங்கம் வென்ற உசைன் போல்ட், உலக தடகளப் போட்டிகளில் தனது ஆதிக்கத்தைக் காட்டினார்.

2015-ம் ஆண்டு பீஜிங் உலகப் போட்டிகளில், மீண்டும் 100 மீற்றர், 200 மீற்றர் மற்றும் 4×100 தொடர் ஓட்டத்தில் தங்கம் வென்று இந்த நூற்றாண்டின் சிறந்த தடகள வீரர் என்று அனைவரும் புகழும் வண்ணம் திகழ்ந்தார்.

2016ஆம் ஆண்டு நடைபெற்ற ரியோ ஒலிம்பிக் போட்டியிலும் 100 மீற்றர், 200 மீற்றர் மற்றும் 4×100 தொடர் ஓட்டத்தில் தங்கம் வென்று அசைக்க முடியாத சாதனைகளைப் படைத்தார். இதன்மூலம் மூன்று ஒலிம்பிக்கில் தொடர்ந்து தங்கம் வென்ற வீரர் என்ற பெருமையைப் பெற்றார்.

இதையடுத்து கடந்த மாதம் மொனோக்கோவில் நடைபெற்ற டைமண்ட் லீக் போட்டியில் தங்கம் வென்றார் உசைன் போல்ட்.

நடுத்தர குடும்பத்தில் பிறந்த உசைன் போல்ட், தனது விடா முயற்சியால் பல இன்னல்களைக் கடந்து பல சாதனைகளைப் புரிந்தார்.

முயன்றால் எவரும் எதையும் சாதிக்கலாம் என்பதற்கு, உசைன் போல்ட் ஓர் எடுத்துக் காட்டாகத் திகழ்கிறார்.

இவரின் சாதனைகளை கௌர விக்கும் விதத்தில் IAAF, வருடந்தோறும் வழங்கும் சிறந்த உலக விளையாட்டு வீரர் பட்டத்தை 2008, 2009, 2011, 2012, 2013ஆம் ஆண்டுகளில் பெற்றார். கூட்டத்தில் ஒருத்தனாக இருந்து ஆயிரத்தில் ஒருவனாக மாறி, தடகள உலகின் "தங்க மகன்" எனப் போற்றப்படும் உசைன் போல்ட், அனைவருக்கும் ஒரு முன்னோடியாகத் திகழ்கிறார்.

அவரது சாதனைகள் அனைத்தும் காலத்தால் அழிக்க முடியாத சுவடுகளே! (க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள் ...

படம்: தேன் நிலவு
இசை: ஏ.எம்.ராஜா
பாடல் வரிகள்: கவிஞர் கண்ணதாசன்
பாடியவர் : பி.சுசீலா



மலரே மலரே தெரியாதோ
மனதின் நிலைமை புரியாதோ
எனை நீ அறிவாய் உனை நான் அறிவேன்
காதலர் உன்னை காண வந்தால்
நிலையை சொல்வாயோ என் கதையை சொல்வாயோ
மலரே மலரே தெரியாதோ
மனதின் நிலைமை புரியாதோ
எனை நீ அறிவாய் உனை நான் அறிவேன்

காட்சிகள் மாறும் நாடகம் போலே
காலமும் மாறாதோ... காலமும் மாறாதோ
காலங்களாலே வாழ்க்கை செல்லும்
பாதையும் மாறாதோ. பாதையும் மாறாதோ
யார் மாறிய போதும் பாவை எந்தன்
இதயம் மாறாது... என் நிலையும் மாறாது
மலரே மலரே தெரியாதோ
மனதின் நிலைமை புரியாதோ
எனை நீ அறிவாய் உனை நான் அறிவேன்

கண்களில் தோன்றும் காட்சியில் ஒன்றாய்
கலந்தே நின்றாரே...கலந்தே நின்றாரே
நினைவுகள் தோன்றும் நெஞ்சில் என்றும்
நிறைந்தே நின்றாரே... நிறைந்தே நின்றாரே
இனி அவருடன் வாழ்வில் ஒன்று சேரும்
திருநாள் வாராதோ... என் மண நாள் வாராதோ
மலரே மலரே தெரியாதோ
மனதின் நிலைமை புரியாதோ
ஏனை நீ அறிவாய் உனை நான் அறிவேன்

# உங்கள் மாதப்பலன் எப்படி?

## பெப்ரவரி 20-மார்ச் 20ம் திகதிக்குள் பிறந்தவர்களுக்கான குண பலன்கள்

(கடந்த வார தொடர்ச்சி)

ஏற்றுக்கொள்ளும் செயல்களில் வெற்றியையே இவர்கள் சந்தித்தாலும் இவர்களாக எந்த வேலையும் தாமாகச் சென்று ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். மற்றவர்கள் வலியுறுத்திச் சொல்லும் வரையில் அந்தப் பணியை ஏற்றுக் கொள்ளக் காத்திருப்பார்கள்.

சட்டத்திற்கும் நீதிக்கும் மிகவும் கட்டுப்பட்டவர்கள் இவர்கள். பழைமைகளிலும் வழக்கங்களிலும் மிகவும் கருத்து செலுத்துபவர்கள் இவர்கள்.

இந்த மாதத்தில் பிறந்தவர்களில் இரு வகையினர் உண்டு. சிலர் ஆடம்பரங்களிலும் எளிய வழிகளில் வாழ்க்கையை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று எண்ணுவதிலேயே காலத்தைக் கடத்துவார்கள். இவர்களுக்கு நண்பர்கள் நிறைந்த அளவில் இருப்பதைப் போல் எண்ணிக் கொண்டிருப்பார்கள். ஆனால் வாய்ப்பவர்கள் அனைவரும் போலி நண்பர்களாகவே இருப்பார்கள். இதனால் தவறான திட்டங்களில் சிக்கித் தவிப்பார்கள். இதனால் ஏற்படும் துன்பங்களை மறைக்க மது அருந்தவும் தொடங்குவார்கள்.

ஆனால் இரண்டாவது வகையைச் சேர்ந்தவர்கள் வாழ்க்கை எதற்காக என்று சற்று உணர்ந்து புரிந்து கொண்டாலும் எப்படிப்பட்ட நிலைமைகளையும் சமாளித்து மற்றவர்கள் வியக்கும்படி முன்னேறி விடுவார்கள். இவர்கள் எதிர்பாராத விதத்தில் தமது செயல்களில் மாறி நண்பர்களை விழிப்படையச் செய்வார்கள். அப்போது இவர்கள் போலி நண்பர்களைக் கண்டோ ஆடம்பரங்களைக் கண்டோ இவர்கள் மனத்தைப் பறிகொடுப்பதில்லை. எளிதில் மற்றவர்களிடம் ஏமாறவும் மாட்டார்கள்.

மார்ச் மாதம் பிறந்த ஒவ்வொரு மனிதர்களுக்கும் இந்த இரண்டு வகைக் குணங்களும் பிறப்பிலேயே வந்து விடுகின்றன. ஆனால் வளர்ந்த பின் இந்த இரண்டு பாதைகளில் எந்தப் பாதையில் அவன் செல்கிறான் என்பது அவனுடைய சூழ்நிலையைப் பொறுத்தது. முதல்பாதையான அழிவை நோக்கிச் செலுத்தும் ஆபத்தான பாதையில் செல்பவர்களே அதிகம்.

உணர்ச்சிவசப்பட்டு அறிவை இழந்தால் தொடர்பு கொண்டுள்ள மற்ற மனிதர்கள் இவர்களிடம் என்ன சொல்கிறார்களோ அதன்படி கேட்பார்கள்.

கடற் பயணம் அல்லது ஆற்றுப் பயணம் என்றால் இவர்களுக்கு மிகவும் பிடிக்கும். ஆனால் கடலிலோ ஆற்றிலோ ஏரிக்கரையின் பக்கத்திலோ வீட்டைக் கட்டிக் கொண்டு எப்போதும் கண்களில் தெரியும்படி வாழவே விரும்புவார்கள்.

தொழில் திறமை

அயல்நாடுகளுடன் வர்த்தகத் தொழில் செய்வதில் இவர்கள் திறமையுள்ளவர்களாக இருப்பார்கள்.

கப்பலில் கப்டனாகவோ உலகப் பயணம்செய்யவோ இவர்களுக்கு வாய்ப்பு ஏற்படும்.

எதையும் இவர்கள் திறமையுடன் செய்து முடித்தாலும் இயற்கையாக இவர்களுக்குச் சில நன்மைகள் பயக்கும். வியக்கும்படி இவர்களுக்கு ஏதாவது வாய்ப்புக்கள் வந்து கொண்டேயிருக்கும்.

இயற்கை வினோதங்களிலும் தத்துவங்களிலும் இவர்களுக்கு மிகுந்த பற்று தலும் ஆராய்ச்சியறிவும் உண்டு.

எளிதில் சிறிய விடயங்களுக்கும் பெருமதிப்பு அளிப்பதைவிட்டு உள்ளத்தில் உறுதி பெற்றால் இவர்கள் எண்ணியதைப் பெற முடியும். எந்தப் பதவியையும் அடைய முடியும். பெயரையும் புகழையும் பெற முடியும். இவர்களுக்கு எதையும் முன்கூட்டியே சொல்லும் திறமை உண்டு.

உடல்நிலை

உடல் நிலையைப் பொறுத்தவரையில் நரம்பு நோய்கள், தூக்கமின்மை, இரத்தக் கோளாறு, அனீமியா போன்ற நோய்களால் துன்பம் வரும். குடல் நோய்களும் பாதங்களிலும் தலையிலும் வலி, வாயு, மஞ்சள் காமாலை போன்ற நோய்களும் வரும். வெளிச்சமான இடங்களில் வரண்ட சீதோஷ்ணமுள்ள இடங்களில் இவர்கள் வாழ்வது மிக நல்லது. இவர்களுக்குப் பிடி த்த வண்ணங்கள் செந்நீலம், கருநீலம் என்பன. (தொடரும்)

# மாற்றம் வேண்டும் பெண்களே

பெண் சக்தி வடிவம். பொறுமை, தியாகம், அன்பு, பாசம், விட்டுக்கொடுப்பு என்பவற்றை இறை கொடையாகக் கொண்டவள். அவளது தன்னலமில்லா சேவையை, பெறுமதிமிக்க அன்பை அனுபவத்தில் கண்டவர்களே உலக மாதா, கடலன்னை, பூமித் தாய், வனமாதா, இயற்கையன்னை என பெண்ணை இயற்கையோடு ஒப்பிட்டு அழைத்தார்கள். ஒரு பெண் தாயாக, மனைவியாக, மகளாக, பேர்த்தியாக, மருமகளாக, சமூக சேவகியாக பல நிலைகளில் தன் சேவையை அன்பு, பாசம், காதல், தியாகம் என்கிற பிணைப்புகளோடு வழங்கி பெண்ணினத்துக்கு பெருமை சேர்க்கிறாள். இவ்வாறு உலகின் பெறுமதிமிக்க வளமாக உள்ள பெண் சில சமயங்களில் தடம்புரண்டு தடுமாறி தன் நிலையுணராது வாழ்வது கொடிதானதாக உள்ளது.

நாளாந்த வாழ்க்கையில் பெண்மைக்கு இழுக்கான பலவற்றை செய்து பெண்கள் தவறான பாதையில் பயணிக்கின்றனர். அதிவேக அறிவியல் வளர்ச்சி அவர்களது வாழ்வில் ஊடுருவியுள்ளது. சின்னத்திரை தொடர்களும் மேலைத்தேய நாகரிக இறக்குமதியும் பெண்களை தம்பக்கம் இழுத்துள்ளன. இவற்றின் மாயைக்குள் பிரவேசித்துள்ள பெண்கள், அவற்றில் இதமாக குளிர் காய்ந்து, இயற்கை கொடுத்த தாயத்துகளை கொண்டு போடுகின்றனர். அக்கரைச்சீமை அழகினில் அங்கலாய்த்து நிற்கின்றனர். நேரத்தை செலவு செய்து சின்னத்திரை தொடர்களில் மூழ்கி, அவற்றில் நிகழும் கவர்ச்சியான காட்சிகளால் ஈர்க்கப்பட்டவர்களாக, பழக்கவழக்கங்களை மாற்றிக் கொள்கின்றனர். பழக்க வழங்கங்களுக்கு உடுத்தும் உடைகளும் சரி உண்ணும் உணவுகளும் சரி, பேசுகின்ற வார்த்தைகளும் சரி வேறொன்றிலிருந்து நமது பெண்களுக்கு தொற்றியுள்ளதைக் காணலாம்.

நாம் தலைசிறந்த நாகரிகத்தின் வழித்தோன்றல்கள். எம் பண்பாடும் பாரம்பரியமும் பெண்களை பக்குவமாக அழகாக மேன்மைப்படுத்தி வாழ வைப்பவை. அப்படியிருக்க வேறொன்றுக்குள் பிரவேசிப்பதன் காரணமென்ன? பெற்ற தாயை மறந்துஅந்நியமானதைஅன்னையென வணங்கலாமா? வேற்று நாகரிகத்தை முகர்ந்து எமது நாகரிகத்தை கொன்று போடலாமா? வரலாறுகளின் பக்கங்களை புரட்டிப் பார்த்தால் அன்றையபெண்களின் ஒழுக்கத்தின் சிறப்பினைக் காணலாம். ஒழுக்கம் என்பது எம் பண்பாட்டின் இறுக்கமான அடிக்கட்டுமானமாக இருந்துள்ளபோதும் அதனை மறந்தவர்களாக கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என சமுதாயத்தின் குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகியுள்ளனர்.

நாகரிகமும் பண்பாடும் பெண்ணோடு ஒன்றிணைந்தவை. ஓரினத்தின் பண்



பாடும் கலாசாரமும் பெண்களால் மெருகேற்றப்படுபவை. எம்மினப் பெண்களும் எம் கலாசாரப் பண்பாட்டினை பாதுகாக்க வேண்டிய பெருங்கடமையில் உள்ளார்கள். ஒழுக்கத்தோடான பழக்கவழக்கங்களையோ அரைகுறை ஆடைகளையோ வேண்டாத இணையத்தள பாவனையோ சின்னத்திரை தொடர்களில் நேர வீணடிப்போ எம் பெண்களுக்கு தேவையில்லை. பெண்கள்செய்வதற்கு நிறைய நல்ல காரியங்கள் உள்ளன. அறிவில் மேம்பட பல சந்தர்ப்பங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றை விடுத்து வீண் செலவு செய்து ஆடம்பரமாக வாழ முற்படுவது பெண்மைக்கு அச்சுறுத்தலாக உள்ளது என்பதை ஒவ்வொரு பெண்ணும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

எப்படியும் வாழலாம் என வாழ்ந்தால் அது விலங்கினம். இப்படித்தான் வாழ வேண்டும் என வரையறுத்தே மனித இனம் கட்டுப்பாடுகளும் விதிமுறைகளும் வரையறைகளும் பெண்கள் வாழ்வில் பாதுகாப்பான தூண்கள். அவற்றின் பக்கபலத்தோடு நேர் கொண்ட சிந்தனையோடு வாழ வேண்டும். நேரம் பொன்னானது. நேரம் வீணாகக் கழியும்போதுபெண்களதுவாழ்வை காவுகொண்டு விடும். வாழ்க்கை பயனுள்ளதாக அமைய வேண்டுமெனில் ஒவ்வொரு விநாடியும் பயனுள்ளதாக்க வேண்டும். அறம் சார்ந்த, மரபு சார்ந்த வாழ்க்கை பெண்களுக்கு சிறப்பைத் தரும். ஒழுக்கமாக பெண் வாழத் தவறின் தனிமனிதன் மட்டுமல்ல, குடும்பமும் சமூகமும் கூட நிலையிழந்து விடும்.

ஒவ்வொரு பெண்ணும் இயற்கையாகவே அழகுடையள். தற்போது செயற்கை அழகு வேண்டி நேரத்தை வீணடித்து, பெருந்தொகைப் பணத்தையும் செலவு செய்து அழகு சிகிச்சை நிலையங்களைத் தேடி ஓடுகின்றனர். அழகுச் சந்தையில் நாளுக்கு நாள் குவியும் கிரீம் என்னும் குப்பைகளை வாங்கி முகத்தை அலங்கோலப்படுத்துகின்றனர். வீடுகளில் பெண் பிள்ளைகளைக்காண முடிவதில்லை. சில பெண் பிள்ளைகள் என்ன செய்கிறார்கள், எங்கு செல்கிறார்கள் என்பதே தெரிவதில்லை. படிக்காத பெற்றோராக இருந்தால் பெண் பிள்ளைகளின் செயற்பாடுகள் சொல்லத் தேவையில்லை.

தலைமுடியை மிகவும் அசிங்கமாக அலங்காரம் செய்கின்றனர். அன்று கைம் பெண் (விதவைக்கோலம்) நேர்ந்த பெண்களைப் போல் முடியை விரித்து விட்டு பணிக்கிறார்கள். இது எம் பண்பாடு ஒருபோதும் ஏற்கப் போவதில்லை. ஆடைகளும் மேற்குலகத்தினரின் ஆடைகளையே அரைகுறையாகவும் உடலை ஒட்டினாற்போலும் அணிகிறார்கள்.இதனால்ஆண்களின் பார்வையை தம்பக்கம் ஈர்த்து தமக்குத் தாமே அழிவைத் தேடுகிறார்கள். இது ஒரு ஆபாசத்தைத் தூண்டும் செயலாக உள்ளதை இவர்கள் ஏனோ உணர்வதில்லை.

பெண்களின் இணையத்தளப் பாவனையானது அதிகரித்துள்ளது. இணையத்தள வன்முறையும் அதிகரித்துள்ளது. அறிவுத் தேடல்களுக்கு மட்டுமே இணையத்தளப் பாவனை வேண்டும். ஆனால் முகம் தெரியாத பல ஆண் நட்புகளை இணையத்தளம் மூலம் தேடுவதால் வீணான பாலியல் தொல்லைகளுக்கு ஆளாகி, விபரீத முடிவுகள் கூட கிடைக்கின்றன. இவ்வாறு எழுதிக் கொண்டே போகலாம்.

ஆக, பெண்களே ஒழுக்கம் உயிரை விட மேலானது. உயிர் வாழாக் கவரிமானாக வாழ வேண்டிய நீங்கள் ஒழுக்கத்தை தொலைத்து வாழ்ந்து பண் பாட்டை கூறு போடாதீர்கள். உங்களை உணர்ந்து இனியாவது மாற்றம் கொள்ளுங்கள். மாற்றம் ஒன்றே மாறாதது.

உடுவிலூர் கலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினிமா செய்தி



# வேலையில்லா பட்டதாரி 2

*திரைவிமர்சனம்*

தனுஷ் தன் திரைப்பயணத்தில் மிக மோசமான நிலையில் இருந்த போது அவரை தூக்கி விட்ட படம் விஜபி.

ஒட்டுமொத்த இன்ஜினியரிங் மாணவர்களின் ஆதரவுடன் செம்ம ஹிட் அடிக்க, தற்போது விஜபி-2வில் மீண்டும் இறங்கி அடிக்க தனுஷ் களம் இறங்கியுள்ளார், தனுஷ் இறங்கி அடித்தாரா? பார்ப்போம்.

விஜபி தனுஷ் திரைப்பயணத்தில் பிரமாண்ட வெற்றி. சிம்பிள் கதை, பண பலம் உள்ளவன் நினைத்தால் எதையும் செய்யலாம். ஆனால், இளைஞர் சக்தி அதை விட பெரியது என்று காட்டியிருப்பார்கள்.

அதே டெம்ப்ளைட் தான், என்ன இதில் கொஞ்சம் அதிக பட்ஜெட் அவ்வளவுதான், கஜோல் என்ற எல்லோருக்கும் தெரிந்த முகம்.

தென்னிந்தியாவிலேயே மிகப்பெரும் Construction வைத்திருப்பவர் கஜோல். அவர் construction எடுக்கும் புராஜக்டில் தனுஷும் உள்ளே வர, பிறகு இவர்களுக்குள் நடக்கும் கிளாஷ் தான் மீதிக்கதை.

தனுஷ் என்ற ஒரு தனி ஆள் தான் மொத்த படத்தையும் தோளில் சுமக்கின்றார். தண்ணி அடித்துவிட்டு மனைவியிடம் திட்டு வாங்குவது, அதற்கு அப்பா ஆறுதல் சொல்வது என நடுத்தர இளைஞரை கண்முன் கொண்டு வந்துள்ளார், ஆனால், விஜபி-1 விட கொஞ்சம் ஓவர் அக்டிங் சேர்.

கஜோல் எத்தனை வருடம் கழித்து நடிக்க வந்தாலும், அந்த கிரேஸ் குறையவே இல்லை. ஆனால், அவருக்கு ஒரு அழுத்தமான கதாபாத்திரம் இல்லை என்பதே நிஜம் (கஜோலை விட எடுபிடியாக வரும் ரைஸாவிற்கு விசில் சத்தம் அதிகம் பறந்தது வேறுகதை). மேலும் , முந்தைய பாகத்தில் வந்த சுரபிக்கு பதிலாக (சீரியலில் இவருக்கு பதிலாக இவர் என்று வருவது போல்) ரிது வர்மா வருகின்றார்.



விஜபி-1 மிகப்பெரிய வெற்றிக்கு காரணம் படத்தில் உள்ள யதார்த்தம்தான், அந்த யதார்த்தம் இதில் கொஞ்சம் மிஸ் ஆனதோ என யோசிக்க தோன்றுகின்றது. சௌந்தர்யா ரஜினிகாந்த் ஒரு இயக்குநராக இப்படத்தில் வெற்றி பெற்றுவிட்டார், இருந்தாலும், இன்னும் கொஞ்சம் அழுத்தமான கதைக்களத்தை தேர்ந்தெடுத்து இருக்கலாம்.

இதற்கு முக்கிய காரணம் கஜோல் போல் ஒரு நடிகையின் பெயரையும் டமேஜ் செய்யக் கூடாது. அதே நேரத்தில் தனுஷையும் மாஸாக காட்ட வேண்டும் என்பதில் கொஞ்சம் சறுக்கி விட்டார்.

ஷான் ரோல்டன் என்ன தான் பாடல்கள், இசை என அடித்து நொறுக்கினாலும், இரண்டு செகண்ட் வரும் அனிருத்தின் பிஜிஎம் தியேட்டரே அதிர்கின்றது. அனிருத்தை கண்டிப்பாக விஜபி-2 மிஸ் செய்கின்றது.

தனுஷின் யதார்த்த நடிப்பு, படத்தின் முதல் பாதி, சரண்யாவை பயன்படுத்திய விதம், முதல் பாதியில் இருக்கும் சில விடயங்களை இரண்டாம் பாதியில் சரியாக அமைத்த தருணம் என அனைத்தும் ரசிக்க வைக்கின்றது.

விவேக் அவர்களின் காமெடி நன்றாக வேர்க் அவுட் ஆகியிருக்கிறது. வலுவில்லாத கதைக் களம், கஜோல் எதிர்பார்த்த அளவிற்கு மிரட்டவில்லை, கிளைமேக்ஸில் தனுஷ்-கஜோல் வரும் இடம் காமெடியாக இருந்தாலும், கொஞ்சம் அழுத்தமாக இருந்திருக்கலாம். மொத்தத்தில் விஜபி என்ற ப்ராண்டே விஜபி-2 வையும் காப்பாற்றுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மத்திக்கு ஆதரவு மாகாணத்திற்கு எதிர்ப்பு

நல்லாட்சி என்று நம்பிக்கையூட்டி மக்களின் அமோக ஆதரவுடன் 2015 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்திய மைத்திரி - ரணில் தலைமையிலான சு.க. - ஐ.தே.க. கட்சிகள், நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்கொண்டு நாளுக்கு நாள் நலிவடைந்து வருகின்றன.

2020 ஆம் ஆண்டு வரை இந்த ஆட்சி நிலைக்கும் என்று ஆட்சியாளர்கள் திடமாகக் நம்பியுள்ளனர். ஆனால், தொடர்வதை விரும்பாத ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் நிதியமைச்சராக அவரை நியமித்துவிட்டு ரவி கருணா நாயக்கவைக் கொண்டு வந்தனர்.

தற்போது ரவி கருணா நாயக்க வெளிவிவகார அமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்துள்ளார். இதற்கு கூட்டு எதிர்க்கட்சியின் நம்பிக்கையில்லாத் தீர்மானம் முக்கிய காரணம் எனலாம்.

இலங்கை மத்திய வங்கியில் இடம்பெற்ற பிணை முறிகளுக்கு கிடைத்த வெற்றி என்று ரவியின் இராஜினாமாவை கொண்டாடும் நிலையில் எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் புகழுரையாற்றி யது கூட்டு எதிரணியின் குற்றச்சாட்டுக்கு நியாயத்தை கற்பித்துவிட்டது.

எதிர்க்கட்சி என்பதற்காக எல்லாவற்றையும் எதிர்க்க வேண்டும் என்று அர்த்தமல்ல. அதேவேளை ஐ.தே.கவின் ஆதரவுடன் எதிர்க்கட்சித் தலைவர் பதவியைப் பெற்றதற்காக ஆட்சியாளர்கள்ளனர்.

ஆட்சியில் அங்கம் வகிக்கும் பிரதான கட்சியான ஐ.தே.கவின் தலைவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது கட்சி சார்ந்தவரை குற்றமற்றவர் என்று கூறுவதில் ஒரு நியாயப்பாடு உள்ளது. ஆனால், ஆட்சிக்கு ஆதரவளித்ததற்காக எதிர்க்கட்சித் தலைவரும் இணைந்து பாராட்டுவது என்பது ஏற்புடையதன்று.

இதை தமிழ் மக்களும் விரும்பமாட்டார்கள், சிங்கள தடுத்து நிறுத்த முற்பட்டு அவரின் பதவியைப் பறிக்க நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்த தரப்பின் தலைவரான இரா. சம்பந்தன், ரவி கருணா நாயக்கவைக் காப்பாற்றவும் அவரின் இராஜினாமாவை பாராட்டியதும் கூட்டு எதிரணியாலேயே பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

இரண்டு தினங்களுக்கு முன்பு முன்னாள் ஜனாதிபதி மகிந்தவுடன் இணைந்து பயணிக்க விரும்புதாகக்

## ரவிக்குப் புகழாரம்; விக்னேஸ்வரனுக்குக் கடிவாளம்





கூட்டரசின் பிரதான கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியை அழிவுப் பாதைக்குக் கொண்டு செல்லும் நடவடிக்கைகளும் நடந்தவண்ணமேயுள்ளன.

நல்லாட்சி அரசு என்று சொல்லப்படும் இந்த அரசு உருவாகி இரண்டு ஆண்டுகள் நிறைவடைவதற்குள் பல நம்பிக்கையில்லாத் தீர்மானங்களை எதிர் கொள்ள வேண்டியாயிற்று.

அவன்கார்ட் ஆயுதக் கப்பல் விவகாரத்தில் திலக் மாரப்பன அமைச்சுப் பதவியைத் துறக்க நேரிட்டது.

(பின்னர் அமைச்சரவை மாற்றத்தின் போது அவர் மீண்டும் உள்வாங்கப்பட்டு தற்போது காலியாகியுள்ள வெளிவிவகார அமைச்சுக்கு அவர் பெயர் அடிபடுகிறது.)

இந்நிலையில், நிதிய மைச்சராக இருந்த ரவி கருணாநாயக்கவை வெளி விவகார அமைச்சராக நியமித்து மாற்றத்தை ஏற்படுத்த முயற்சித்த மைத்திரிக்கு ஏமாற்றமே மிஞ்சியுள்ளது.

மங்கள சமரவீர வெளிவிவகார அமைச்சராகத் விற்பனை மோசடி விவகாரத்தால் அவர் பதவியைத் துறக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

ரவி கருணாநாயக்க பதவியை இராஜினாமாச் செய்ததை எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் வெகுவாகப் பாராட்டினார்.

எதிர்க்கட்சித் தலைவராக இருந்து கொண்டு ஆளும் கட்சியின் பிரதான அமைச்சர் ஒருவர் இராஜினாமாச் செய்வதைப் புகழ்ந்துரைக்க சம்பந்தனால் மட்டுமே முடியும்.

கூட்டாட்சியில் அங்கம் வகித்து பல அமைச்சுப் பதவிகளைப் பெற்றுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பேச்சாளர்களில் ஒருவரான அமைச்சர் மகிந்த அமரவீர மக்களின் அத்தனை ஊழல்களையும் மறைத்து ஆதரவளிக்க வேண்டுமென்றில்லை.

எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவாகவுள்ள மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) தலைவர் அநுர குமார திஸாநாயக்க மற்றும் அக்கட்சியினர் பாராளுமன்றத்திலும் பொது இடங்களிலும் அரசிற்கு எதிராகத் தொடர்ந்து குற்றம் சாட்டி வருகின்றனர்.

ரவி கருணாநாயக்க பதவி விலகியது மட்டும் போதாது. மாறாக அவர் மீது உரிய விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் பதவி விலக வேண்டும் என்றும் வலியுறுத்திய மக்களும் விரும்பமாட்டார்கள்.

மத்தியிலே மைத்திரி ஆட்சி அமைக்க; மகிந்த அரசைக் கவிழ்க்க; தமிழ் மக்கள் வாக்களித்தனர். ஆனால், எதிர்க்கட்சித் தலைவர் பதவியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் பெற வேண்டும் என்பதற்காக வாக்களிக்கவில்லை.

மக்கள் மாற்றத்திற்காகவே வாக்களித்தனர். ஊழல் வாதிகளைக் காப்பாற்றி கௌரவப்படுத்துவதற்கல்ல.

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக் னேஸ்வரன், மாகாண அமைச்சர்களை நீக்க முடிவெடுத்த போது இயற்கை நீதிக்குப் புறம்பானது என்று கூறிய சம்பந்தனை எதிர்த்து அவர்கள் காட்டமாகவும் கேவலமாகவும் கருத்துரைத்தனர்.

வடக்கு மாகாண முதலமைச்சருக்கு எதிராக தமிழரசுக்கட்சியினர் கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு எதிராக எதுவும் பேசாதிருந்த சம்பந்தன், மக்களின் மாபெரும் எழுச்சிப் போராட்டம்; ஹர்த்தால்- கடையடைப்பு; கண்டனங்கள் என்பனவற்றை எதிர்கொண்ட பின்பு சமரச முயற்சியில் இறங்கினார்.

ஆனால், எந்தவித நிபந்தனையும் இன்றி மத்தியிலே (ஐ.தே.க.-சு.க) மாற்றுக் கட்சியினருக்கு ஆதரவளித்ததற்காக பதற்றத்துடன் பாராட்டுப் பத்திரம் வாசிக்கிறார்.

மாகாணத்திலே சொந்தக் கட்சியினருக்கும் முதலமைச்சருக்கும் எதிர்ப்பு; மத்தியிலே ஊழல் மோசடியில் சிக்கிய அமைச்சருக்கு ஆதரவு. இதுவே தமிழ்த் தலைமையின் நிலைப்பாடு என்றால், தமிழரின் நிலை?

**எஸ்.ஆர்.கரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# facebook நண்பன்



ஹாய் சிவா ... என்னடா அவ்வளவு அவசரமா பீச்சுக்கு வா என்று அழைத்தாய் ....நான் கூட மறுபடியும் ஒரு "ஜல்லிக்கட்டு" போல ஏதோ பிரச்சினை மீண்டும் ஆரம்பிக்கிறது என்று நினைத்தே ஓடி வந்தேன் ...ஆனால் இங்கே நீ மட்டும் தனியாக இருக்கிறாய் ...

ஏதோ சிந்தனையில் மூழ்கி குழப்பத்தில் ஆழ்ந்தவனாக தெரிகிறாய்... ஏதாவது பிரச்சினையா ... என்று ரமேஷ் மூச்சு விடாமல் பேசினான். அனைத்தையும் கேட்ட`சிவா அருகில் வ[illegible]. உட்கார் என்று சைகையில ஆணையிட்டான் .

சிவாவும் ரமேசும் மிகவும் நெருங்கிய நண்பர்கள். பள்ளி முதல் கல்லூரி வரை ஒன்றாக படித்தவர்கள். ஒரு மாதத்திற்கு முன்னர்தான் சிவா அரசியல் செல்வாக்குள்ள ஒருவரால் அரசு வேலை ஒன்றில் வேலைக்கு சேர்ந்தான். இன்னும் ஒரு வருடத்தில் நிச்சயம் பணி நிரந்தரம் ஆகும் என்று உறுதி அளித்தனர். கை நீட்டி அன்பளிப்பாக ஓர் தொகையை பெற்றுக் கொண்டவர்கள் . (அதுவன்றி கிடைக்காது இல்லையா ).

ரமேசுக்கு முதலில் இருந்தே ஏதாவது ஒரு தொழில் தொடங்க வேண்டும் என்ற எண்ணம் தான். அவனும் ஒரே மகன்தான் அவர்கள் குடும்பத்திற்கு. அதனால் ஆறு மாதங்களுக்கு முன்னர் கண்னி உதிரிப்பாகங்கள் விற்கும் கடை ஒன்றை ஆரம்பித்து விட்டான். வியாபாரம் பரவாயில்லை என்றும் திருப்தியாக உள்ளது என்று அடிக்கடி சிவாவிடம் பெருமையுடன் கூறுவான். மிக நெருக்கமாக காதலி போல சென்று அமர்ந்தான் ரமேஷ், சிவாக்கு அருகில். அப்போதுதான் கவனித்தான் ரமேஷ்... சிவாவின் கண்கள் கலங்கி இருந்தது. பதறிப் போய் என்னடா... என்று அவன் தோளை உலுக்கிக் கேட்டான் .

உனக்குத்தான் தெரியுமடா ரமேஷ்... என் வீட்டின் நிலை ... அப்பா இறந்து மூன்று வருடங்கள் ஓடிவிட்டன . அம்மாவிற்கும் லதாவிற்கும் (தங்கை) நான் தான் எல்லாம்.

சொந்த வீடோ . வேறு சொத்தோ இல்லை. அப்பாவிற்குப் பின் வரும் அவரது சிறு பென்ஷன் தொகை மட்டுமே எங்களுக்கு வருமானம். நானும் வேலைக்கு சேருவதற்காக ஒருவரிடம் கடன் வாங்கித்தான் அந்த அன்பளிப்பு (லஞ்சம்) தொகையும்கொடுத்தேன்.

உடனே ரமேஷ் , ஏண்டா நான் ஏதோ நேற்று முதல் தான் அறிமுகமாகி நண்பர்கள் ஆனதை போல கதை சொல்லிக் கொண்டு இருக்கிறாய்... முதலில் விடயத்தை சொல்லுடா என்று உரிமையுடன் கடிந்து கொண்டான் .

இல்லைடா, ஒரு வாரமாக உன்னிடம் பேச வேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். மனதில் உள்ள சுமை தாங்காமல்தான் இன்று அவசரமாக வரச்சொன்னேன். சென்ற வாரம் நடந்த ஒரு நிகழ்ச்சிதான் இதற்கு காரணம். எனக்கும் உன்னை விட்டால்வேறு எவருமில்லை. நீதான் இதற்கு ஒருவழி கூற வேண்டும் என்றான் .

சிவாவின் முகத்தில் தெரிந்த சோகத்தின் பதிவுகள் ரமேஷை கவலைப்படச் செய்ததால் அவனையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான் .

சிவா தொடர்ந்தான் ... சென்ற வாரம் நான் எங்கள் அலுவலகத்தின் பணத்தை இரண்டு லட்சம் ரூபாயை வங்கியில் கட்டுவதற்காக. எனது மோட்டார் சைக்கிளில் செல்லும்போது காணாமல் போய்விட்டது . எப்படி எங்கு திருடு போனது என்றே தெரியவில்லை. உடனடியாக அருகில் உள்ள பொலிஸ் ஸ்டேஷனில் தகவலை கூறி பதிவு செய்தும் விட்டேன். அவர்களும் முயற்சி செய்து எப்படியாவது மீட்டுக் கொடுக்கிறோம் என்று உறுதியளித்துள்ளார்கள்.

ஆனால் ஒரு வாரம் ஆகி விட்டது. நாளையுடன் அலுவலகத்தில் கெடு முடிகிறது என் வாழ்க்கையே முடியப்போகிறது என்று கூறி ரமேஷின் கையைப் பிடித்து அழத் தொடங்கினான் . அதிர்ந்த ரமேசும் அவனுக்கு ஆறுதல் கூறினான். கிடைத்துவிடும் கவலைப்படாதே சிவா என்றான்.

இதை ஏண்டா என்னிடம் கூறவேயில்லை என்றபோது , சிவா உடனே இதை உண்மையில் மறைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அல்ல. நான் அறியாமலே எதிர்பாராமல் நடந்த நிகழ்வு. என்னுடைய அஜாக்கிரதை எனும் குற்ற உணர்வே மனதளவில் அதிகமாக தாக்கியது. மேலும் என் எதிர்கால வாழ்வும் கேள்விக்குறியாக மாறிவிட்டதால் இடிந்துவிட்டேன் ர்மேஷ் . இன்னும் என் வீட்டிலேயே இதை கூறவில்லை... உனக்கு மட்டுமே தெரியும் என்றான்.

(அடுத்தவாரம் தொடரும்)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1161

### சசிகாந்



பீத்திறமோ. பீலாவிற்றமோ முக்கியமில்ல. உலகம் நம்மள உத்துப் பாக்கணும்-அதுதான் முக்கியம்.


### விஜயந்தன்

பெரியவங்களுக்கு சின்னவங்க மரியாதை கொடுக்கணும், எதிர்த்துப் பேசக்கூடாது..!



அம்மா உங்களைவிட பெரியவங்களாப்பா...?!

### சஞ்சீவன்



ஒரு நிமிடம் கூட மொபைல் போனை சுவிட்ச் ஆஃப் செய்யாமல் இருப்பவன் காதலில் விழுந்தவன் ...

நிமிடத்திற்கு ஒரு முறை மொபைல் போனை சுவிட்ச் ஆஃப் செய்பவன் கடனில் விழுந்தவன்....

### நிருபாகரன்

காகம் தலையில எச்சமிட்டதுக்கு
எரிச்சல் அடையாதிர்கள்.!!
எருமைக்கு பறக்கும் சக்தி
கொடுக்காத
கடவுளுக்கு நன்றி சொல்லுங்கள்.!!
இப்படிதா வாழ கத்துகோணும்....

### சதீஸ்



சின்ன வயதில் எப்போ வரும் என்று ஏங்க வைத்து,பின்னர் பெரியவன் ஆனதும் அதுவே பெரும் இம்சையாக தெரிவது தாடி,மீசை தான்

### சுசிந்திரன்

இனிவரும் காலங்களில்
ஒருத்தன் 'நல்லவன்' னு
பேர் எடுக்கனும்னா
அதுக்கு ஒரே வழி
தான் இருக்கு..
அவனுக்கு
பேரே 'நல்லவன்' னு
வச்சா தான் உண்டு..

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 97

## தீக்காயங்கள் ஏற்பட்டால்...

தீக்காயங்கள் திடீரென ஏற்பட்டால் உடனடியாக நெருப்பை அணைக்க வேண்டும் அல்லது தீக்காரணிகளை அந்த நபரிலிருந்து விலக்கிவிட வேண்டும். (உதாரணமாக சூடான திரவம், ஆவி, இரசாயனப் பொருட்கள் போன்றன)

தீச்சுவாலை இருப்பின் அந்த நபரை நிறுத்தி (ஓடுவதையோ அல்லது நடப்பதையோ தவிர்க்க வேண்டும்) நிலத்தில் உருட்டி தீயை அணையுங்கள். மேலும் தடிப்பான போர்வையால் சுற்றி அணையுங்கள். மண்ணால் அணைத்தலை தவிர்க்க வேண்டும். நீர் இருப்பின் நீரினாலும் அணைக்கலாம்.



உருகக்கூடிய பொருட்கள் உடலில் காணப்படின் அவற்றை விலக்குங்கள். இறுக்கமான ஆடைகளை உடனடியாக விலக்குங்கள். ஆடையின் பகுதி எரிகாயங்களுடன் ஒட்டியிருப்பின் அப்பகுதியை சுற்றி வெட்டியெடுக்கவும் தோலுடன் ஒட்டியிருக்கும் ஆடையின் பகுதியை நீக்க வேண்டாம். ஆபரணங்கள், இடுப்புப் பட்டி போன்றவற்றை உடனடியாக நீக்குங்கள். கழற்றுவதற்கு சிரமமாக இருப்பின் வெட்டி அகற்றுங்கள். ஏனெனில் எரிகாயங்கள் வேகமாக வீங்கக்கூடி யவை. எனவே பின்னர் அகற்றுவது சிரமமாகிவிடும்.

எரிந்த காயப்பகுதிகளை வலி குறையும்வரை ஓடும் குளிர்நீரின் கீழ் பிடிக்கவும். அல்லது குளிர் நீரினுள் அமிழ்த்தவும் (ஐஸ் தண்ணியோ, ஐஸ்கட்டியோ பாவிக்க வேண்டாம்) ஏனெனில் அவை உடல் வெப்பநிலையைக் குறைத்து மேலும் பாதிப்பை ஏற்படுத்தும்.

பின்னர் சுத்தமான தொற்று நீக்கிய ஒட்டாத துணியினால் காயத்தை கட்டுப்போடுங்கள். பட்டர், கிறீம்களை எரிகாயங்களில் போடவேண்டாம். கொப்பளங்கள் ஏற்பட்டிருப்பின் அவற்றை உடைக்க வேண்டாம். ஏனெனில் இவை எரிகாயத்தில் கிருமித்தொற்றை ஏற்படுத்திவிடும். தாங்கமுடியாத வலியிருப்பின் பனடோல் அல்லது புரூபன் மாத்திரையைக் கொடுங்கள். சிறுவர்களாக இருப்பின் மருத்துவ ஆலோசனையின்றி மாத்திரை கொடுக்க வேண்டாம்.



ஏரிகாயம் பெரியதாயிருப்பின் ஆழமானதாயிருப்பின் வெப்ப இழப்பால் ஏற்படும் நரம்புமண்டல அதிர்ச்சியை **(Shock)** தவிர்ப்பதற்கு எரிகாயத்துக்குள்ளானவரை மட்டமான தரையில் படுக்கச் செய்து பாதங்களை உயர்த்தி வைப்பதுடன், தடிப்பான போர்வையால் போர்த்தி வைத்திருங்கள்.

இயலுமானால் எரிகாயத்தை இதய மட்டத்திற்கு மேல் வைத்திருத்தல் சிறந்தது. வைத்திய உதவியை நாடுவது அவசியம். ஏரிகாயம் மிகவும் ஆழமானதாயிருப்பின் உடனடியாக அவசரசிகிச்சை பிரிவுக்கு அறிவிக்க வேண்டும். அத்துடன் நீரினால் கழுவுவதையும் தவிர்த்தல் வேண்டும்.

சிறிய தீக்காயமாக இருப்பினும், காய்ச்சல் இருப்பின் அல்லது எரிகாயம் சிவந்து, வீங்கி காணப்படின் அல்லது எரிகாயம் தொற்றுக்குள்ளாகியிருப்பின் அல்லது எரிகாயத்திலிருந்து நீர் வடிந்தால் வைத்தியரை நாடுவது அவசியம்.

சுவாசப்பகுதி எரிந்திருப்பின் தரையில் படுக்க வைத்திருக்கும் பொழுது தலையின் கீழ் தலையணையோ, வேறு பொருட்களோ வைக்க வேண்டாம். ஏனெனில் இவை சுவாசப்பாதையை அடைத்துவிடலாம்.

முகத்தில் எரிகாயம் ஏற்பட்டிருப்பின் அந்த நபரை இருத்தி வைத்திருக்க வேண்டும். அவசர சிகிச்சை உதவி கிடைக்கும் வரை நாடித்துடிப்பை, சுவாசத்தை கண்காணித்துக் கொண்டிருக்க வேண்டும்.

இரசாயனப் பொருட்களினால் ஏற்பட்ட எரிகாயமாக இருப்பின் நீரினால் கழுவும்போது உடலின் ஏனைய பகுதிகளுக்கு அவ் இரசாயனம் படாமல் பார்த்துக் கொள்ளுங்கள். அமிலத்தை காரத்தாலோ, காரத்தை அமிலத்தாலோ நடுநிலைப் படுத்த முயலவேண்டாம். இது மேலும் பாதிப்பை ஏற்படுத்திவிடும்.

இரசாயனப்பொருளால் கண்பகுதி பாதிக்கப்பட்டிருப்பின் கண்ணை அகலத்திறந்து குளிர்ந்த ஓடும்நீரின் கீழ் பிடிக்கவும். Contact lence கண்ணிணுள் வைத்திருப்பின் அவற்றை ஓ[illegible]







நீரினாலேயே அகற்றுங்கள். கைகளை பாவிக்க வேண்டாம். கண்ணின் மீது துணியால் கட்ட வேண்டாம்.

வைத்தியர். துஷ்யந்தினி ஆனந்தலிங்கம்

மருத்துவம், ஆரோக்கியம், சுற்றாடல், பாதுகாப்பு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் இந்த வைத்தியச்சுடர் சம்பந்தமானஉங்கள் அபிப்பிராயங்களையும் 0768363858 என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org